விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 மாசி 28 செவ்வாய்க்கிழமை (12.03.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 083

வரட்சி நிலவிய மாவட்டங்களில்

## நுண்கடன்களை பெற்ற 45 ஆயிரம் பேருக்கு தள்ளுபடி

### இராஜாங்க அமைச்சர் இரான் விக்ரமரட்ண

(கொழும்பு)

வரட்சி நிலவிய மாவட்டங்களில் நுண்கடன்களை பெற்ற சுமார் 45 ஆயிரம் பேரின் கடன்களை தள்ளுபடி செய்ய தீர்மானித்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் இரான் விக்ரமரட்ண தெரிவித்துள்ளார்.

தொழில் முயற்சியாளர்களுக்கு முக்கியத்துவம் வழங்கி சமூகத்தை வலுப்படுத்துதல் மற்றும் வறுமைக்கு உட்பட்டவர்களை பாதுகாக்கும் வரவு - செலவுத் திட்டம் இம்முறை சமர்ப்பிக்கப்பட்டிருப் 23

ஐ.நாவுக்கு பிரதிநிதிகள் அனுப்பும் ஜனாதிபதியின் நடவடிக்கையால்

## ஜெனிவாவில் இலங்கை மீதான நெருக்குதல்கள் குறைய வாய்ப்பு

### தேசிய சமாதானப் பேரவையின் பணிப்பாளர் ஜெஹான் பெரேரா



(கொழும்பு)

ஐ.நாவுக்கு பிரதிநிதிகளை அனுப்பும் ஜனாதிபதி மைத்திரியின் நடவடிக்கையால் ஜெனிவாவில் இலங்கை மீதான நெருக்குதல்கள் குறைவாய்ப்பு இருப்பதாக தேசிய சமாதான பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் 23

தமிழர்களின் அதிகாரப் பகிர்வு தொடர்பான

# அரசியல் தீர்வுக்கு ஜே.வி.பி ஆதரவு

## இரா.சம்பந்தன் தெரிவிப்பு



(கொழும்பு)

தமிழர்களின் அதிகாரப் பகிர்வு தொடர்பான கூட்டமைப்பின் நிலைப்பாட்டுக்கு மக்கள் விடுதலை முன்னணி ஆதரவு தெரிவித்துள்ளதாக கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். (23-ம் பக்கம்...)

## இனப்பிரச்சினைக்கான தீர்வில் நம்பிக்கை இழக்கவில்லை

### பாராளுமன்றில் மாவை சேனாதிராசா

(கொழும்பு)

அரசியலமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தை மீறி ஜனாதிபதி எடுத்த நடவடிக்கைகள் காரணமாக தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு இல்லாமல் செய்யப்பட்டது. நாடு நெருக்கடியை சந்தித்தது. ஆனால் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக நாம் இன்னும் நம்பிக்கை இழக்கவில்லை 23

## ஐ.நா எச்சரித்தும் இலங்கையின் நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை!

(கொழும்பு)

உள்நாட்டு விவகாரத்தை சுயமாகவே தீர்த்துக்கொள்வது என்ற இலங்கையின் நிலைப்பாட்டில் மாற்றமில்லை என்று அரசாங்க உயர் மட்ட வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 40வது கூட்ட தொடர் இடம்பெற்று வரும் நிலையில், மனித உரிமைகள் ஆணையாளர், இலங்கையை கடுமையாக விமர்சித்து அறிக்கை வெளியிட்டுள்ளார். 23

காணாமல் போனோர் விடயத்தில்

## அரசாங்கம் அதிக கவனம் செலுத்த வேண்டும்- அமீர் அலி

(கொழும்பு)

வடக்கு கிழக்கில் காணாமல் போனோர் விடயத்தில் அரசாங்கம் அதிக அக்கறையுடன் செயற்பட வேண்டும் என கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் அமீர் அலி தெரிவித்துள்ளார். 02

11 ஆயிரம் ரூபாயினால்

## தனிநபர் மீதான வரி அதிகரிப்பு

### ஜே.வி.பி தெரிவிப்பு

(கொழும்பு)

வரவு-செலவுத் திட்டத்தினூடாக தனி நபர் மீதான வரி 11ஆயிரம் ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அரசாங்கத்தின் செலவை ஈடுசெய்ய மேலும் இரண்டு இலட்சம் கோடி கடன் பெறவேண்டும். இதன் மூலம் அரசாங்கம் 24

## ரூபாய் 180 கோடி பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருள் மீட்பு

### சந்தேகத்தில் இருவர் கைது

(கொழும்பு)

மொறட்டுவ, ராவதாவத்த பிரதேசத்திலுள்ள வீடு ஒன்றிலிருந்து சுமார் 180 கோடி ரூபாய் பெறுமதியான 150 கிலோ கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது. டுபாயில் கைது செய்யப்பட்ட பாதாள உலகத் தலைவர் மகந்துரே மதூஷின் நெருங்கிய சகாவின் வீட்டிலிருந்தே இந்தப் பெரும் தொகை ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டன.

சந்தேகத்தின் பேரில் இருவர் சிறப்பு அதிரடிப்படையி 24



## ஒழுக்கமான சமூகத்தை ஆசிரியர்களாலேயே உருவாக்க முடியும்

### ஜனாதிபதி மைத்திரி

(கொழும்பு)

அன்று முதல் எமது நாட்டில் பிள்ளைகளின் ஒழுக்கமானது பாடசாலைகளினால் பேணப்பட்டு வருகின்ற போதிலும் இன்று மனித உரிமைகள் என்ற விடயம் முறையின்றி ஆசிரியர்களின் செயற்பாடுகளில் தலையீடு செய்வதனால் சிறந்தவொரு எதிர்கால தலை 23

11 இளைஞர்கள் கொழும்பில் கடத்தல்

## முன்னாள் கடற்படைத் தளபதியிடம் சி.ஐ.டி 8 மணிநேரம் வாக்குமூலம்

(கொழும்பு)

கொழும்பில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பில்முன்னாள் கடற்படைத் தளபதி ரியல் அட்மிரல் வசந்த கரன்னகொடவிடம் நேற்று8 மணிநேரம் தொடர் விசாரணையை நடத்திய குற்றப் புலனாய்வுப் பிரிவினர் (சி.ஐ.டி) அவரிடம் 24



## தேசிய உற்பத்தி நாட்டில் வீழ்ச்சி

### - மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

நாட்டின் தேசிய உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மாத்தறை பொல்ஹேன பகுதியில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளி 24

## தேர்தல் ஆணைக்குழுவின் புதிய பணிப்பாளர் நாயகம்

### ஸ்ரீரத்நாயக்க தமது கடமைகளை பொறுப்பேற்பு

(கொழும்பு)


தேர்தல் ஆணைக்குழுவின் புதிய பணிப்பாளர் நாயகமான சமன் ஸ்ரீரத்நாயக்க தனது கடமைகளை பொறுப்பேற்றுள்ளார்.

முன்னாள் பணிப்பாளர் நாயகம் எம்.எம்.மொஹமட் ஓய்வு பெற்றுள்ளமையினைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள வெற்றிடத்திற்கு சமன் ஸ்ரீரத்நாயக்க நியமிக்கப்பட்டிருந்தார்.

இந்தநிலையிலேயே அவர் நேற்று திங்கட்கிழமை தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு 24

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும், நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில் 25 . 04 . 1936



ஆண்டவன் அடியில் 11 . 02 . 2019

கடந்த 11.02.2019 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம்

## அமரர் சின்னத்தம்பி கந்தசாமி

அவர்களின் இறுதிக் கிரியைகளில் நேரில் கலந்து கொண்டும் ஏனைய வழிகளிலும் அனுதாபங்களை பகிர்ந்து கொண்டவர்களுக்கும் அனைத்து வழிகளிலும் உதவிகளை நல்கியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த (10.03.2019) ஞாயிற்றுக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் இடம்பெற்றுள்ளது. தொடர்ந்து நாளை 13.03.2019 புதன்கிழமை வீட்டுக்கிரியையும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நடைபெற்று அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.)

தகவல் : குடும்பத்தினர்
7ஆம் வட்டாரம் குமுழமுனை, முல்லைத்தீவு.
077 854 3887, 077 497 2971, 077 530 1966

(7903)

## அரசாங்கம்...

வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் பங்கேற்று நேற்று திங்கட்கிழமை பாராளுமன்றத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன் போது கருத்து வெளியிட்ட அவர், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு மாதாந்தம் ஆறாயிரம் ரூபாய் வழங்கப்படவுள்ளதாகவரவு செலவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை நான் வரவேற்கின்றேன்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு ஒரு தீர்வு கிடைக்கும் வரை இந்த நிதி வழங்கப்படவுள்ளது. இது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு ஒரு நம்பிக்கையளிக்கும்விடயமாக காணப்படுகின்றது.

எனினும் இந்த நிதி போதுமானதாக இல்லை. இந்த நிதி அதிகரிக்கப்பட வேண்டும். இது தொடர்பாக நிதியமைச்சரும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கவனம் செலுத்த வேண்டும்.

அத்துடன், காணாமல் போனோர் விடயத்தில் அரசாங்கம் அதிக அக்கறையுடன் செயற்பட வேண்டும் எனகுறிப்பிட்டுள்ளார். (ம-3)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை பட்டப்பின் கல்வி டிப்ளோமா (உள்வாரி) பகுதிநேரம் - 2019

16.03.2019 அன்று ஆரம்பிக்கப்படவிருந்த மேற்படி கற்கை நெறியானது தவிர்க்கமுடியாத காரணத்தினால் 17.03.2019 அன்று ஆரம்பமாகும் என்பதனை அறியத்தருகின்றோம். ஏற்கனவே குறிப்பிட்டதைப் போன்று கலைப்பீட விரிவுரைம்ண்டபத்திற்கு (409) மாணவர்கள் காலை 9.00 மணிக்கு சமுகம் தருமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

- பதிவாளர்

(C-5755)

## மணிவிழா வாழ்த்து



சாணக்கிய அதிபர்
திரு.சின்னத்தம்பி பாலகிருஷ்ணன்
[SLPS-I, S.P Trd (Maths, B.Ed, DSM, M.Ed)]
(கிளி/பளை மத்திய கல்லூரி)

*41 ஆண்டுகள் கல்விப் பணியாற்றி 22.02.2019 அன்று மணிவிழாக் கண்ட எமதுகோட்டத்தைச் சேர்ந்த சாணக்கிய அதிபர் திரு.சின்னத்தம்பி பால்கிருஷ்ணன் அவர்களின் ஓய்வுக்காலம் சீரும் சிறப்புடன் விளங்க வாழ்த்துகின்றோம்.*


வாழ்த்துவோர் : கோட்டக்கல்வி அதிகாரி - பளை,
அதிபர்கள் - பளைக்கோட்டம் பளை

(C-5751)

# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை நடராசா (லிங்கம்)

*தோற்றம் : 02.05.1950 மறைவு : 11.03.2019*



*வடமராட்சி கிழக்கு வத்திராயன் தெற்கைப் பிறப்பிடமாகவும் மருதங்கேணி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை நடராசா (லிங்கம்) 11.03.2019 திங்கட்கிழமை காலமானார்.*

*அன்னார் வத்திராயன் தெற்கைச் சேர்ந்த வேலுப்பிள்ளை - இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மகனும், மருதங்கேணி தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னையா - சின்னப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், சந்திரலீலா (சந்திரா) வின் அன்புக் கணவரும், மாலினி (சுவிஸ்), ஜெயராசா (மருதங்கேணி) ஆகியோரின் அன்புத் தந்தையும், உதயகுமார் (சுவிஸ்), சாந்தினி (ஆசிரியர் - யா/வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம்) ஆகியோரின் மாமனாரும், சாரங்கன் (சுவிஸ்), சாருஷா (சுவிஸ்) ஆகியோரின் அம்மப்பாவும், சாஜேஸ் (மாணவன் - யா/மருதங்கேணி இ.வி.) இன் அப்பப்பாவும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.03.2019) புதன்கிழமை காலை 8.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணிக்கு மருதங்கேணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.*

*இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.*

(C-5756)

நாவலடி வீதி, மருதங்கேணி தெற்கு, தாளையடி.
மகன் – 077 645 0353
தகவல் : குடும்பத்தினர்

# வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை
## பகிரங்க ஏல விற்பனை

எமது அலுவலகத்தில் பாவிக்கப்பட்ட பொருட்கள் விற்கப்படவுள்ளன. அப்பொருட்களை கொள்வனவு செய்ய விரும்புவோர் ஏலத்தில் பங்குபற்றி பொருட்களிற்கான பணத்தை செலுத்திப் பற்றுச்சீட்டை பெற்று பொருட்களை உடன் எடுத்துசெல்லுமாறுஅன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

ஏலவிற்பனைநடைபெறும் இடம் : வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை
திகதி : 15.03.2019 காலை 10.00 மணி
ஏல விற்பனை பொருட்களை 12.03.2019 - 15.03.2019 திகதிவரைபார்வையிடலாம்

### ஏலம் விடப்படவுள்ளபொருட்கள்

| | | |
|---|---|---|
| 1) | Monitor | - 03 |
| 2) | C. P.U | - 03 |
| 3) | Keyboard | - 03 |
| 4) | Digital Camera ( Sony) | - 02 |
| 5) | Fax Machine Cannon | - 01 |
| 6) | Toshiba Photo copy machine | - 01 |
| 7) | Water Pump ( Villious ) | - 02 |
| 8) | Air conditioner | - 02 |
| 9) | Sprayer | - 01 |
| 10) | CPU Casing | - 02 |
| 11) | சவள் | - 06 |
| 12) | Rack (றாக்கை) | - 01 |
| 13) | உருக்குகண்ணாடிஅலுமாரி | - 01 |
| 14) | கல்லுரல் | - 01 |
| 15) | இரும்புலக்கை | - 01 |
| 16) | இறாக்கை 10x4 | - 01 |
| 17) | பத்திரிகைவாசிப்புமேசை | - 01 |
| 18) | பாவிக்கப்பட்டவாகனபற்றிகள் | - 10 |
| 19) | உழவு இயந்திரத்தின் பெரிய ரயர்கள் | - 02 |
| 20) | பெரிய ரயருக்கான றிம் | - 01 |
| 21) | வெற்று மருந்து முழுப்போத்தல்கள் | - 1550 |
| 22) | பாவிக்கப்பட்ட உசா பான் | - 21 |
| 23) | பழைய ரியுப்லைற் செற் | - 40 |
| 24) | உழவு இயந்திரப்பெட்டி (அடித்தட்டு) | |
| 25) | பெருமரங்கள் விறகுகள் | |

த.ஐங்கரன்
தவிசாளர் -வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை

(C-5750)

## மன்னார் மனிதப்புதைகுழி விவகாரம்

# ‘எம்மை குற்றம்சாட்டியவர்கள் வாயடைத்துப் போயுள்ளனர்’



## இராணுவத் தளபதி மகேஷ் மகிழ்ச்சி

(கொழும்பு)

**மன்னார் மனிதப் புதைகுழி விவகாரத்தில் எந்தவொரு ஆதாரமும் இல்லாமல் இராணுவத்தைக் குற்றம்சாட்ட முனைந்தவர்கள் வாயடைத்துப் போயுள்ளனர் என்று இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் மகேஷ் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.**

மன்னார் மனிதப் புதைகுழியில் கண்டுபிடிக்கப்பட்ட எலும்புக்கூடுகளின் மாதிரிகள் தொடர்பாக புளோரிடாவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், எலும்புக்கூடுகள் பல நூற்றாண்டுகள் பழைமையானவை என்று தெரிய வந்ததை அடுத்தே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

“மன்னார் மனிதப் புதைகுழிக்கு இலங்கை இராணுவமே பொறுப்பு என்று அனைத்துலக சமூகத்திடம் கூறுவதற்கு பலரும் தயங்கவில்லை.

எல்லாவற்றுக்கும் இலங்கை இராணுவம் மீது குற்றம்சாட்டுகின்ற ஒரு வழக்கம் நீண்டகாலமாகவே இருந்து வருகிறது.

அனைத்துப் தரப்பினரும், ஏனையவர்கள் மீது குற்றம்சாட்டுவதற்கு முன்னதாக, விசாரணைகளை நடத்தி, சாட்சியங்களைப் பெற்று உறுதி செய்து கொள்ள வேண்டும்” என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## யுத்தகால இழப்பு தொடர்பாக பிரேரணை

### கூட்டமைப்பு வலியுறுத்து

(கொழும்பு)

யுத்தத்தால் வடக்கு- கிழக்கில் ஏற்பட்ட இழப்பு தொடர்பாக நாடாளுமன்றில் பிரேரணை ஒன்று நிறைவேற்றப்பட வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் நாடாளுமன்றில் நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்றது. இதில் பங்கேற்று உரையாற்றிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா இவ்விடயத்தை வலியுறுத்தினார்.

போரால் பாதிக்கப்பட்டவர் யாராக இருந்தாலும் சொத்து, உயிரிழப்பு என்பன சர்வதேச மற்றும் உள்நாட்டில் நிபுணத்துவம் வாய்ந்தவர்களால் உரிய முறையில் மதிப்பீடு செய்யப்பட்டு, பிரேரணை நிறைவேற்றப்பட வேண்டுமென அவர் இதன் போது வலியுறுத்தினார்.

நிதியமைச்சர் அல்லது பிரதமர் இந்த பிரேரணையை நிறைவேற்ற வேண்டுமென அவர் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை, கடந்த 2018 ஆம் ஆண்டு வடக்கு- கிழக்கிற்கு ஒதுக்கப்பட்ட நிதி முழுமையாக நடைமுறைக்கு வரவில்லையென குறிப்பிட்ட மாவை, பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் தொடர்பாக அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுப்பது அவசியமெனவும் வலியுறுத்தினார். (இ-7)

## தேர்தல் தடைப்பட்டுள்ளமைக்கு முக்கிய காரணம் கூட்டமைப்பே

(கொழும்பு)



மாகாணசபைத் தேர்தல்கள் தடைப்பட்டுள்ளமைக்கு முக்கியமான பங்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு உண்டு என்பதால், இவ்விடயம் தொடர்பில் தமது மக்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டிய கடப்பாடு அவர்களுக்குள்ளது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.


நெலும் மாவத்தையிலுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அலுவலகத்தில் நேற்று ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புதிய தேர்தல் முறைமைக்கு ஆதரவு வழங்கியிருக்காவிடின் இன்று மாகாண சபைத் தேர்தல்களே இல்லாத இத்தகையதொரு நிலை ஏற்பட்டிருக்காது. வடக்கில் தற்போது மாகாணசபையொன்று இருந்திருக்கும் என்பதுடன், அதிகாரங்களும் காணப்பட்டிருக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## 4 கிலோ 43 கிராம் நிறையுடைய

# ரூ.2 கோடி பெறுமதியான தங்க வளையல்களுடன் வெளிநாட்டு விமான சேவை அதிகாரி நேற்றுக்கைது

(கொழும்பு)



சட்ட விரோதமான முறையில் தங்க நகைகளை எடுத்து வர முற்பட்ட வெளிநாட்டு விமான சேவை ஒன்றில் கடமையாற்றும் இலங்கையர் ஒருவர் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இரத்தினபுரி பகுதியை சேர்ந்த 28 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முற்பகல் 10 மணியளவில் டோஹாவில் இருந்து வருகை தந்த கட்டார் விமான சேவைக்கு சொந்தமான QR 664 என்ற விமானத்தின் மூலம் குறித்த நபர் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

குறித்த நபரிடமிருந்து இரண்டு கோடி ரூபாய் பெறுமதியான 4 கிலோ 43 கிராம் நிறையுடைய தங்க வளையல்கள் 423 கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனநாயகத்தைப் பாதுகாத்தது

### ஐ.தே.க.பாராட்டு பத்திரம்

(கொழும்பு)



தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஜனநாயகத்தை பாதுகாக்க பெரிதும் உதவியது என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

வரவு-செலவுத்திட்டம் மீதான விவாதத்தில் பங்கேற்று நேற்றுத் திங்கட்கிழமை நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போதே ஐக்கிய தேசியக்கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்துலா மஹ்ரூப் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

“நாட்டில் ஜனநாயகம் கேள்விக்குறியான சந்தர்ப்பத்தில் ஜனநாயகத்தை உறுதிப்படுத்த பல கட்சிகள் போராடின.

குறிப்பாக, சிறுபான்மை கட்சிகளான தமிழ் தேசிய கூட்டமைப்பு, தமிழ் முற்போக்கு கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் கடுமையாக போராடின. நீதிமன்றம் வரை சென்று ஜனநாயகத்தை உறுதிப்படுத்தின.

இதற்காக நாம் தமிழ் தேசிய கூட்டமைப்பு உள்ளிட்ட சிறுபான்மையின கட்சிகளுக்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம். அதேபோன்று சிறுபான்மையின மக்களின் ஆதரவின்றி எவராலும் ஜனாதிபதியாக முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# விமலுக்கு வெட்கமில்லையா? நாடாளுமன்றில் கபீர் சீற்றம்

(கொழும்பு)

எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவிற்கு வெட்கம் இல்லையா? என அமைச்சர் கபீர் ஹாசிம்கேள்வி எழுப்பியுள்ளார்.

வரவு-செலவுத்திட்டம் மீதான விவாதத்தில் நேற்று பங்கேற்று உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், “கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் அமைச்சராக இருந்த விமல் வீரவன்ச தொடர்ச்சியாக ஊழல் மோசடியில் ஈடுபட்டார்.

தற்போது அவர் எதிர்கட்சியிலிருந்து கொண்டு எமக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றார். அவருக்கு வெட்கமில்லையா. மக்களை ஏமாற்றும் வகையிலேயே அவர் இவ்வாறு போலியான முறையில் கருத்துக்களை கூறி வருகின்றார்.

பொது ஜனபெரமுன என்பது புதிய போத்தலில் உள்ள பழைய வைன் போன்றது. மோசடிகளுடன் தொடர்புடைய பழையவர்கள் இணைந்தே பொதுஜன பெரமுன என்ற புதிய கட்சியை உருவாக்கியுள்ளனர்.

கடந்த 10 வருடங்களாக நாட்டை கட்டியெழுப்பாத முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய எதிர்க்கட்சி தலைவருமான மகிந்த ராஜபக்ஷ நாட்டை மீண்டும் தன்னிடம் ஒப்படைக்குமாறு கோருகின்றார்.

கடந்த 10 வருடங்களாக நாட்டை கட்டியெழுப்பாத மகிந்த ராஜபக்ஷவிடம் மீண்டும் நாட்டைகையளிக்க முடியுமா?” எனவும் அமைச்சர் கேள்வி எழுப்பியுள்ளார். (இ-7)

# ரெய்லர் இரட்டைச் சதம்

## நியூசிலாந்து ஆதிக்கம்



இரட்டைச்சதம் அடித்த நியூசிலாந்தின் ரொஸ் ரெய்லர்

பங்களாதேசுக்கு எதிரான 2ஆவது டெஸ்டில் ரொஸ் ரெய்லர் இரட்டை சதமடித்து கைகொடுக்க முதல் இன்னிங்சில் நியூசிலாந்து அணி 432 ஓட்டங்களைக் குவித்தது.

நியூசிலாந்து - பங்களாதேஷ் அணிகள் மோதும் 2ஆவது டெஸ்ட் வெலிங்டனில் நடக்கிறது.

முதலிரு நாட்களும் மழையால் கழுவப்பட்ட நிலையில், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி களத் தடுப்பை தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி தனது முதல் இன்னிங்சில் சகல விக்கெட்டுக் களையும் இழந்து 211 ஓட்டங்களை எடுத்தது.

நேற்று முன்தினம் 3ஆம் நாள் ஆட்டநேர நிறைவில், நியூசிலாந்து அணி 2 விக்கெட்டுக்களை இழந்து 38 ஓட்டங்களை எடுத்திருந்தது. வில்லியம்சன் (10), ரொஸ் ரெய்லர் (19) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்றைய நான்காம் நாள் ஆட்டத்தில் முதல் இன்னிங்சை தொடர்ந்த நியூசிலாந்து அணிக்கு அணித் தலைவர் கேன் வில்லியம்சன் (74) அரைச்சதம் கடந்து நம்பிக்கை அளித்தார். 'பின் இணைந்த ரொஸ் டெய்லர், ஹென்றி நிக்கோல்ஸ் ஜோடி பங்களாதேஷ் அணியின் பந்து வீச்சை அடித்து நொருக்கியது. பொறுப்பாக ஆடிய நிக்கோல்ஸ் சதம் கடந்தார். நான்காவது விக்கெட்டுக்காக 216 ஓட்டங்களைச் சேர்த்தபோது நிக்கோல்ஸ் (107) ஆட்டமிழந்தார்.

மறுமுனையில் அசத்திய ரெய்லர் (200) இரட்டை சதமடித்தார். முதல் இன்னிங்சில் நியூசிலாந்து அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 432 ஓட்டங்களை குவித்து ஆட்டத்தை இடை நிறுத்தியது. கிராண்ட்ஹோம் (23) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

**போல்ட் அசத்தல்**

பின், 2ஆவது இன்னிங்சை ஆரம்பித்த பங்களாதேஷ் அணிக்கு போல்ட் தொல்லை கொடுத்தார். இவரது 'வேகத்தில்' தமிம் இக்பால் (4), மொமினுல் (10) ஆட்டமிழந்தனர். ஷத்மன் இஸ்லாம் (29) நிலைக்கவில்லை.

இந்நிலையில் நேற்றைய நான்காம் நாள் ஆட்டநேர நிறைவில், பங்களாதேஷ் அணி 2ஆவது இன்னிங்சில் 3 விக்கெட்டுக்களை இழந்து 80 ஓட்டங்கள் எடுத்து, 141 ஓட்டங்களால் பின்தங்கி இருந்தது. மொஹமட் மிதுன் (25), சௌமியா சர்கார் (12) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் நியூசிலாந்து சார்பில் போல்ட் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

**வில்லியம்சன் காயம்**

மூன்றாம் நாள் ஆட்டத்தில் 'களத்தடுப்பு' செய்த போது நியூசிலாந்து அணித் தலைவர் கேன் வில்லியம்சனின் இடது தோள்பட்டையில் காயம் ஏற்பட்டது. இதனால் இவர், 4ஆம் நாள் ஆட்டத்தில் 'துடுப்பாட்டம்' செய்த போது இரண்டு முறை மருத்துவர் உதவியை நாடினார். அரைச்சதம் கடந்து 'பெவிலியன்' திரும்பிய இவருக்கு வலி அதிகமாக, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

**18 சதம்**

அபாரமாக ஆடிய ரொஸ் ரெய்லர், தனது 18ஆவது டெஸ்ட் சதத்தை (92 போட்டி) பதிவு செய்தார். இதன்மூலம் இவர், டெஸ்ட் அரங்கில் அதிகசதமடித்த நியூசிலாந்து துடுப் பாட்ட வீரர்கள் பட்டியலில் முன்னாள் வீரர் மார்டின் குரோவை (17 சதம், 77 போட்டி) முந்தி 2வது இடம் பிடித்தார். முதலிடத்தில் கேன் வில்லியம்சன் (20 சதம், 72 போட்டி) உள்ளார்.

**மூன்று இரட்டை சதம்**

வெலிங்டன் டெஸ்டில் பொறுப்பாக ஆடிய நியூசிலாந்தின் ரொஸ் ரெய்லர் (200), டெஸ்ட் அரங்கில் 3ஆவது இரட்டை சதமடித்தார். இதற்கு முன், மே.தீவுகள் (217* ஓட்., 2013, இடம்: டுனிடின்), அவுஸ்திரேலியா (290 ஓட்., 2015, இடம்: பெர்த்) அணிகளுக்கு எதிராக இம்மைல் கல்லை எட்டியிருந்தார்.

# தொடரை வென்றது தெ.ஆ.



சதமடித்த பூரிப்பில் தென்னாபிரிக்காவின் கொக்

மழையால் பாதிக்கப்பட்ட டர்பன் ஒருநாள் போட்டியில் 'டக்வொர்த் லீவிஸ்' முறையில் தென்னாபிரிக்க அணி 71 ஓட்டங்கள் வித்தியாசத்தில் 'வெற்றி பெற்றது. இதன்மூலம் 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை தென்னாபிரிக்க அணி 3-0 எனக் கைப்பற்றி முன்னிலை பெற்றது.

தென்னாபிரிக்கா, இலங்கை அணிகள் மோதிய 3ஆவது ஒருநாள் போட்டி டர்பனில் நடந்தது.

நாணயச்சுழற்சியில் வென்ற இலங்கை அணித் தலைவர் லசித் மலிங்க களத் தடுப்பை தேர்வு செய்தார். தென்னபிரிக்க அணிக்கு ரீஜா ஹென்டிரிக்ஸ் (4) ஏமாற்றினார். அணித் தலைவர் டு பிளசி (36) நிலைக்கவில்லை. அபாரமாக ஆடிய குயின் ரன் டி கொக் (121) சதம் கடந்தார். பொறுப்பாக ஆடிய வான் டெர் துசன் (50) அரைசதமடித்தார்.

50 ஓவர்கள் நிறைவில் தென்னாபிரிக்க அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 331 ஓட்டங்களை எடுத்தது.

சவாலான இலக்கை விரட்டிய இலங்கை அணிக்கு நிரோஷன் டிக்வெல (2), அவிஷ்கா பெர்ணான்டோ (23) நிலைக்கவில்லை. இலங்கை அணி 2 விக்கெட்டுக்களை இழந்து 75 ஓட்டங்களை எடுத்திருந்தபோது மழையால் ஆட்டம் சிறிது நேரம் தடைப்பட்டது.

பின் மீண்டும் போட்டி தொடங்கியது. ஓஷாடா பெர்ணான்டோ (25), குசல் மெண்டிஸ் (41) ஆறுதல் கொடுத்தனர்.

இலங்கை அணி 24 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 121 ஓட்டங்களை எடுத்திருந்தபோது மீண்டும் மழை குறுக்கிட, போட்டியை தொடர முடியாத நிலை ஏற்பட்டது.

இதனையடுத்து 'டக்வொர்த் லீவிஸ்' முறைப்படி இலங்கை 24 ஓவரில் 193 ஓட்டங்கள் எடுத்திருக்க வேண்டும். ஆனால் 71 ஓட்டங்களால் பின்தங்கி இருந்த இலங்கை அணி தோல்வியடைந்தது.

# கிண்ணம் வென்றது இங்கிலாந்து



மே.தீவுகளுக்கு எதிரான 3வது 'ரி20' போட்டியில் அசத்திய இங்கிலாந்து அணி 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் 'ஹட்ரிக்' வெற்றியை பதிவு செய்ததுடன் தொடரைக் கைப்பற்றி கிண்ணத்தை சுவீகரித்தது.

வேகத்தில் மிரட்டிய இங்கிலாந்தின் டேவிட் வில்லி 7 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 4 விக்கெட்டுக்களை அள்ளினார்.

மே.தீவுகள் - இங்கிலாந்து அணிகள் மோதிய 3ஆவது 'ரி20' போட்டி செயின்ட் கிட்ஸ் நகரில் நடந்தது.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பாட்டம் செய்த மே.தீவுகள் அணிக்கு டேவிட் வில்லி தொல்லை கொடுத்தார். இவரது 'வேகத்தில்' ஷேய் ஹோப் (0), ஷிம்ரான் ஹெட்மயர் (8), ஜோன் கம்ப்பெல் (11), டேரன் பிராவோ (4) ஆட்டமிழந்தனர். அணித் தலைவர் ஹோல்டர் (11), நிக்கோலஸ் பூரன் (11), பேபியன் அலன் (7), கார்லஸ் பிராத்வைட் (0) ஏமாற்றினர்.

மே.தீவுகள் 13 ஓவர்களில், 71 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் பறிகொடுத்தது.

பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பில் டேவிட் வில்லி 4, மார்க் வூட் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

சுலப இலக்கை விரட்டிய இங்கிலாந்து அணிக்கு அலெக்ஸ் ஹேல்ஸ் (20), ஜானி பேர்ஸ்டோவ் (37) ஜோடி நல்ல ஆரம்பம் கொடுத்தது.

இங்கிலாந்து அணி 10.3 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 72 ஓட்டங்கள் 8 விக்கெட்டுக்களால் இலகுவாக வெற்றி பெற்றது. ஜோ ரூட் (4), அணித் தலைவர் ஒய்ன் மோர்கன் (10) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இதனையடுத்து 3 போட்டிகள் கொண்ட 'ரி20' தொடரை இங்கிலாந்து அணி 3:0 என்ற கணக்கில் முழுமையாக கைப்பற்றி கிண்ணம் வென்றது.

போட்டியின் ஆட்ட நாயகன் தொடர் ஆட்ட நாயகன் விருதுகளை முறையே விருதை இங்கிலாந்தின் டேவிட் வில்லி, கிறிஸ் ஜோர்டன் கைப்பற்றினர்.


# 31ம் நாள் நினைவும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்



அமரர்

**தேவதாசன் நாகம்மா**

கடந்த 2019.02.13 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி அமரர் தேவதாசன் நாகம்மா அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (2019.03.13) புதன்கிழமை அதிகாலை 5 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று வீட்டுக்கிருத்திய கிரியைகள் (2019.03.15) வெள்ளிக்கிழமை மு.ப 10 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறவிருப்பதால் தாங்கள் அனைவரும் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் தங்களை அன்புடன் அழைப்பதோடு

அன்னாரின் இழப்பின்போது எமக்கு அனுதாபம் தெரிவித்து அனைத்து வழிகளிலும் உதவி புரிந்த அன்புள்ளங்கள் அனைவருக்கும் எங்கள் குடும்பம் சார்பில் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்

இல.83, ஜெயந்திநகர், கிளிநொச்சி.

(C-5754)

# 6 ஆம் ஆண்டு நினைவலைகள்



## அமரர் திருமதி.
# இரஞ்சினி மாதவன்

தோற்றம் : 09.11.1958
மறைவு : 16.02.2013

ஆண்டுகள் ஆறு ஓடி
மறைந்தாலும் உங்கள் அன்பு
முகம் எங்கள் நினைவுகளில்
நின்று மறையவில்லை
நாட்கள் வாரங்களாகி
வாரங்கள் மாதங்களாகி
மாதங்கள் வருடங்கள்
ஆகியும் உங்கள் நினைவுத்
துயரிலிருந்து மீண்டெழ
முடியவில்லை எங்களால்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
மட்டுவில் பன்றித் தலைச்சி
கண்ணகி அம்மன்
பாதங்களைத் தரிசிக்கின்றோம்.

(7938)

உங்கள் பிரிவால் வாடும்
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி

# வாகனத் தகடுகளைப் பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மோட்டார் போக்குவரத்து திணைக் களத்திற்கு கடந்த 7 ஆம் திகதி கிடைக்கப்பெற்ற வாகன இலக்கத்தகடுகளின் பட்டியல், யாழ்.மாவட்டத் திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் மாவட்ட செயலகத்திலுள்ள மாவட்ட மோட்டார் வாகனப் போக்கு வரத்து திணைக்களத்திலும் பொதுமக்களின் பார்வைக் காக அறிவிப்புப் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் மாவட்டச் செயலக இணையத்தளத்திலும் பார் வையிடலாம். இதற்கமைய புதிதாக வாகனங்களைப் பதிவு செய்த உரிமையா ளர்கள் வாகனப்பதிவுப் புத் தகம், தேசிய அடையாள அட்டை என்பவற்றையும் மாகாணங்களுக்கிடையே வாகன உரிமை மாற்றம் பெற்றவர்கள் மேற்குறித்த இரு ஆவணங்களுடன் பழைய வாகன இலக்கத்த கடுகள் மற்றும் வாகன இலக்கம் பொறித்த ஒட்டும் தாள் (sticker) என்பவற் றையும், யாழ்.மாவட்ட மோட் டார் வாகனப் போக்குவரத்து அலுவலகத்தில் சமர்ப்பித்து தங்கள் வாகனங்களுக்குரிய இலக்கத்தகடுகளைப் பெற் றுக் கொள்ளுமாறு யாழ். போக்குவரத்து திணைக்கள பிரதி ஆணையாளர் அறி வித்துள்ளார்.

வாகன இலக்கத்தகடுகள் விபரம் - 2019.03.07 (III)

AAG-5849, ABT-0955, ABT-0989, ABT-0989, ABT-1261, ABT-1277, ABT-1290, ABT-1499, ABT-1542, ABT-1560, ABT-1563, ABT-1659, ABT-1662, ABT-1798, ABT-1874, ABT-1877, ABT-9992, BAA-7692, BAB-8751, BAC-4471, BAJ-4102, BBN-5607, BCP-6879, BDM-2257, BDS-0606, BEU-9690, BFR-3900, BFZ-0564, BGA-9545, BGN-5334, BGR-1420, BGR-6047, BGU-2838, BHC-6687, BHL-5938, CAF-0762, CAN-2791, CAQ-2761, CAR- 5276, CAS-6915, CBB-6203, CBE-4263, DAB-1749, DAD-8277, DAE-9215, DAF-0767, GC-6423, GD-6643, GF-2169, GG-0003, GH-0187, GI-5383, GJ-8435, GO-6774, GQ-2153, GT-4289, GW-3831, GY-4309, HE-1641, HF-5282, HR-9885, HT-2558, HX-2286, JC-4510, JC-6285, JG-5900, JG-6805, JL-7586, JM-1083, JW-9969, JZ-8485, KA-0677, KB-8820, KG-0353, KH-2687, KH-8764, GI-1024, KI-5957, KL-6194, KL-6828, KN-2836, KP-3318, KQ-1290, KT-8204, KX-0132, KX-4895, LA-3848, LC-5299, LE-8581, LH-2410, LH-4593, LH-9703, LI-1788, LK-2963; MG-4958, MH-7209, MN-5601, MS-6647, MW-3301, NA-5715, NA-9576, NB-4724, NB-7517, NC-2425, PB-2894, PC-8947, PD-6014, PE-1011, PE-7210, PF-2932, PG-1789, PQ-8132, PR-8880, PU-8619, PV-8491, PW-7061, QA-8098, QD-6125, QD-8830, QE-7026, QE-9287, QF-0750, QF-6269, QF-8986, QF-9883, QI-5105, QI-7369, QJ-4265, QR-3515, QT-9389, QU-6183, RE-0765, UI-7292, UK-2848, UO-3637, VF-2186, WC-8380, WL-2555, WV-1145, XL-3402, XN-6985, XZ-4776, YC-9908, YG-7328, YN-9630, YR-3168, YW-4734. (5)

# அமெரிக்க ஹாவாய் சுவாமிகள் யாழ்ப்பாணத்திற்கு வருகை

(யாழ்ப்பாணம்)

அமெரிக்கா ஹாவாய்சைவ ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சாமிகளும் 55 அடியவர்களும் இம் மாதம் 16 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணம் வருகை தர வுள்ளனர். யாழ்ப்பாணத் துக்கு வருகைதரும் ஹாவாய் ஆதீன சுவாமி குழுவினர் பல ஆலயங்களுக்குச் சென்று பூஜை வழிபாடுகளில் கலந்து கொள்ளவுள்ளனர். 17ஆம் திகதி காலை நல்லூர் கந்த சுவாமி ஆலயத்திற்கும்மாலை கோப்பாய் சுப்பிரமுனிய சுவாமிகள தோட்டத்திற்கும் சென்று பூஜை வழிபாடு களில் கலந்து கொள்வர். நல்லூர் கந்தசுவாமி கோயி லில் இருந்து இம்மாதம் 18 ஆம் திகதி திங்கட்கிழமை கொழும்புத்துறை தவத்திரு சிவயோக சுவாமிகள் ஆச் சிரமத்துக்கு செல்லும் சுவா மிகள் குழுவினர் அன்று மாலை யாழ்ப்பாணம் சிவ த்தொண்டன் நிலையத்தில் இடம்பெறும் பூஜை வழிபாடு களில் கலந்து கொள்வர்.

எதிர்வரும் 23 ஆம் திகதி யாழ்ப்பாணத்திலி ருந்து மன்னார் நோக்கிச் செல்லும் இக் குழுவினர் திருக்கேதீஸ்வர ஆலயத் திற்கும் மறுநாள் ஞாயிற் றுக்கிழமை திருக்கோணே ஸ்வரர் ஆலயத்துக்கும் செல் வர். (5-272-10)

# பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யா/புலோலி புற்றளை மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணியளவில் பாடசாலை கேட்போர் கூடத்தில் நடை பெறவுள்ளது. (5)

# வீடுகள் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

கைதடி மத்தி விசேட தேவையுடையவர்களுக்கான வீடுகள் கையளிக்கும் வைப வம் கடந்த சனிக்கிழமை சாவகச்சேரி உதவிப் பிரதேச செயலாளர் க.வினோஜிதா தலைமையில் இடம்பெற் றது.கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தின் புலம்பெயர் உறவுகளால் அமைத்துக்கொடுக்கப்பட்ட 3 வீடுகளும் தலா 4 இலட் சம் ரூபாய் செலவில் அமை க்கப்பட்டன. (5-10-111)

# வருடாந்த மஹோற்சவம்

கோண்டாவில் வடக்கு அருள்மிகு மாவடி ஶ்ரீவீரபத் திரர் ஆலய வருடந்த மஹோ ற்சவம் இன்று 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் கொடியேற்றத் துடன் ஆரம்பமாகும். தொடர் ந்து 19 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை சப்பறத்திருவிழாவும் 20 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் தேர்த்திருவிழாவும் மறுநாள் 21 ஆம் திகதி வியாழக்கி ழமை முற்பகல் 10 மணி யளவில் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன.(5-7-102)

# மாணவர் பாராளுமன்றம்

(யாழ்ப்பாணம்)

யா/திருநெல்வேலி முத் துத்தம்பி மகாவித்தியாலயத் தின் மாணவர் பாராளுமன் றம் இன்று செவ்வாய்க்கி ழமை நண்பகல் 12 மணிய ளவில் அதிபர் இ.பசுபதீஸ் வரன் தலைமையில் நடை பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல் கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர் திருமதி. கோசலை மதன், சிறப்பு விருந்தினராக யாழ்.வலய சமூக விஞ்ஞான ஆசிரியர் ஆலோசகர் திருமதி.மரிய நாயகம் மேரி திரேசா ஆகி யோர் கலந்து கொள் வர். (5-10)



கோண்டாவில் கிழக்கு அமரர்கள் சுப்பிரமணியம் நகுலேஸ்வரி ஞாபகார்த்த குட்டிச்சுட்டி முன்பள்ளியின் விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது.



யா/கல்வயல் ஶ்ரீ சண்முகானந்த வித்தியாலய கல்விக் கண்காட்சி நிகழ்வு கடந்த வியாழக்கிழமை பாடசாலை அதிபர் மகிந்தன் தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் கலந்துகொண்டு கண்காட்சியை நாடாவெட்டி ஆரம்பித்து வைத்தார்.

# இராசி பலன்

**மீனம்:** மனதில் உற்சாகமும் மகிழ்ச் சியும் அதிகரிக்கும், பணத் தேவை எளிதில் பூர்த்தி யாகும், வாக்கு மேன்மை யுண்டு, தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள்.

**மேடம்:** நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடி வர லாம், வழிபாட்டால் நலம் காண வேண்டிய நாள், கற்பனை மிகுதியான நாள்

**இடபம்:** ஆதாயமில்லாத அலைச்சல் கள் ஏற்படலாம், வழிபாட் டில் ஆர்வம் காட்டுவீர்கள், மனதில் இனம் புரியாத சஞ் சலங்கள் தோன்றி மறையலாம்.

**மிதுனம்:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், வருமானம் மகிழ்ச்சிதரும் வகையில் அமையும், பொது வாழ் வில் புகழ் கூடும் நாள், நண்பர்கள் சந்திப்புண்டு.

**கும்பம்:** சமூகப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், வியாபார விருத்தியுண்டு, சுதந்திர மாகச் செயற்படும் நாள், உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு.

| | | | |
|---|---|---|---|
| | செவ் சந் | | ராகு |
| சூரி, புத | இராசி பலன் | | |
| சுக் | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>சுவாதி-விசாகம்<br>இரவு 12 மணிக்கு<br>இட-சந் | | |
| சனி, கேது | குரு | | |

**12.03.2019**

மாசி 28, செவ்வாய்க்கிழமை

சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு

சஷ்டி பின்னிரவு 1.40 மணிவரை

கார்த்திகை பின்னிரவு 1.57 மணிவரை

சுபநேரம் 10.52-12.22 மணிவரை

இராகுகாலம் 3.22-4.52 மணிவரை

கார்த்திகை விரதம், சஷ்டி விரதம்

சித்தாமிர்தம் வளவன்

**கடகம்:** திட்டமிட்ட காரியங்கள் அனைத்தும் சரியாக நடக்கும், தொழில் வளர்ச்சி மேலோ ங்கும், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், தூரதேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மகரம்:** நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், சுப செய்திகள் வந்து சேரலாம், வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்ய முற்படுவீர்கள், பயணங்கள் கைகூடும்.

**சிம்மம்:** சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், மறைமுக எதிர்ப்புக்க ளையும் எளிதில் சமாளிப்பீ ர்கள், தித்திக்கும் பயணங் கள் இடம்பெறலாம், வேலைச்சுமை கூடும்.

**தனுசு:** பொன்னான எதிர்காலத்தை அமைத்துக்கொள்ள புதிய வழி பிறக்கும், வழிபாட் டால் குதூகலம் காண வேண்டிய நாள், வியாபார விருத்தியுண்டு.

**விருச்சிகம்:** சுவாரஸ்யமான சம்பவங் கள் இடம் பெறலாம், செய்தொழிலில் மேன்மை யும் உயர்வும் கிட்டும், நண்பர்கள் வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**துலாம்:** தொழிலில் அதிக பிர யாசை காட்டுவீர்கள், எடுத்த காரி யங்களில் முன்னேற்றம் ஏற்படலாம், தெய்வீக சிந் தனை மேலோங்கும் நாள், கௌரவமான நாள்.

**கன்னி:** உடனிருப்பவர்களை அனு சரித்து செல்வது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பயணங்களின்போது விழிப் புணர்வு அவசியம்.

## 25 பில்லியன் ரூபாய் செலவில்

# கொழும்பில் தெற்காசியாவின் மிக உயரமான மேம்பாலம்



(கொழும்பு)

தெற்காசியாவின் மிக உயரமான மேம்பாலம் கொழும்பில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

25 பில்லியன் ரூபாய் செலவில் இந்தப் பாலம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

ஐந்து மாடிகள் உயரத்தைக் கொண்டதாக இரண்டு கட்டடத் தொகுதிகளில் இந்த மேம்பாலம் அமைக்கப்படவுள்ளது.

175 மீற்றர் உயரத்தைக் கொண்டதும், 10 மீற்றர் அகலத்தைக் கொண்டதுமாக இந்த மேம்பாலம் நிர்மாணிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கைதடியில் மகளிர் தினம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கடந்த வெள்ளிக்கிழமை கைதடி நவபுரம்பொதுநோக்குமண்டபத்தில் மகளிர் நலன் தொடர்பான கருத்தரங்கு இடம்பெற்றது.

கைதடி சரஸ்வதி இளைஞர் கழகமும், நிலைபேண் அபிவிருத்தி இலக்குகளிற்கான சாவகச்சேரி இளைஞர் சபையினரும் இணைந்து இக் கருத்தரங்கு நிகழ்வினை ஏற்பாடு செய்து நடத்தினர்.

சரஸ்வதி இளைஞர் கழகத் தலைவி ஜெ.வினுஜா தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் வளவாளர்களாக வின் நிறுவன இணைப்பாளர் சித்ரா மற்றும் உளவளத்துணை ஆலோசகர் ஆர்.வாணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் நிகழ்வில் இளைஞர் சேவை அதிகாரி அனுரதன்,சாவகச்சேரி இளைஞர் கழகத் தலைவர் நக்கீரன் மற்றும் நிலைபேண் அபிவிருத்தி இலக்குகளிற்கான உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.(5-30)

# கண்காணிப்புக் கொட்டில் விசமிகளால் தீக்கிரை



(யாழ்ப்பாணம்)

வடமராட்சி மணடான் பகுதியில் கழிவு கொட்டப்படும் இடத்தில் அதனை கண்காணிப்பதற்காக அமைக்கப்பட்ட கண்காணிப்பு கொட்டில் விசமிகளால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

கரவெட்டிப் பிரதேசசபையால் வல்லை- உப்பு வீதிப் பகுதியில் கழிவுகள் கொட்டுவதற்கு இடம் ஒன்று ஒதுக்கப்பட்டிருந்தது.

ஆனால் அவ்விடத்திற்கு வெளிப்பகுதியில் இருந்து வருபவர்கள் கழிவுகளை கொட்டி விட்டு செல்கின்றனர்.

இதனால் அதனைக் கண்காணிப்பதற்காக ஒரு கொட்டில் அமைக்கப்பட்டு அதற்கு காவலர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை அக் கொட்டில் இனம் தெரியாத நபர்களினால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. (இ-7)

## இலங்கையிலிருந்து லண்டனுக்கு

# துப்பாக்கியுடன் பயணிக்க முயன்றவர் விமான நிலையத்தில் வைத்து கைது

(கொழும்பு)

துப்பாக்கியைப் பயணப் பொதியில் மறைத்து வைத்து வெளிநாடு செல்ல முயன்ற பயணியொருவர் நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட நபர் லண்டன் நோக்கி செல்வதற்காக வந்ததாக குறிப்பிட்டுள்ளனர்.

வெல்லம்பிட்டி பிரதேசத்தை சேர்ந்த சந்தேகநபர் அமெரிக்க குடியுரிமையை கொண்டவரெனவும், இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளுக்காக குறித்த நபரை விமான நிலைய பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாக தெரிவித்துள்ளனர். (இ-7)

# முன்பள்ளியின் கண்காட்சி

(கரணவாய்)

நீரவேலி பாலர் பகல் விடுதி முன்பள்ளியின் ஆக்கத்திறன் கண்காட்சி எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் இ.க.சண்முகநாதன் அரங்கில் தலைவர் செ.பத்மநாதன் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நீரவேலி தெற்கு கிராம உத்தியோகத்தர் க.உபேந்திரா கலந்து கொள்வார். (5-60)

## அரசியல் சூழ்ச்சியால்

# பொருளாதாரத்துக்கு ஏற்பட்ட நட்டத்தை கணிப்பிட முடியாது



(கொழும்பு)

நாட்டில் இடம்பெற்ற அரசியல் சூழ்ச்சியில் ரூபாவின் வீழ்ச்சிக்கு ஏற்பட்ட நட்டத்தை கணிப்பிட முடியும் ஆனால் பொருளாதாரத்துக்கு ஏற்பட்ட நட்டத்தை கணிப்பிட முடி யாது என நிதி மற்றும் ஊடக இராஜாங்க அமைச்சர் எரான் விக்ரமரத்ன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்றுத் திங்கட்கிழமை இந்த வருடத்துக்கான வரவு-செலவுத்திட்டம் மீதான இரண்டாவது வாசிப்பின் ஐந்தாவது நாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் இடம்பெற்ற அரசியல் சூழ்ச்சி காரணமாக வரவு-செலவு திட்டத்தை உரிய காலத்தில் சமர்ப்பிக்க முடியாமல் போனது. டிசெம்பர் மாதத்தில் சமர்ப்பிக்க வேண்டியதை மார்ச் மாதம் சமர்ப்பிக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் பொருளாதார தாழ்வுமட்டம் ஏற்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.(இ-7)


## பருத்தித்துறை பிரதேச சபை-புலோலி

09.03.2019 ஆம் திகதி வெளியான பத்திரிகையால் ஏலவிற்பனை தொடர்பாக பக்கம் 07 இல் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தில் தவறுதலாக 07.03.2019 என குறிப்பிடப்பட்ட திகதியினை 14.03.2019 என திருத்தி வாசிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தவிசாளர்,
பருத்தித்துறை பிரதேச சபை,
புலோலி.


## இலட்சார்ச்சனை

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் ஈழுத்து தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோவில் தசதின இலட்சார்ச்சனை நேற்றுத் திங்கட்கிழமை ஆரம்பமாகியது.

இதில் 20 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணியளவில் பாற்குட பவனியும் மறுநாள் 21 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணியளவில் பங்குனி உத்தர நவோத்திர சகஸ்ர சங்காபிஷேகமும் நடைபெறவுள்ளது. (5)


## கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,வடமாகாணம்

### ஏல விற்பனை

எமது அமைச்சினால் பயன்படுத்தப்பட்ட பின்வரும் பொருட்கள் கல்வி அமைச்சு வளாகத்தில் எதிர்வரும் 18.03.2019 திங்கட்கிழமை காலை 09.30 மணிக்கு ஏல விற்பனை செய்யப்படும்.

1. Computer set
2. Printers
3. உடைந்த தளபாடங்கள்
4. மின்சார உபகரணங்கள்
5. பாவித்த வாகன உதிரிப்பாகங்கள்
6. ஏனைய சிறு அலுவலக உபகரணங்கள்

சி.சத்தியசீலன், செயலாளர்.

(C-5748)


## நினைவேந்தல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

மறைந்த சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கத்தின் நினைவேந்தல் நிகழ்வு எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணியளவில் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் "சிவத்தமிழ் வித்தகம்" என்னும் நூல் வெளியீடும் இடம்பெறவுள்ளது. (5-10-136)


## யா/புற்றளை மகா வித்தியாலயம், புலோலி பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்-2019 புதிய நிர்வாகத் தெரிவும், மீள் புனரமைப்பும்

காலம்:- 24.03.2019 ஞாயிற்றுக்கிழமை
நேரம்:-மு.ப 9.00 மணி
இடம்:- பாடசாலை கேட்போர் கூடம்

பழைய மாணவர்சங்க உறுப்புரிமை உடைய இல்லாத அனைத்துப் பழைய மாணவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம். பிரேரணைகள் ஏதுமிருப்பின் 17.03.2019 இற்கு முன்னதாக அதிபருக்கு அனுப்பி வைக்கலாம்.

அதிபர்
யா/புற்றளை.ம.வி,புலோலி.

(C-5749)



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்:ரோகிணி 2
தகைமை/தொழில்:O/L கட்டட ஒப்பந்தகாரர்,சொந்ததொழில்
எதிர்பார்ப்பு: படித்த, உத்தியோகமுள்ள உத்தியோகமற்றபெண்,உள்நாடு, வெளிநாடு தொ.இ: B/9449

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்:சுவாதி 1
கி.பா: 17 ½
உயரம்: 5'9"
தகைமை/தொழில்:NCED,NCT,Civil Engineering, Technical Officer
எதிர்பார்ப்பு:அரசதொழில்,உள்நாடு,வெளிநாடு
தொ.இ: B/9450

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம் 4
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:O/L,கடை ஊழியர்
எதிர்பார்ப்பு:அரசதொழில்,உள்நாடு, வெளிநாடு
தொ.இ: B/9457

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்:அவிட்டம் 4
கி.பா: செவ் 7 இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்:ITபட்டதாரி, London
எதிர்பார்ப்பு:A/L,உள்நாடு,வெளிநாடு
தொ.இ: B/9458

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: ரேவதி 3
கி.பா: 19செவ் 2 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு:அரசதொழில்,உள்நாடு,வெளிநாடு
தொ.இ: G/9464

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்:பரணி 1
உயரம்: 5'
தகைமை/தொழில்:BA பட்டதாரி
எதிர்பார்ப்பு:அரசதொழில்,உள்நாடு,வெளிநாடு
தொ.இ: G/9466

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்:ஆயிலியம் 1
கி.பா: செவ் 4 இல்
தகைமை/தொழில்:HNDE, B.Com Following
எதிர்பார்ப்பு: அரசஉத்தியோகம், உள்நாடு
தொ.இ: G/9468

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்:அச்சுவினி
கி.பா: 63 ¾ செவ் 7 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:பட்டதாரி,Software Engineer
எதிர்பார்ப்பு: தகைமைக்கேற்றவரன், உள்நாடு, வெளிநாடு
தொ.இ: G/9470

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# ஈழத்துச் சிதம்பரத்தான் - காரைநகர் திருக்கோயில் முப்பொருளுண்மைகளை பங்குனித்திருவிழாவில் பேரருள் பெறுவோம்

முப்பொருளின் வாய்மைகளை முடிவுபெற விளக்குமிடஞ்
செப்புதிருக் கோயில் காண் திருவடிந் தாமெல்லாம்
அப்பனுயிராக்கமுற வெடுத்தவருள் வடிவங் காண்
ஒப்பறுசீர் விழாவெல்லா முண்மை தெரியாவனையாம்
(ஈழத்துச் சிதம்பர புராணம்)

பதி, பசு, பாசம் என்னும் மூன்றுபொருள்களினதும் உண்மைத்தன்மைகளை முதலிலிருந்து முடிபுவரையும் செவ்வையாக விளக்கிக்காட்டும் இடம் திருக்கோயில்களில் உள்ள திருவுருவங்கள். எல்லாம் சிவபெருமான் உயிர்கள் பாசங்களினின்றும் நீங்கி ஈடேறும் பொருட்டு எடுத்த அருள் வடிவங்களாகும். அத்திருக்கோயில்களில் உள்ள அந்த அருள் வடிவங்களுக்குச் செய்யும் திருவிழாக்கள் எல்லாம் முப்பொருளின் உண்மைகளை மக்களுக்குத் தெரியச்செய்யும் அருள் உடையவையாகும்.


தக்கன் யாகம் அழித்தல்- திருப்பறியலூர் வீரட்டானம்

திருவிழா என்பது வடமொழியில் உற்சவம் எனப்படும். உற்சவம் என்னும் சொல்லுக்கு மேலான வேள்வி என்றும் படைத்தல் முதலிய ஐந்தொழிலைக் குறிப்பது என்றும் மன்னுயிர்களின் மலத்தை நீக்கி வீடுபேறுபயப்பதென்றும் (முத்தி இன்பம்) பல பொருட்களை பகர்கின்றது திருவிழாக்கள்.

முன்னொரு காலத்திலே சிவபெருமானை இகழ்ந்த தக்கனுடைய வேள்வியில் அவிப்பாகம் உண்ட இந்திரன் முதலிய தேவர்கள் வீரபத்திரக் கடவுளினாலே தண்டிக்கப்பட்டு அப்பாவஞ் சிறிது நீங்கப்பெற்றனரென்றும் எஞ்சிய பாவத்தாற் பலகாலம் வருந்தினரென்றும் பின்பு சிவ வேள்வியாகிய மஹோற்சவத்தைச் செய்து அவ்வருத்தம் துன்பங்களில் இருந்து நீங்கி இன்புற்றனரென்றும் அக்காலம் தொடங்கி இம் மஹோற்சவம் உலகத்தில் நடைபெறுவதாயிற்று என்றும் சிவபெருமானுக்குத் தொடங்கிய இத் திருவிழா அவரது சக்தியாகிய அம் மையாருக்கும் மைந்தராகிய விநாயகக் கடவுள், முருகக்கடவுள் ஆகியோருக்கும் நிகழ்த்தப்படுவதாயிற்று என்று ஆகமம் வல்லார் கூறுவார்.

எம்மைச் சிவத்தன்மையடையச் செய்து உய்வித்தலே திருவிழாக்கள் செய்வதன் உட்பொருளாகும். திருக்கோயில்களில் செய்யப்படும் ஆண்டுத் திருவிழாக்கள் தரிசிக் கும் எல்லாவுயிர்க்களுக்கும் ''சாம்பவி தீக்கையாம்'' என ஆகமங்கள் கூறும்.

நாமும் சிவத்தன்மையடையச் செய்து

நாம் ஆன்ம ஈடேற்றுதலாகி

''ஓம் நமசிவாய'' என பயனடைவோம்.

க.கு.க.சிவபாலன்,
போசகர், மாணிக்கவாசகர் மடாலயம்.

# எழுச்சிபெறும் இலங்கை தேசிய வேலைத்திட்டம்




(கொழும்பு)

"எழுச்சிபெறும் இலங்கை -2019" தேசிய வேலைத்திட்டம் தொடர்பான ஆரம்ப கட்ட கலந்துரையாடல், அமைச்சர் றிசாத் பதியுதீன் தலைமையில் கைத்தொழில் அபிவிருத்தி சபை அலுவலகத்தில் நடைபெற்றுள்ளது.

கைத்தொழில் வர்த்தகம், நீண்டகால இடம்பெயர்ந்தோர் மீள்குடியேற்றம் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் கீழான கைத்தொழில் அபிவிருத்தி சபை, தேசிய கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் தேசிய அருங்கலைகள் பேரவை ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந் நிகழ்வில் தொகுதி மட்டத்தில் தொழில் முயற்சியாளர்களை அடையாளங்காணல். அவர்களுக்கு உபகரணங்களை வழங்கல் உள்ளிட்ட விடயங்கள் ஆராயப்பட்டன. (இ-7)

# குவைத்தில் பல்வேறு இன்னல்களுக்கு முகம்கொடுத்த பலர் தாயகம் திரும்பினர்



(கொழும்பு)

குவைத் நாட்டுக்கு பணிப் பெண்களாகச் சென்று பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்த 28 பேர் மீளவும் நாடு திரும்பியுள்ளனர்.

இவ்வாறு நாடு திரும்பியவர்களில் 26 பேர் பெண்கள். இவர்கள் யூ எல் 230 ரக விமானத்தின் ஊடாக நேற்றுக் காலை நாடு திரும்பியுள்ளனர்.

பின்னர் அவர்கள் கட்டுநாயக்க விமான நிலைய வளாகத்திலுள்ள நிவாரண பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளனர். (இ-7)

# நீதிமன்றம் சென்ற மாணவிக்கு நீதி

(கொழும்பு)

2013 ஆம் ஆண்டு நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கிலப் பாடம் தொடர்பான பெறுபேறு குறித்து நீதிமன்றம் சென்ற மாணவிக்கு நீதி கிடைத்திருப்பதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பி பூஜித் தெரிவித்துள்ளார்.

அவரது விடைத்தாள்கள் மீள் பரிசீலனை செய்யப்பட்டு இதற்கான பெறுபேறு வழங்கப்பட்டுள்ளது. உயர் நீதிமன்றம் வழங்கிய உத்தரவின் அளப்படையில் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைய இந்த விடைத்தாள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

மாணவிக்கான புதிய பெறுபேறு பரீட்சைகள் திணைக்கள்தால் வழங்கப்பட்டிருப்பதாகவும் ஆணையாளர் நாயகம்மேலும்தெரிவித்தார். (இ-7)

# மகிந்தவுக்கு ஆதரவாக சீனா ஐ.நா. சபையில் பல தடைகள்

## யோகேஸ்வரன் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் குறித்து விசாரணை செய்யப்படவேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாகவிருக்கின்றோம் என நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகம் இலங்கை மீது தொடர்ச்சியான கவனத்தைச் செலுத்தவேண்டும் என்பதில் நாங்கள் கவனமாக இருக்கின்றோம்.

ஐ.நா. மனித உரிமைப் பேரவையால் பரிந்துரைக்கப்பட்ட சிலவற்றை தற்போதைய அரசாங்கம் செய்திருந்தாலும் பல் விடயங்கள் இழுத்தடிக்கப்பட்டு வருகின்றன.

இலங்கை விடயத்தில் சர்வதேசத்தின் மேற்பார்வை அதிகமாக இருக்கவேண்டும் என்பதில் நாங்கள் கவனமாக இருக்கின்றோம்.

இலங்கை விவகாரத்தை ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு கொண்டுசெல்வதில் சீனாவின் செயற்பாடு பல தடைகளை ஏற்படுத்துகின்றன. மகிந்தவின் ஆதரவு நிலைப்பாட்டை சீனா கொண்டிருப்பதன் காரணமாக ஐ.நா.வின் பல தீர்மானங்களுக்கு ஆதரவு வழங்கவில்லை.

சீனா போன்ற நாடுகள் பாதுகாப்புச் சபையில் இருக்கும்போது இலங்கை தொடர்பில்தீர்மானங்களை கொண்டு வருவதில் எந்தளவு சாதக நிலையிருக்கின்றது என்பதைப் பார்க்க வேண்டும்" என நாடாளுமன்ற உறுப்பினர்யோகேஸ்வரன் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இரு வியாபார நிலையங்கள் தீக்கிரை



(ஹற்றன்)

நுவரெலியா-கண்டி பிரதான வீதி, பழைய கடைப் பகுதிக்குச் செல்லும் வழியிலுள்ள இரு வியாபார நிலையங்களில், நேற்றுப் பகல் ஏற்பட்ட திடீர் தீ விபத்து காரணமாக, அந்நிலையங்கள் முற்றுமுழுதாகத் தீக்கிரையாகியுள்ளன.

இவ்வாறு எரிந்த கடைகளில், அணிகலன்கள் விற்பனை நிலையமொன்றும் புதிதாகத் திறக்கப்படவிருந்த உணவகமொன்றுமே, தீக்கிரையாகியுள்ளன.

மாநகரசபையின் தீயணைப்புப் பிரிவினரும் பொது மக்களும் இணைந்து, தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

தீ விபத்து ஏற்பட்டமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என்றும் இது தொடர்பில், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும், நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# ஜனாதிபதியின் நிதி ஒதுக்கீட்டுப் பிரேரணையை அங்கீகரிக்க முடியாது - பொன்சேகா எதிர்ப்பு



(பொலநறுவை)

பொலநறுவை மாவட்டத்துக்கு ஜனாதிபதி தனது அமைச்சின் கீழ் 10 பில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளதாகவும், கம்பஹா மாவட்டத்துக்கு கடந்த மூன்று வருடங்களில் 10 பில்லியன் ரூபாய் வழங்கப்படவில்லையெனவும் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா விசனம் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் இந்த நிதியொதுக்கீட்டுப் பிரேரணையை அங்கீகரிக்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை எம்.பிக்கள் வரவு-செலவுத் திட்டத்தில் ஜனாதிபதிக்கான நிதியொதுக்கீட்டுப் பிரேரணையைத் தோற்கடிப்பதாக தீர்மானித்துள்ளனர்.

இது குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே பொன்சேகா மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## 157 பேர் உயிரிழப்பு

# எதியோப்பிய விமானத்தில் இலங்கையர்கள் இல்லை

விபத்துக்குள்ளான எதியோப்பிய விமானத்தில் இலங்கையர்கள் எவரும் இருக்கவில்லை என அந்த நாட்டுத் தகவல்கள் உறுதிப்படுத்தியுள்ளன. குறித்த விமானம் நேற்று முன்தினம் விபத்துக்குள்ளானதில் 157 பேர் உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்களில் 30 நாடுகளைச் சேர்ந்தவர்கள் இருந்ததாக அந்த நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும் அவற்றுள் இலங்கையர்கள் எவரும் இருந்திருக்கவில்லை என அந்த நாட்டுத் தகவல்கள் உறுதி செய்துள்ளன. (இ-7)

### மாதாந்தம் 6 ஆயிரம் ரூபாய்

# வரவு-செலவுத் திட்டத்தில் இடைக்கால நிவாரணம்

## காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் வரவேற்பு

(கொழும்பு)

2019 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 5 ஆம் திகதியன்று அரசாங்கம் தனது வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் 500 மில்லியன் ரூபாய்களை காணாமற்போன ஆட்களது குடும்பத்தாருக்கும் ஆயுதப்படை மற்றும் பொலிஸ்துறையில் "சேவையின்போது காணாமல்" போயிருப்போரின் குடும்பங்களுக்கும் மாதத்திற்கு ரூ 6,000 வீதம் உதவிட நிதி ஒதுக்கியுள்ளது. வரவு-செலவுத் திட்டத்தில் முன்மொழிந்திருப்பதுபோல "நிவாரணம் வழங்கும் அலுவலகமானது" இப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கும்வரை இந்நிவாரணமானது "காணாமல் போன சான்றிதழ்" பெற்றவர்களுக்கு வழங்கப்படும். கடந்த 2018 ஆவணி மாதம் நாம் வெளியிட்ட எமது இடைக்கால அறிக்கையின் பரிந்துரையின்படி இம் முன்மொழிவு 2019 வரவு-செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருப்பதை காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (OMP) வரவேற்கிறது. இந்த முன்மொழிவை நடைமுறைப்படுத்துவதற்கு உதவுவதுடன் இந்நிகழ்ச்சித் திட்டமானது ஆயிரக்கணக்கான காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் குடும்பங்களுக்கும் விரிவாக்கப்படுவதையும் OMP தன் கண்ணோட்டமாக கொண்டுள்ளது.

தனது இடைக்கால அறிக்கையில் காணாமல் போன / சேவையின் போது காணாமல் போன ஆட்களின் நிரந்தர, வருமான மற்ற, வேறு பாதிப்புக்களுக்குள்ளாக்கப்பட்ட மனைவி, குழந்தை/குழந்தைகள் அல்லது உடன் உயிரோடிருக்கும் பெற்றோர் /பெற்றோர்களுக்கு ஜீவனோபாயமாக மாதாந்தம் ரூ 6,000 நிதியுதவி வழங்க வேண்டும் என OMP பரிந்துரை செய்தது.

மாதாந்த நிவாரணம் வழங்கப்படுவதற்கு "காணாமல் போன சான்றிதழ்" நிபந்தனையாக்கப்பட்டுள்ளதில் உள்ள சவால்களை OMP அவதானிக்கின்றது. "காணாமல்போன சான்றிதழ்" வழங்கப்படுவதற்கான வழிமுறைகளைப் பெற்றுத் தந்திடுவது OMP யின் சட்டபூர்வ பொறுப்பு என்பதால் அதற்கான புரிந்துணர்வினை அதிகரித்து குடும்பங்கள் காணாமல்போன சான்றிதழ் பெறுவதற்கான வழிமுறைகளை உருவாக்கி வருகிறது. காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் குடும்பங்கள் காணாமல் போனோர் சான்றிதழைப் பெறுவதைத் தடுக்கும் சவால்களை இனம் கண்டறிந்துள்ள OMPயானது அரசாங்கத்துடன் இணைந்து செயலாற்றி காணாமல் போன அல்லது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு வேறு வழிகள் மூலம் ஆவணங்களைப் பெறுவதற்கும் உறுதிப்படுத்துவதற்காகவும் செயற்படும்.

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகமானது கடன் தீர்வு, வீடமைப்பு, கல்வி, தொழிற்கல்வி, வாழ்வாதார அபிவிருத்தி, தொழில் போன்ற துறைகளில் இடைக்கால நிவாரணம் வழங்கிட இதர பரிந்துரைகள் செய்திருந்தது. அப்பரிந்துரைகளில் ஒன்றாக 'என்ரபிரைஸ் ஸ்ரீலங்கா' என்பது போன்ற நிதியுதவி மற்றும் கடன் வழங்கும் திட்டங்களில் இக்குடும்பங்களை உள்ளடக்கி அவை பொருளாதார தன்னிறைவு பெறச் செய்வதாகும். 2019 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் தம் குடும்பங்கள் "என்ரபிரைஸ் ஸ்ரீலங்கா" கடன் திட்டத்தில் முன்னுரிமை நுழைவு தரப்பட்டுள்ளமையை OMP வரவேற்கின்றது.

தேசிய ஒருமைப்பாட்டு அலுவலகத்தால் ஒருங்கிணைக்கப்படுகின்ற வாழ்வாதாரத் திட்டங்களில் (ONUR) இணையுமாறு குடும்பங்கள் வேண்டப்படுகின்றன.

2018 ஆவணியில் தனது இடைக்கால அறிக்கையை சமர்ப்பித்த பின் OMP இடைக்கால நிவாரணமும் நீதியும் என்ற ஒரு பின் தொடர் செயற்றிட்டத்தினை ஆரம்பித்ததோடு பல்துறை அரச நிறுவனங்களோடும் அரச முகவர்களோடும் தொடர்பு கொண்டு அவை நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்து கொள்ளும்.


2016 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க காணாமல்போன ஆட்கள் பற்றிய (தாபித்தலும் நிர்வகித்தலும் பணிகளை நிறைவேற்றுதலும்) அலுவலக சட்டத்தின் கீழ் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு நிர்வாக உதவி, நலன்புரி சேவைகள் ஆகியவற்றைப் பெற்றுத் தரவும் வசதிகளேற்படுத்திக் கொடுக்கவும் OMP கடமைப்பட்டுள்ளது.

காணாமல்போன மற்றும்காணாமல் ஆக்கப்பட்டோர்களது குடும்பங்கள் எதிர்கொள்ளும் பொருளாதார கஷ்டங்களை முன்னிட்டு அவர்களுக்கு இடைக்கால நிவாரணம் வழங்குவதன் முக்கியத்துவத்தினையும் அவர்களில் மிக இடைப்பாட்டுடன் கூடிய குடும்பங்களுக்கு அவர்கள் தங்கள் சிக்கலான தேவைகளுக்கான இழப்பீடு மற்றும் இதரவகைகளிலான நிவாரணங்களைப் பெற்றுக் கொள்ளும்வரையிலும் அவர்களுக்கேற்பட்ட பாதிப்புக்களை அங்கீகரிக்கும் வகையிலும் இது அவசியமானது என்பதை OMP அடையாளம் காண்கிறது. இடைக்கால நிவாரணங்களை ஏற்றுக்கொள்வதென்பது போதுமான, உடனடி, செயற்படும் பரிகாரங்கள், பொறுப்புக் கூறலுக்கான நீதித்துறை தீர்வு முதலான தமக்குரித்தான உரிமைகளை விட்டுக்கொடுத்தலாகாது என்பதை OMP அவதானிப்பதோடு தனது பணிப்பாணையை நிறைவேற்றுவதில் உறுதியாக உள்ளது என அந்த அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# "தமிழரசே ஏழைகளை சிறையில் வைப்பதா" "இது உங்களது அரசியல் வங்குரோத்தா"

### சிறிநேசனுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்





(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசனுக்கு எதிராக கிரான் பிரதேசத்தில் கண்டன ஆர்ப்பாட்டம் நேற்றுத் திங்கட்கிழமை காலை நடைபெற்றது.

கிரான் இளைஞர்களால் இக் கண்டனப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டது. இரண்டு குடும்பங்களுக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பினை சட்ட வரையறைகளை மீறி பாராளுமன்ற உறுப்பினர் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி 2 கூலித் தொழிலாளர்களை கூண்டில் அடைத்தார். எவ்வளவு அபிவிருத்தி வேலைகள் இருந்தபோதிலும் அவற்றையெல்லாம் புறம் தள்ளி விட்டு கூலியாளர்களை கூண்டில் அடைத்ததை வன்மையாகக் கண்டிக்கின்றோம் எனத் தெரிவித்தே இக் கண்டனப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கிரான் சுற்று வளைவு மையத்தில் கூடிய இளைஞர்கள் சிலர் பாதாகைகள் சிலவற்றினை கையில் ஏந்தியவாறும் பாராளுமன்ற உறுப்பினரது உருவம் தாங்கிய பொம்மையைத் தூக்கிக் கொண்டு கோசங்களை எழுப்பி ஊர்வலமாக கிரான் சுற்று வளைவு மையத்தினை சுற்றி வந்தனர். "தமிழரசு கட்சியே ஏழைகளை சிறையில் வைப்பதா", "இது உங்களது அரசியல் வங்குரோத்தா", "எழுவது நாம் வீழ்வது நீர்", "தமிழர்கள் என்ன மடையர்களா" என்பன போன்ற பாதாகைகளைக் கையில் ஏந்தியிருந்தனர்.

கண்டனப் பேரணியின் இறுதியில் பாராளுமன்ற உறுப்பினரது பெயர் குறிக்கப்பட்ட உருவ பொம்மை வீதியில் வைத்து ஆர்பாட்டாக்காரர்களால் எரியூட்டப்பட்டது. (இ-7)

## குறை'களை' பதிகம் 29

# அவகாசம் வேண்டாம்-இவர் சகவாசம் வேண்டாம்



ஐ.நா. அமர்வு தொடங்குகிறது
எம் அடிவயிறு பற்றி எரிகிறது
ஐயகோ! ஐ.நாவே
அவகாசம் வேண்டாம்
எம்மினத்திற்கிழைக்கப்பட்ட அநீதிக்கு
அழுத்தமான தீர்வே வேண்டும்

பயங்கரவாதத்தை அழிக்கும் போர்வையில்
இனப்படுகொலையொன்று அரங்கேறியதே
எங்கே போனது சர்வதேசத்துக் கண்கள்

சிரியாவில் சிறுவன் இறந்தபோது
மனித உரிமை மீறல் என்று
பக்கம் பக்கமாய் அறிக்கை விட்டோர்க்கு
புரியவில்லையோ
ஈழத்துக் குழந்தைகளின் கதறல்

இறந்த தாயின் மார்பில்
பசிக்கு அழுத பிள்ளை
பால் குடித்த காட்சி
பார்த்ததுண்டா?
எம் தேசத்தில் அது நடந்தது!

இறந்த என்னினப் பெண்ணின்
ஆடை களைந்து
காம வெறியாடிய கதை
காதால் கேட்டதுண்டா?
எம் தேசத்தில் அது நடந்தது!

தான் பெற்ற மகனின் கொள்ளிக்காய்
ஏங்கித் தவித்த தாயின் உடல்
ஓநாய்க்கு இரையான கதை தெரியுமா?
எம் தேசத்தில் அது நடந்தது!

உலக நாடுகளில் செய்த
கொடிய போர் ஆயுதங்கள் அத்தனையும்
எம் இனத்தின் தலைகளில்
சோதித்த கதை தெரியுமா?
எம் தேசத்தில் அது நடந்தது!

காயப்பட்ட உறவுகளுக்கு
தொண்டு செய்த தொண்டனின்
வயிறு அறுபட
குடல் கொட்டுண்டு - அவன்
குற்றுயிராய்க் கிடந்த நிலை தெரியுமா?
எம் தேசத்தில் அது நடந்தது!

ஊரின் எல்லையிலே மயானம்
இதுவரை அறிந்த நாம்
ஊரே மயானமான கதை தெரியுமா?
ஆம்...
முள்ளிவாய்க்காலில் அது நடந்தது!

கற்பனைக்கெட்டாத அத்தனையும்
எம் ஈழத்தில் நடந்தபின்பும்
குற்றம் செய்தவர் தண்டிக்கப்படாமல்
மாலை மரியாதையுடன்
விதிவலம் வரலாமோ?

ஐயகோ ஐ.நாவே!
அவகாசம் வேண்டாம்
எமக்கு இவர் சகவாசம் வேண்டாம்
இழைக்கப்பட்ட குற்றத்திற்கு
நீதிவேண்டும் நீதிவேண்டும் நீதி வேண்டும்

மாவை.நா.கஜேந்திரன்

முப்படையினரும் கையகப்படுத்தியுள்ள

# காணிகளை விடுவிக்கக் கோரி நேற்று

## மன்னார் மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடல்

(மன்னார்)

**மன்னார் மாவட்டத்தில் இராணுவத்தினர், கடற்படையினர், பொலிஸார் ஆகியோர் கையகப்படுத்தியுள்ள பொதுமக்களின் காணிகள் மற்றும் அரச, அரச சார்பற்ற, தனியார் காணிகளை விடுவிக்கக் கோரி நேற்று முற்பகல் 10 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றது.**

மன்னார் மாவட்டத்தின் ஐந்து பிரதேச செயலகப் பிரிவிலுள்ள இராணுவ அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், கடற்படையதிகாரிகள், பிரதேச செயலர்கள் ஆகியோர் அழைத்து அரசாங்க அதிபர் சி.மோகன்றாஸ் தலைமையில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

இதன்போது இராணுவத்தினர், பொலிஸார், கடற்படையினர் ஆகியோர் கையகப்படுத்தி நிலைகொண்டுள்ள அரச,அரசசார்பற்ற, தனியார் காணிகளை எப்போது விடுவிப்பீர்கள் எனவும் மக்களுடைய காணிகள் உடனடியாக விடுவிக்க வேண்டுமென்றும் அரசாங்க அதிபர் கேட்டுக் கொண்டார்.

இதற்கு இராணுவத்தினர் பதிலளிக்கையில்,

மன்னார் முசலிப் பிரதேச சபைக்குட்பட்ட முள்ளிக்குளத்தில் ஏற்கனவே 77 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டதாகவும் மிகுதிக் காணிகள் வனஜீவராசிகள் திணைக்களத்திற்குரியதென்றும் அவர்களுக்கு குத்தகைப் பணம் வழங்குவதாகவும் அதற்கான பற்றுச்சீட்டு உள்ளதாக காண்பித்தனர்.

அப்படி வெளியேறுவதாயின் 126 மில்லியன் ரூபாய் தேவையெனவும் கூறினர்.

அத்தோடு மாந்தை மேற்கு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள காணிகள் விடுவிக்கப்படுவதாக இருந்தால் 61 ஆவது படைப்பிரிவு தளபதியுடன் கலந்துரையாடுவதாகவும் இராணுவ அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதேவேளை மன்னார் பொலிஸ் நிலையம் அமைந்துள்ள காணியானது மாவட்ட செயலகத்திற்கும் ஞானவைரவர் ஆலயத்திற்கும் சொந்தமான காணியாகும்.

இதனை விடுவிப்பதாக இருந்தால் பொலிஸ்மா அதிபருடன் கதைக்க வேண்டும்.

இது தொடர்பில் பொலிஸ்மா அதிபருடன் கதைப்பதாக மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கூறினார்.

இதனையடுத்து சிலாவத்துறை கடற்படை அதிகாரியொருவர் கருத்துத் தெரிவிக்கையில், சிலாவத்துறை கடற்படை முகாமை அவ்விடத்தில் இருந்து அகற்ற முடியாது. அது கடற்படையினருக்கு முக்கியமான இடமாகும் என தெரிவித்தார்.

கலந்துரையாடலின் இறுதியில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் கருத்துத் தெரிவிக்கையில்,

இக் கலந்துரையாடலின் போது எடுக்கப்பட்ட தீர்மானங்கள், முடிவுகள் என்பவற்றை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு கடிதம் மூலம் எழுதி அனுப்புவதாக கூறினார்.

ஏற்கனவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வடக்கு- கிழக்கு மக்களின் காணிகள் விடுவிக்கப்பட வேண்டுமென கூறியதற்கமைவாக இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (2-286)

## திருநாவற்குளத்தில் குடும்பம் ஒன்றிற்கு வீடு கையளிப்பு



(பரந்தன்)

வவுனியா திருநாவற்குளம் பகுதியில் வசித்து வரும் குடும்பம் ஒன்றின் நிலைமை மற்றும் சிறுவர்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டும் ஜேர்மனி "Meerbusch" நகர நண்பர்களும் அயல் கிராம நண்பர்களோடு இணைந்து வீட்டிற்கான கட்டுமான நிதியை "VSFEE டென்மார்க்கும்" (வாணி சமூக பொருளாதார சுய மேம்பாட்டு நிறுவனம்) அன்பளிப்பாக வழங்கியமைக்கு அமைவாக அவர்களுக் கான வீடு கட்டப்பட்டு நேற்றுக் காலை 9 மணியளவில் கையளிக்கப்பட்டுள்ளது. (2-312)

## போராட்டத்தில் ஈடுபடும் மக்களுடன் மெசிடோ நிறுவத்தினர் சந்திப்பு



(மன்னார்)

மன்னார் முசலி பிரதேச சபைக்குட்பட்ட சிலாவத்துறை மக்கள் கடந்த 20 நாட்களாக தங்களுடைய பூர்வீக நிலத்தை விடுவிக்க வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறித்த மக்களின் போராட்டத்துக்கு பல்வேறுபட்ட அமைப்பினரும் ஆதரவு தெரிவித்து வருகின்ற நிலையில் நேற்றையதினம் இப் போராட்டத்திற்கு ஆலோசனை வழங்கும் மன்னார் சமூக பொருளாதர மேம்பாட்டுக்கான (மெசிடோ) நிறுவனத்தின் குழுத்தலைவர் ஜாட்சன் தலைமையில் மக்கள் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

இச்சந்திப்பில் குறித்த போராட்டம் தொடர்வது சம்பந்தமாகவும் மனித உரிமை ஆணைக்குழுவில் முறையிட்ட முறைப்பாடுகள் தொடர்பாகவும் கலந்தாலோசிக்கப்பட்டது. அதேநேரத்தில் மக்கள் குறித்த போராட்டத்தில் எதிர்கொள்ளும் சவால்கள் பற்றியும் கடற்படையினரால் விளைவிக்கப்படும் இடையூறுகள் சம்பந்தமாகவும் கலந்தாலோசிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-285)

# ஒரு இலட்சம் கையெழுத்துக்கள் சேகரிப்பு

(குருமன்காடு)

வவுனியாவில் நேற்றுடன் 748 ஆவது நாட்களாக போராட்டம் மேற்கொண்டு வரும் தமிழர் தாயகத்தில் கையளிக்கப்பட்டு கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட உறவுகளின் போராட்டத்தில் அமெரிக்காவின் உதவியைக்கோரி கடந்த 10 நாட்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட கையெழுத்து போராட்டம் நேற்று திருகோணமலையில் இடம்பெற்றது.

மூன்று நாட்கள் தொடர்ச்சியாக இடம்பெற்ற கையெழுத்துப் போராட்டத்தில் யாழ்பாணம், திருகோணமலை ஆகிய பகுதிகளில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட கையெழுத்துக்கள் சேகரிக்கப்பட்டுள்ளதாக தமிழர் தாயகத்தில் கையளிக்கப்பட்டு கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் செயலாளர் கோ.ராஜ்குமார் தெரிவித்துள்ளார்.

தமிழர் தாயகத்தில் காணாமலாக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுத்தருமாறு அமெரிக்காவின் உதவி கோரி வடக்கு- கிழக்கு மாவட்டங்களில் சுமார் மூன்று இலட்சம் கையெழுத்துக்களை சேகரிக்கும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டு வரும்



இப்போராட்டம் மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய பகுதிகளில் தொடர்ந்து இடம்பெறவுள்ளது. இரண்டு மாத காலப்பகுதிக்குள் சேகரிக்கப்படவுள்ள இக் கையெழுத்துக்கள் நேற்றுடன் ஒரு இலட்சம் கையெழுத்துக்கள் சேகரிக்கப்பட்டுள்ளதுடன் இக் கையெழுத்துக்கள் அமெரிக்காவிற்கு அனுப்பிவைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-250)

## பாடசாலைகளுக்கு தளபாடங்கள் வழங்கும் நடவடிக்கை ஆரம்பம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வலயப் பாடசாலைகளுக்குத் தளபாடங்கள் வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் சி.ஜோன்குயின்ரஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

யுத்த காலத்தில் காடுகளில் கைவிடப்பட்ட சுமார் ஆயிரத்து 500 பாடசாலைத் தளபாடங்களை பாடசாலைச் சமூகத்தினர் தேடிக் கண்டறிந்து கிளிநொச்சி வலயத்துக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட 18 பாடசாலைகளுக்கு வழங்கும் நிகழ்வு நடைபெற்று வருவதாக அவர் தெரிவித்தார். (2-10)

உரிமை கோரப்படாத நிலையில் காணிகள்

# ஒருவருக்கு வழங்கப்பட்ட காணியை பிறிதொருவருக்கு வழங்க அதிகாரம் இல்லை

## புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பில் மத்திய வகுப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட காணியில் 60 வீதமான காணிகள் உரிமையாளர்களால் உரிமை கோரப்படாத நிலையில், உள்ளதாக அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இலங்கைப் பெண் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவினால் வழங்கப்பட்ட படித்த வாலிபர் திட்டக் காணிகள் என அதிகாரிகளால் அடையாளப்படுத்தப்படும் காணிகள் உரிமையாளர்களால் உரிமை கோரப்படாத நிலையில் கடந்த 30 வருடத்திற்கு மேலாக அப்பகுதியில் வாழும் மக்கள் தமக்குரிய காணிகளை தெரிவு செய்ய முடியாத அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந் நிலையில் தமக்குரிய வீட்டுத் திட்டங்கள் ஏனைய, அரச சலுகைகளைப் பெறுவதற்கு தமது நிரந்தர நிலத்தை அடையாளப்படுத்த முடியாமல் உள்ளதாகத் தெரிவித்தனர்.

எனவே குறித்த விடயம் தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டுமெனப் பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை முன்வைக்கின்றனர்.

இவ் விடயம் தொடர்பில் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் ம.பிரதீபனைத் தொடர்பு கொண்டு வினவிய போது, தமது பகுதிகளிலுள்ள மத்திய வகுப்புத் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட காணிகளில் உரிமையாளர் அல்லாத பலர் வசிப்பதாகவும் ஒருவருக்கு வழங்கப்பட்ட காணியை பிறிதொருவருக்கு மாற்றி வழங்கத் தமக்கு அதிகாரமில்லை எனத் தெரிவித்தார். (2-10)

## வன்னியில் ஜனாதிபதி செயலகத்தின் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு மஸ்தான் எம்.பியிடம்



(குருமன்காடு)

ஜனாதிபதி செயலகத்தின் கருத்திட்டங்களை வன்னியில் துரிதப்படுத்த வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மீள்குடியேற்றம் புனர்வாழ்வு வடக்கு அபிவிருத்தி முன்னாள் பிரதி அமைச்சருமான காதர் மஸ்தானிடம் முழுமையான பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய மேற்படி நியமனம் வழங்கப்பட்டது.

அந்தவகையில், ஜனாதிபதி செயலகத்தினால் தேசிய ரீதியாக நடைமுறைப்படுத்தப்படும் கிராம சக்தி, சிறுநீரக நோய்த் தடுப்பு, தேசிய போதைப் பொருள் ஒழிப்பு, சிறுவர் பாதுகாப்பு, தேசிய உணவு உற்பத்தி, சுற்றாடல் பாதுகாப்பு, நிலைபேறான அபிவிருத்தி, ஸ்மார்ட் ஸ்ரீலங்கா போன்ற தேசிய செயற்றிட்டங்களை வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் நடைமுறைப் படுத்துவதற்கான பூரண அதிகாரங்கள் வழங்கப்பட்டு ஜனாதிபதியால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்டு வன்னி மாவட்டத்தில் வாழ்ந்து வரும் மக்களின் இயல்பு நிலையைக் கருத்தில் கொண்டு மேற்படி செயற்றிட்டங்களைக் கட்சி பேதம் கடந்து நீதியான முறையில் முன்னெடுப்பதற்காகவே முன்னாள் பிரதி அமைச்சர் காதர் மஸ்தான் ஜனாதிபதியால் பரிந்துரை செய்யப்பட்டார்.

மேற்படி செயற்றிட்டங்கள் ஜனாதிபதி செயலகத்தினால் தேசிய ரீதியாக துரிதமாக அமுல்படுத்தப்பட்டு வரும் நிலையில் வன்னி மாவட்டத்தில் அந்த கருத்திட்டத்தின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் அனைத்தும் பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தானிடம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-250)

# மன்னார் நகரசபைக்கும் பிரதேச சபைக்கும் இடையில் எல்லை தொடர்பில் பிரச்சினை

## வழக்கு விசாரணை 22 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

(மன்னார்)

மன்னார் நகர சபைக்கும் மன்னார் பிரதேச சபைக்கும் தங்கள் எல்லை சம்பந்தமாக முறுகல் நிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து மன்னார் பொலிஸார் அமைதிக்கு பங்கம் ஏற்படுவதாகத் தெரிவித்து மன்னார் நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

இதைத் தொடர்ந்து மன்னார் பிரதேச சபை தவிசாளர் மன்றில் ஆஜராகியிருந்தார்.

ஆனால் இவ் வழக்கில் மன்னார் நகர சபை மன்றுக்கு சமுகமளிக்காததால் மன்னார் நகர சபை தலைவருக்கு மன்று அழைப்பாணை விடுத்துள்ளது. இதனைத் தொடர்ந்து எதிர்வரும் 22 ஆம் திகதி வழக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் தீவு நுழைவாயிலில் அமைந்துள்ள பாலம் அமைந்துள்ள பகுதியானது மன்னார் நகர சபைக்கு சொந்தம் என தெரிவித்து மன்னார் நகர சபை அப் பகுதியை புனரமைக்கும் நோக்குடன் துப்புரவு செய்யும்பணியை மேற்கொண்ட போது அவ் இடம் வர்த்தமானி அறிவித்தல்படி மன்னார் பிரதேச சபைக்கே உரிமையென தெரிவிக்கப்பட்ட நிலையில் இரு சபையினருக்கு மத்தியில் முறுகல் நிலை ஒன்று ஏற்பட்டு அது பொலிஸ் நிலையம் வரை சென்றுள்ளது.

இது விடயமாக மன்னார் பொலிஸார் கடந்த 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்றில் எல்லை விடயமாக இப் பகுதியில் அமைதியின்மை தோன்றியிருப்பதாக தெரிவித்து வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

இவ் வழக்கின்போது மன்னார் பிரதேச சபை தவிசாளர் எஸ்.எச்.எம்.முஜாஹீர் மன்றில் ஆஜராகி இருந்தார்.

இவ்வேளையில் மன்னார் நகர சபை தவிசாளர் மன்றில் ஆஜராகாததால் அவருக்கு மன்று அடுத்த தவணைக்கு ஆஜராகும்படி அழைப்பாணை விடுத்துள்ளது.

மன்னார் பிரதேச சபை சார்பாக சட்டத்தரணி செல்வராசா டினேசன் மன்றில் தெரிவிக்கையில்,

2005.12.12 ஆம்திகதி இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தகமானி பத்திரிகை பிரகாரம் தற்பொழுது பிரச்சினைக்கு உள்ளாகியிருக்கும் இடமானது மன்னார் பிரதேச சபையின் எல்லையின் கிழக்கு பகுதியானது மதவாச்சி,மன்னார்,தலைமன்னார் ஏ-14 வீதியிலுள்ள பாலத்திலிருந்து நேரே தள்ளாடி இராணுவ முகாம் அருகே கடற்கரை வரையும் அங்கிருந்து சுமார் ஒரு மைல் தூரம் திருக்கேதீஸ்வரம் கோவில் வரையும் மன்னார் பிரதேச சபையின் எல்லையாக காண்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அண்மையில் மன்னார் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மன்னார் பாலத்தடிக்கு மின் விளக்குகள் பொருத்தி அதை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கை தங்களால் எடுக்கப்பட இருப்பதாக மன்னார் பிரதேச சபை தவிசாளரால் முன்வைத்து அங்கு உரையாற்றியபோது, அவ்விடத்தில் மன்னார் நகர சபை தவிசாளரும் அவ் கூட்டத்தில் சமுகமளித்திருந்தார்.

ஆனால் இந்த முன் யோசனையை மன்னார் பிரதேச சபை தவிசாளர் அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் முன்வைத்தபோது மன்னார் நகர சபை தவிசாளர் எந்த ஆட்சேபனையும் தெரிவிக்காத நிலையில் இருந்திருக்கின்றார் என மன்னார் பிரதேச சபைக்கு சார்பாக ஆஜராகிய சட்டத்தரணி எஸ்.டினேஸ் மன்றில் இவ்வாறு தனது வாதத்தில் சுட்டிக்காட்டினார்.

இதைத் தொடர்ந்து இவ் வழக்கை எதிர்வரும் 22ஆம் திகதி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. மன்னார் நகர சபைக்கு சார்பாக சட்டத்தரணி எம்.எம்.சபூர்தீன் மன்றில் ஆஜராகியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (2-286-285)



தமிழ் மக்கள் கூட்டணியின் கிளிநொச்சி அலுவலகம் நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் இல.258 ஆனந்தபுரம் கிழக்கில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதன்போது கட்சியின் கீதம் அறிமுகப்படுத்தப்பட்டு வெளியிடப்பட்டது. அத்துடன் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள், விளையாட்டு கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் என்பன தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் முன்னாள் வடக்கு முதலமைச்சருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனினால் வழங்கி வைக்கப்பட்டது. (2)

# நஞ்சற்ற நெல் அறுவடை விழா மன்னாரில் இன்று நடைபெறும்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் இயற்கை வழியில் பயிரிட்ட நஞ்சற்ற நெல் அறுவடை வயல் விழா பிரதி மாகாண விவசாயப்பணிப்பாளர் அலுவலகமும் அடம்பன் பண்ணையும் இணைந்து அடம்பன் பண்ணையில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 தொடக்கம் 11.30 வரை நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு மாகாண விவசாயப்பணிப்பாளர் எஸ்.சிவக்குமார், மாகாண பிரதி விவசாயப்பணிப்பாளர் மன்னார் ஜனாப்.கே.எம்.ஏ. சுக்கூர், இயற்கை வழி இயக்கம் டாக்டர் பிரபு, இயற்கை முறையில் விவசாயம் செய்யும் விவசாயிகள் குழு ஆகியோர் யாழ்ப்பாணம் இருந்து வருகை தரவுள்ளனர்.

அத்துடன் மன்னார்,பெரியமடு மற்றும் இலுப்பைக்கடவை ஆகிய கிராமங்களில் இயற்கை முறையில் விவசாயம் செய்யும் 40 விவசாயிகள் உட்பட ஏனைய பகுதிகளில் இயற்கையான முறையில் விவசாயம் செய்யும் விவசாயிகள் அனைவரும் கலந்து கொள்கின்றனர். இதேவேளை அறுவடையும் சிறப்பு கலந்துரையாடலும் நடை பெறவுள்ளது. (2-285)




# கமநலசேவை நிலையங்களின் அறிவுறுத்தல்களை மீறி பயிர்ச்செய்கை நிலங்களில் வைக்கோலுக்கு தீ மூட்டல்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் கமநலசேவை நிலையங்களின் அறிவுறுத்தல்களை மீறி பயிர்ச் செய்கை நிலங்களில் காணப்படும் வைக்கோல் தீயிட்டுக் கொளுத்தப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் காலபோக நெல் அறுவடை நிறைவு பெற்று சிறுபோக பயிர்ச்செய்கைக்கான தயார்படுத்தல்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் காலபோக அறுவடையின் கழிவுப்பொருட்களாக காணப்படுகின்றன வைக்கோல் எரியூட்டப்பட்டு வருகின்றன.

இம்முறை வைக்கோல் எரியூட்டும்விவசாயிகளுக்கான மானிய கொடுப்பனவுகள் எதுவும் வழங்கப்படாது என்றும் இவ்வாறு எரியூட்டும் விவசாயிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கமநலசேவை நிலையங்களினால் கமக்கார அமைப்புக்கள் ஊடாக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன.

இருந்தபோதும் கமக்கார அமைப்புக்களில் முக்கிய பொறுப்புக்களில் உள்ளவர்களே இவ்வாறு வயல் நிலங்களில் காணப்படுகின்ற வைக்கோலை எரியூட்டி வருகின்றனர் என தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக, ஒவ்வொரு கமக்கார அமைப்புக்களில் இருந்தும் வைக்கோல் எரியூட்டியுள்ள விவசாயிகளின் விபரங்களை அமைப்புக்கள் ஊடாக கோரியபோதும், இதுவரை அந்த விபரங்கள் கமநலசேவை நிலையங்களுக்கு வழங்கப்படவில்லை என கமநல சேவை நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது இரசாயனப் பாவனைகளை குறைத்து சேதன விவசாய முறைகளை அறிமுகப்படுத்துகின்ற போதும், விவசாயிகள் அவற்றை மீறிச்செயற்படுகின்ற நிலைமை காணப்படுவதாகவும் இவ்வாறு வயலில் காணப்படுகின்ற வைக்கோலை எரியூட்டுபவர்களுக்கு எதிராக இறுக்கமான நடவடிக்கைகளை எடுக்கின்றபோதும் எதிர் காலத்தில் இதனை நடைமுறைக்கு கொண்டு வரமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

# பாலைதீவு அந்தோனியார் ஆலய உற்சவத்தில் 30 பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுவர்

(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி பாலைதீவு வருடாந்த உற்சவத்திற்கு 30 பொலிஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாலைதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் எதிர்வரும் 21ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளது.

இந்நிலையில் அதற்கான முன்னேற்பாடுகள் தற்போது பூநகரி பிரதேச செயலாளர், வலைப்பாடு பங்குத்தந்தை, பாலைதீவு முப்பர் ஆகியோருடைய தலைமையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் பாதுகாப்புக் கடமைகளுக்காக இம்முறை 30 பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

# அம்பலப்பெருமாள் குளத்தின் கீழ் 270 ஏக்கரில் சிறுபோகச் செய்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் அம்பலப்பெருமாள் குளத்தின் கீழ் இம்முறை 270 ஏக்கர் நிலத்தில் சிறுபோக செய்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழுள்ள அம்பலப் பெருமாள் குளத்தின் கீழான காலபோக அறுவடைகள் நிறைவு பெற்று சிறுபோக செய்கைக்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இம்முறை குளத்திலுள்ள நீரின் அளவை கருத்தில் கொண்டு 270 ஏக்கர் நிலத்தில் சிறு போக செய்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குளத்தின் இன்றைய நீர் மட்டம் 08 அடி 07 அங்குலமாகக் காணப்படுவதுடன் பயிர்ச் செய்கையின் போது கால்நடைக் கட்டுப்பாடு வாய்க்கால்களைத் துப்புரவு செய்தல், நீரை சிக்கனமாகப் பயன்படுத்துதல் போன்ற விடயங்களை விவசாயிகள் கூட்டத் தீர்மானத்தின் படி உரியவாறு பின்பற்றுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை இக்குளத்தின் கீழான நன்னீர் மீனவர்களின் வாழ்வாதாரத் தொழில்கள் எந்த விதத்திலும் பாதிக்கப்படாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் துணுக்காய் பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் த.நந்தசீலன் தலைமையில் வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் கை.பிரகாஸ், துணுக்காய் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் சு.பிரபாகரன், கிராம அலுவலர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், விவசாயப் போதனாசிரியர் கே.ரி.சீலன் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-315)

# புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய உற்சவ ஏற்பாடுகள் துரிதகதியில் முன்னெடுப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தினுடைய வருடாந்த பொங்கல் உற்சவத்திற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்ந்து விரைவாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக ஆலய நிர்வாகம் தெரிவித்துள்ளது.

புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தினுடைய வருடாந்த பொங்கல் உற்சவம் எதிர்வரும் 14ஆம் திகதி வியாழக்கிழமை விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று பிராம்பு வழங்கும் வைபவம் சிறப்பாக நடைபெற்று எதிர்வரும் 21 ஆம் திகதி பௌர்ணமி திதியும் உத்தர நட்சத்திரமும் கூடிய பகல் இரவு பொங்கல் விழா வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது.

பாரம்பரிய முறைப்படி மீசாலை புத்தூர்சந்தி பண்டமரவடியில் இருந்து மடைப்பண்டம் எடுத்து வரப்பட்டு வழமை போன்று பொங்கல் விழா நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் புலம்பெயர் தேசங்களிலிருந்தும் பல இலட்சக் கணக்கான மக்கள் கலந்து கொள்வார்கள்.

இதற்கான சகல ஏற்பாடுகளும் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருவதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

தற்போது ஆலயச்சூழல் மற்றும் ஆலயத்திற்கான பிரதான வீதிகள் என்பன துப்புரவு மற்றும் புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன், குடிநீர் விநியோகம், விசேட போக்குவரத்து ஒழுங்குகள், பாதுகாப்பு ஏற்பாடுகள் கழிவகற்றல் செயல்முறைகள் ஒழுங்குபடுத்தப்பட்டமுறையில் வர்த்தக நிலையங்களை வழங்குதல் போன்ற விடயங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தற்போது பிரதேச ரீதியாக மக்கள் ஒன்றிணைந்து உற்சவத்திற்கான சகல ஏற்பாடுகளையும் முன்னெடுத்து வருவதாகவும் இதற்கு தொடர்ந்தும் சகல தரப்புக்களினதும் ஒத்துழைப்புக்களை வழங்கி உதவுமாறு ஆலய நிர்வாகம் கோரியுள்ளது. (2-315)

# பாரதம்

## புல்வாமா தாக்குதலுக்கு மூளையாகச் செயற்பட்ட முக்கிய தீவிரவாதி உட்பட 3 பேர் சுட்டுக்கொலை



(புல்வாமா)

புல்வாமாவில் சிஆர்பிஎப் வீரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு மூளையாகச் செயற்பட்ட ஜெய்ஷ் இ முகமது தீவிரவாதி உட்பட 3 பேர் என்கவுன்ட்டரில் சுட்டுக்கொல்லப்பட்டதாக பாதுகாப்புப்படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜம்மு காஷ்மீரின் புல்வாமாவின் திரால் பகுதியில் உள்ள பிங்கில்ஷ் கிராமத்தில் தீவிரவாதிகள் பதுங்கி இருக்கிறார்கள் என்ற இரகசிய தகவல் பொலிஸாருக்கு கிடைத்தது. இதையடுத்து, இராணுவத்தினர், துணை இராணுவப்படையினர், காஷ்மீர் பொலிஸார் அந்த கிராமத்தை நேற்று அதிகாலை சுற்றிவளைத்தனர்.

அப்போது, பாதுகாப்புப் படையினர் கிராமத்தைச் சுற்றி வளைத்ததை அறிந்த தீவிரவாதிகள் துப்பாக்கியால் சுட்டுத் தாக்குதல் நடத்தினர். அதற்கு பாதுகாப்புப் படையினரும் தகுந்த பதிலடி கொடுத்தனர். இரு தரப்புக்கும் இடையே நீடித்த துப்பாக்கிச் சமரில் 3 தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டதாக பாதுகாப்புப்படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இருதரப்புக்கும் இடையே நடந்த துப்பாக்கிச் சமரின் போது, காதை பிளக்கும் சத்தம் கேட்டதாகவும், ஒரு வீட்டின் மீது வெடிகுண்டு வீசப்பட்டதில் அந்த வீடு தகர்க்கப்பட்டதாகவும் கிராம மக்கள் தெரிவித்தனர்.

கொல்லப்பட்ட தீவிரவாதிகளில் ஒருவர் புல்வாமா தாக்குதலுக்கு மூளையாகச் செயற்பட்ட முடாசிர் அகமது கான் அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், சுட்டுக்கொல்லப்பட்ட தீவிரவாதிகள் 3 பேரிடம் இருந்து பயங்கர ஆயுதங்கள், துப்பாக்கிகள், வெடிபொருட்களை பாதுகாப்பு படையினர் பறிமுதல் செய்துள்ளனர்.

கடந்த மாதம் 14ஆம் திகதி புல்வாமாவில் சிஆர்பிஎப் வீரர்கள் மீது ஜெய்ஷ் இ முகமது தீவிரவாதி அதில் அகமது தற்கொலைப்படைத் தாக்குதல் நடத்தினார். இதில் 45 வீரர்கள் கொல்லப்பட்டனர்.

அதன்பின் விசாரணையை தீவிரப்படுத்திய தேசிய விசாரணை முகாமை அதிகாரிகள், தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட கார், அதன் உரிமையாளர்களைக் கண்டுபிடித்தனர். தற்கொலைப்படைத் தாக்குதலில் ஈடுபட்ட தீவிரவாதி அதில் அகமது கார் தாக்குதல் நடத்துவதற்கு 10 நாட்களுக்கு முன்புதான் அந்த காரை வாங்கியதும் தெரியவந்தது.

புல்வாமா தாக்குதலுக்கு மூளையாகச் செயற்பட்டவர் ஜெய்ஷ் இ முகமது அமைப்பைச் சேர்ந்த தீவிரவாதி முடாசிர் அகமது கான் என்கிற முகமது பாய் என்பதை புலனாய்வு அதிகாரிகள் கண்டுபிடித்தனர்.

புல்வாமா மாவட்டம், டிரால் பகுதியில் உள்ள மிர் மொஹாலா பகுதியைச் சேர்ந்த 23 வயதான அகமது கான். பட்டப்படிப்பு முடித்து, ஐடிஐ படித்த அகமது கான் புல்வாமா தாக்குதலுக்கு தேவையான காரை விலைக்கு வாங்கி, அதை அதில் அகமதுவுக்கு வழங்கினார்.

ஜெய்ஷ் இ முகமது தீவிரவாத அமைப்புக்கு அடிப்படை கட்டமைப்பு பணிகளில் அகமது கான் பணியாற்றியுள்ளார்.

கடந்த 2017 ஆம் ஆண்டிலேயே ஜெய்ஷ் இ முகமது அமைப்பில் சேர்ந்த அகமது கான், அந்த அமைப்பின் சிரேஷ்ட உறுப்பினர் நூர் முகமது தாந்த ரேயுடன் பழகினார். காஷ்மீர் பள்ளத்தாக்கு பகுதியில் தீவிரவாத செயல்கள் அதிகம் நடைபெற நூர்முகமது முக்கிய காரணமாக இருந்தவர்.

ஆனால், பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கையால் கடந்த 2017-ம் ஆண்டு டிசம்பர் மாதம் நூர் முகமது கொல்லப்பட்டார். நூர் கொல்லப்பட்டதும், கடந்த 2018, ஜனவரி 14ஆம் திகதி அகமது கான் தலைமறைவானார்.

ஆனால், தலைமறைவாக வாழ்ந்து வந்த அகமது கானுடன், தற்கொலைப்படைதாக்குதல் நடத்திய தீவிரவாதி அதில் அகமது அடிக்கடி தொடர்பில் இருந்து வந்துள்ளமை தெரியவந்துளளது. (7)

## ஆப்கான் இராணுவம் அ...
## அறுபது தலிபான் பயங்...



(காபூல்)

ஆப்கானிஸ்தானின் லாகர், வார்டாக், பாக்டிகாக் ஆகிய மாகாணங்களில் தலிபான் பயங்கரவாதிகளின் நிலைகளை குறி வைத்து வான்வழியாகவும், தரை வழியாகவும் ஆப்கான் இராணுவத்தினர் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் 60 தலிபான் தீவிரவாதிகள் உயிரிழந்துள்ளனர்.

போர்விமானங்கள் இடை

## எதியோப்பிய வி...
## 18 கனேடியர்க...
### ஊடகங்களின் மூலம் உறு...

(அடிஸ்அபாபா)

எதியோப்பியாவில் இடம்பெற்ற விமான விபத்தில் 18 கனேடியர்கள் உயிரிழந்தமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

எதியோப்பிய விமான சேவைக்கு சொந்தமான விமானம் ஒன்று நேற்று முன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) தனது பயணத்தை ஆரம்பித்த 6வது

## ஏழு பேரின் விடுதலை தொடர்பில் கருணை அடிப்படையில் சிந்திக்கவும்
### மக்கள் நீதி மய்யத் தலைவர் கமல் வேண்டுகோள்



(சென்னை)

ஏழு பேர் விடுதலை தொடர்பில் சட்டத்திற்கு அப்பால் சென்று கருணை அடிப்படையில் சிந்திக்க வேண்டும் என மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் நடிகர் கமல்ஹாசன் தெரிவித்துள்ளார்.

சென்னை ஆழ்வார் பேட்டையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனை கூறினார்.

இது தொடர்பாக மேலும் தெரிவித்த அவர், " பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேர் விடுதலையில் கருணை காட்ட வேண்டியவர்கள் கருணை காட்ட வேண்டும். 7 பேர் விடுதலை மட்டுமல்ல ஏழரை கோடி பேருக்கும் தற்போது விடுதலை தேவைப் படுகின்றது.

அதேநேரம், மதுவை ஒழிப்பதற்கு அரசு மட்டுமல்ல மக்களும் ஒத்துழைக்க வேண்டும்" என மேலும் தெரிவித்தார். (7)

## மசூத் அசார் விடுத...
## சோனியாகாந்தியும் ...
### மத்திய அமைச்சர் ஜிகேந்திரசி...

(டில்லி)

தீவிரவாதி மசூத் அசார் விடுதலைக்கு சோனியா காந்தியும் பொறுப்பேற்க வேண்டும் என்று மத்திய அமைச்சர் ஜிகேந்திர சிங் குற்றம் சாட்டியுள்ளார்.

கடந்த 1999-ம் ஆண்டில் இந்திய பயணிகள் விமானத்தை தீவிரவாதிகள் கடத்தினர். பயணிகளை மீட்க முன்னாள் பிரதமர் வாஜ்பாய், காஷ்மீர் சிறையில் இருந்த தீவிரவாதி மசூத் அசார் உட்பட 3 பேரை விடுதலை செய்தார்.

அதன்பிறகு பாகிஸ்தா





னுக்கு தப்பிச் சென்ற மசூத் அசார் ஜெய்ஷ் இ முகமது தீவிரவாத அமைப்பை தொடங்கினார். நாடாளுமன்ற தாக்குதல், பதான் கோட் விமானப் படைத் தள தாக்குதல், உரி ராணுவ முகாம் தாக்குதல், அண்மையில்

## அ.தி.மு.க-தே.மு.தி.க இணைவு
### ஒப்பந்தம் கைச்சாத்து



(டில்லி)

அ.தி.மு.க. - தே.மு.த.க. இடையேயான கூட்டணி நேற்று முன்தினம் உறுதி செய்யப்பட்டதுடன், அதற்கான ஒப்பந்தமும் கையெழுத் தானது.

அ.தி.மு.க. கூட்டணியில், தே.மு.தி.க.வை எப்படியாவது தங்கள் கூட்டணியில் சேர்க்க வேண்டும் என்பதில் அ.தி.மு.க. உறுதியாக இருந்தது.

இதனைக்கூட்டணிக் கட்சிகளான பா.ஜ.க., பா.ம.க. ஆகியனவும் தமது இணக்கத்தினைத் தெரிவித்திருந்ததால், அமைச்சர்கள் தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வந்தனர்.

4 மக்களவைத் தொகுதிகளை ஒதுக்குவதாக அ.தி.மு.க. தரப்பில் கூறப்பட்டது. ஆனால், தே.மு.தி.க. தரப்பில் 5 மக்களவை தொகுதி, ஒரு மாநிலங்களவைத் தொகுதி மற்றும் 21 சட்டப்பேரவைத் தொகுதி மற்றும் இடைத்தேர்தலில் குறிப்பிட்ட அளவு இடங்கள் கோரப்பட்டதையடுத்து இழுபறி நிலை ஏற்பட்டிருந்தது.

இதனையடுத்து இரு கட்சிகளுக்கிடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளையடுத்து அ.தி.மு.க. கூட்டணியில் தே.மு.தி.க. நேற்று முன்தினம் இணைந்தது.

தே.மு.தி.க.வுக்கு 4 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளதாக கூறப்படும் நிலையில், அ.தி.மு.க. சார்பில் ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம், துணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி ஆகியோர் குறித்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட நிலையில், உடன் பிரேமலதா மற்றும் சுதிஷ் ஆகியோர் இருந்தமை குறிப்பிடத்தக்கது.(7)

## போயிங் ரக வி...
## தரையிறக்கப்பட...

(அடிஸ் அபாபா)

எதியோப்பிய விமான போயிங் 737 மேக்ஸ்-8 விபத்துக்குள்ளாகிய நிலையில் போயிங் ரக விமானங்கள் அனைத்தையும் தரையிறக்குமாறு சீன உத்தரவிட்டுள்ளது.

சீனாவில் விமான போக்குவரத்து நிர்வாகம் நேற்று திங்கட்கிழமை இவ்வறிவித்தலை விடுத்துள்ளது.

எதியோப்பிய விபத்தை சுட்டிக் காட்டி பாதுகாப்பு கருதி இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அத்தோடு

# வெளிநாடு

## ... அதிரடித் தாக்குதல் ... பயங்கரவாதிகள் பலி!



விடாது குண்டு மழை பொழிந்ததில் பயங்கரவாதிகளின் பதுங்கு குழிகள் நிர்மூலமாக்கப்பட்டதுடன் தலிபான்களுக்கான ரேடியோ கோபுரம் மற்றும் அவர்களின் ஆயுதகிடங்குகளும் அழிக்கப்பட்டன.

நேற்று இந்த அதிரடித் தாக்குதலில் 60 பயங்கரவாதிகள் கொன்று குவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (7)

## ...விமான விபத்தில் ...கள் உயிரிழப்பு

### ...உறுதியானது

நிமிடத்தில் வெடித்து சிதறியது.

இதில் விமானத்தில் பயணித்த ஊழியர்கள் உள்ளிட்ட 157 பேர் உயிரிழந்தனர். விபத்துக்குள்ளான குறித்த விமானத்தில் 35 நாடுகளைச் சேர்ந்த பயணிகள் பயணித்ததாகவும் கூறப்படுகின்றது.

இந்தநிலையிலேயே குறித்த விமானத்தில் பயணித்த 18 கனேடியர்கள் உயிரிழந்துள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளதாக அந் நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (7)

## ...தலைக்கு ...ம் காரணம்

### ...சிங் குற்றச்சாட்டு



நிகழ்த்தப்பட்ட புல்வாமா தாக்குதல் உட்பட இந்தியாவில் பல்வேறு நாச வேலைகளை ஜெய்ஷ் இ முகமது நிகழ்த்தியுள்ளது.

இதுதொடர்பாக காங்கிரஸ் சிரேஷ்ட தலைவர்கள் கூறும்போது, மசூத் அசாரை விடுதலை செய்தது முன்னாள் பிரதமர் வாஜ்பாய் தலைமையிலான பாஜக கூட்டணி அரசின் தவறு என்று குற்றம் சாட்டினர்.

இதற்கு மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங் பதில் அளித்துள்ளார். நேற்று அவர் கூறியதாவது.

கடந்த 1999 ஆம் ஆண்டு விமான கடத்தலின் போது பயணி களை மீட்பது தொடர்பாக எதிர்க்கட்சிகளின் தலைவர்களுடன் அப்போதைய பிரதமர் வாஜ்பாய் ஆலோசனை நடத்தினார். அன்றைய காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியுடன் தான் அவர் முதலில் ஆலோசனை நடத்தினார். எதிர்க்கட்சி தலைவர்களின் ஒப்புதலின்பேரிலேயே மசூத் அசார் விடுதலை செய்யப்ப ட்டார். எனவே அவரது விடுதலைக்கு சோனியா காந் தியும் பொறுப்பேற்க வேண்டும் என குற்றம் சாட்டியுள்ளார். (7)

## ...விமானங்கள் உடனே ...பட வேண்டும்- சீனா உத்தரவு

போயிங் விமானத்தின் வர்த்தக ரீதியிலான சேவை உடனடியாக நிறுத்தி வைக்கப்பட்ட உள் ளது.

போயிங் 737 மேக்ஸ் ரக-8 விமானங்கள் அனைத்தும் தீவிரமாக பரிசோதனை செய்து அவற்றின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும். அதன் பிறகே விமான சேவை தொடங்கும் என இது தொடர்பான அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதியோப்பிய நாட்டுக்கு சொந்தமான போயிங் 737 மேக்ஸ்-8 விமானம் நேற்று முன்தினம் காலை கென்யா நோக்கி புறப்பட்டு சில நிமிடங்களில் விபத்துக்குள்ளானது. இந்த விமானத்தில் பயணித்த 157 பேரும் உயிரிழந்தனர். விபத்துக்கான காரணம் தொடர்பாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7)

## இந்தியா - பாகிஸ்தான் இடையே பதற்றம் அமெரிக்கர்கள் காஷ்மீருக்கு செல்ல வேண்டாம்

### வெள்ளை மாளிகை அறிவுரை





(வோஷிங்டன்)

இந்தியா-பாகிஸ்தான் இடையே பதற்றம் நிலவி வரும் நிலையில், இந்தியாவுக்கு செல்லும் அமெரிக்கர்கள் காஷ்மீருக்கு செல்ல வேண்டாம் என்று அமெரிக்கா அறிவுரை கூறியுள்ளது.

இந்தியா-பாகிஸ்தான் இடையே பதற்றம் நிலவி வரும் நிலையில், இந்தியாவுக்கு செல்லும் அமெரிக்கர்கள் காஷ்மீரின் பெரும்பாலான பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என்று அமெரிக்கா அறிவுரை கூறியுள்ளது.

இதுகுறித்து வெள்ளை மாளிகை செய்தி தொடர்பு தலைவர் ஸ்டீவ் ஹெர்மன் கூறியதாவது.

பயங்கரவாதமும், பதற்றமும் நிலவுவதால், காஷ்மீருக்கு செல்ல வேண்டாம். பயங்கரவாதிகள் எவ்வித எச்சரிக்கையும் விடுக்காமல் சுற்றுலா தலங்கள், பஸ், ரயில் நிலையங்கள், வணிக வளாகங்கள், அரசு கட்டடங்கள் ஆகியவற்றை குறிவைத்து தாக்கக்கூடும்.

ஆயுத மோதல் நடக்க வாய்ப்பு இருப்பதால், இந்தியா-பாகிஸ்தான் எல்லையில் இருந்து 10 கி.மீ. தூரத்துக்குள் எங்கும் செல்ல வேண்டாம் என மேற்கண்டவாறு தெரிவித்தார். (7)

## வடகொரியாவில் நாடாளுமன்றத் தேர்தல்

(பியாங்யாங்)

எந்த அதிகாரமும் இல்லாத வடகொரிய நாடாளுமன்றத்துக்கு நேற்று முன்தினம் தேர்தல் நடைபெற்றது. மக்கள் ஆர்வத்துடன் வாக்களித்தனர்.

வடகொரியாவின் தற்போதைய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னின் வம்சத்தினர்தான் அந்நாட்டை பல தலைமுறைகளாக ஆட்சி செய்து வருகின்றனர். அவர்களுக்கு அந்நாட்டு மக்கள் நம்பிக்கையாக இருப்பது கட்டாயமாகும்.

அரசையும், இராணுவத்தையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் தலைவரே நாட்டுக்குத் தேவையான அனைத்து முக்கிய முடிவுகளையும் எடுப்பார். அந்நாட்டின் நாடாளுமன்றத்துக்கு எந்த வித அதிகாரமும் கிடையாது. ஜனாதிபதியால் வரைவு செய்யப்படும் சட்டங்களுக்கு எந்தவித எதிர்ப்பும் தெரிவிக்காமல் ஒப்புதல் வழங்குவது மட்டுமே அதன் ஒரே பணி.

சுப்ரீம் மக்கள் சபை (எஸ்.பி.ஏ.) என அழைக்கப்படும் வடகொரியாவின் நாடாளுமன்றத்துக்கு 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் நடைபெறும். கடந்த 2014 ஆம் ஆண்டு மார்ச் 9 ஆம் திகதி அந்நாட்டு நாடாளுமன்றத்துக்கு தேர்தல் நடைபெற்றது. இதில் கிம் ஜாங் உன், பியாங்யாங் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.



இந்த நிலையில், நாடாளுமன்றத்தின் 5 ஆண்டு பதவிக்காலம் முடிவடைந்ததையொட்டி நேற்றுமுன்தினம் அங்கு தேர்தல் நடைபெற்றது. உள்ளூர் நேரப்படி முற்பகல் 10 மணிக்கு வாக்கு பதிவு தொடங்கியது. கிம் ஜாங் உன், பியாங்யாங் தொகுதியில் அமைக்கப்பட்டிருந்த வாக்கு சாவடிக்கு சென்று தனது வாக்கை செலுத்தினார்.(7)

## கிம் ஜாங் உன்னின் சகோதரன் நம் கொலை வழக்கு; குற்றச்சாட்டிலிருந்து இந்தோனேசியப் பெண் விடுதலை



(பியாங்யாங்)

வடகொரியா ஜனாதிபதி கிம் ஜாங் உன்-இன் சகோதரர் கிம் ஜாங் நம் கொலை செய்யப்பட்டது தொடர்பில் விசாரிக்கப்பட்டு வந்த இந்தோனேஷியா பெண் குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

மலேஷியாவின் ஷா அலாம் உயர்நீதிமன்ற நீதிபதி அஸ்மின் அரிஃப்பின் நேற்று திங்கட்கிழமை இதனை அறிவித்துள்ளார்.

அய்ஷா மீதான குற்றச்சாட்டு திரும்பப் பெறப்படுவதாக சட்டத்தரணிகள் கொடுத்த மனுவை ஏற்றுக்கொண்ட நீதிபதி ஆயிஷாவை விடுவிப்பதாக அறிவித்துள்ளார்.

கிம் ஜாங் நம் கொலை தொடர்பில் இந்தோனேசியாவை சேர்ந்த சிட்டி அய்ஷா மற்றும் வியட்நாமை சேர்ந்த டோன் தி ஹூவோங் ஆகிய இருவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

சுமார் இரண்டு வருடங்கள் இருவரும் தடுத்து வைக்கப்பட்டு மலேசிய பொலிஸாரால் விசாரிக்கப்பட்டு வந்தனர். இந்நிலையில் எதிர்பாராத விதமாக இந்தோனேஷியாவை சேர்ந்த சிட்டி அய்ஷா மீதான குற்றச்சாட்டு திரும்பப் பெறப்பட்டுள்ள நிலையில் அவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 2017 ஆம் ஆண்டு பெப்ரவரி 13ஆம் திகதி கோலாலம்பூர் அனைத்துலக விமான நிலையத்தில் கிம்மின் சகோதரர் முகத்தில் 'வி எக்ஸ்' எனப்படும் நரம்பு மண்டலத்தைத் தாக்கும் கொடிய இரசாயனத் திரவத்தை பூசியதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இதேவேளை கிம் ஜாங் நம் கொலை வழக்கில் சிக்கியுள்ள வியட்நாம் பெண் ஹூவோங் தொடர்ந்தும் விசாரிக்கப்பட்டு வருகினறமை குறிப்பிடத்தக்கது.(7)

# சீனத் தயாரிப்பு பொருட்களால் பாதுகாப்பு அச்சுறுத்தலில்லை

## அமைச்சர் அஜித் பெரேரா விளக்கம்



(கொழும்பு)

சீனத் தயாரிப்புப் பொருட்களைப் பயன்படுத்துவது தொடர்பாக இலங்கைக்கு எந்தப் பாதுகாப்புக் கரிசனையும் இல்லை என்று டிஜிற்றல் உட்கட்டமைப்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் அஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.

உலகில் சீனாவின் Huawei நிறுவனத்தின் தயா ரிப்புக்களைப் பயன்படுத்தும் 170 நாடுகளில் இலங்கை யும் உள்ளடங்கியுள்ளது. Huawei நிறுவனத்தின் நிறுவுநர் சீன இராணுவத்தில் பணியாற்றியவர் என்பதால் பல நாடுகள் Huawei நிறுவனத்தின் தயாரிப்புக் கருவிகளைப் பயன்படுத்துவது குறித்து கரிசனையை வெளியிட்டுள்ளன.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் அஜித் பெரேரா,

"வணிகமும் அரசியலும் இரண்டு வேறுபட்ட விடயங்கள். நாம் அவை இரண்டையும் கலந்து விடக்கூடாது.

Huawei தயாரிப்பு பொருட்கள் உள்ளிட்ட சீன உற்பத்திகளைப் பாதுகாப்பாகவும் வெற்றிகரமாகவும் இலங்கை பயன்படுத்துகிறது.

அரசியல் ரீதியாக நாடுகள் வெவ்வேறு நிகழ்ச்சி நிரல்களைக் கொண்டிருக்கலாம்.

Huawei நிறுவுநர் சீன இராணுவத்தில் பணி யாற்றியவர் என்று அவர்கள் கூறுகிறார்கள். அதனால் என்ன?

பல தலைமை நிறைவேற்று அதிகாரிகள் இராணுவத்தில் பணியாற்றியவர்களாக இருக்கிறார்கள். அதனால் அவர்களின் வணிக தயாரிப்புகள் இராணுவ அல்லது அரசியல் சார்ந்ததாக இருக்காது" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# கிராமத்தை நோக்கி சிறிகொத்தாவின் பயணம்





(களுத்துறை)

ஐக்கிய தேசிய கட்சியின் "கிராமத்தை நோக்கி சிறிகொத்தா" வேலைத்திட்டம் நேற்றுு முன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் களுத்துறை மாவட்டத்தில் ஆரம்பமாகியது.

கட்சியைப் பலப்படுத்தும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த வேலைத்திட்டம் எதிர்வரும் காலங்களில் கம்பஹா, காலி மாவட்டங்களினூடாக நாட்டின் அனைத்துப் பிரதேசங்களையும் நோக்கிப் பயணிக்கவுள்ளது.

நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் பாணந்துறை பிரதேசத்தில் ஆரம்பமாகிய கிராமத்தை நோக்கி சிறிகொத்தா வேலைத்திட்டம் மதுகம, பேருவளை பிரதேசங்களினூடாக களுத்துறையை வந்தடைந்தது.

இதன்போது மக்களை தெளிவுபடுத்தும் நடவடிக்கைகள், கட்சிக்கான புதிய உறுப்பினர்களை இணைத்துக்கொள்ள, மக்களின் பிரச்சினைகளை கேட்டறிதல் உள்ளிட்ட பல்வேறு வேலைத்திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டன.

இதேவேளை இந்த நிகழ்வில் உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிக்கையில்,

"ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய தேசிய முன்னணி ஆகியன இணைந்து தேசிய ஜனநாயக கூட்டமைப்பு என்ற புதிய கட்சியை உருவாக்கியுள்ளோம்.

இந்தக் கூட்டமைப்பின் ஊடாக சுதந்திரம், பொருளாதார வளர்ச்சி, நல்லிணக்கம், சுதந்திரமாக வாழ்வதற்கான உரிமை என்பன பாதுகாக்கப்படும்" என்றும் பிரதமர் ரணில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

ஐக்கிய தேசியக் கட்சி வேறு கட்சிகளுடன் இணைந்து அமைக்கவுள்ள புதிய கூட்டமைப்பின் ஊடாக நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் நல்லிணக்கம் என்பவற்றை ஏற்படுத்தவுள்ளது.

# எதிர்காலத்தை கேள்விக் குறியாக்கும் இந்த அரசை தோற்கடிக்க வேண்டும்

## தினேஷ் எம்.பி.திட்டவட்டம்



(ஹோமாகம)

நிறைவேற்று அதிகாரத்திற்கும் சட்டவாக்கத்துறைக்கும் இடையில் கடுமையான போட்டித் தன்மை மற்றும் மோதல் தன்மைகளே இன்று காணப்படுகின்றன.

இந்த இணக்கப்பாடற்ற தன்மையின் காரணமாக நாடு பாரிய விளைவுகளை எதிர்கொள்கின்றது. நாட்டின் எதிர்காலத்தை கேள்விக் குறியாக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் தோற்கடிக்கப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

ஹோமாகம நகரில் நேற்று முன்தினம் இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நிதியமைச்சர் மங்கள சமரவீரவால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு - செலவுத்திட்டம் நடுத்தர மக்களுக்கு எவ்வித நலன்களையும் பெற்றுக் கொடுக்காது எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# 24 கிலோ கேரளக்கஞ்சாவுடன் 5 பேர் கைது

(களுத்துறை)

24 கிலோ கேரளக் கஞ்சாவுடன் 5 பேர் களுத்துறை சட்டத்தை அமுல்படுத்தும் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அளுக்கம மற்றும் தர்கா டவுன் பகுதிகளைச் சேர்ந்த 23, 32, 35, 38 மற்றும் 47 வயதுடையவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் அளுத்கம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## இதயம் தரும் எச்சரிக்கை

ஒரு பெரியவர் அவருக்கு வயது 70 இருக்கும். எப்பவும் கலகலப்பாக இருப்பார். வேடிக்கையாகப் பேசுவார். 45 வயதுக்காரர் ஒருத்தர் ஒரு நாள் அவரைத் தேடிவந்தார். வந்தவர் எதையோ பறிகொடுத்தவர் போல் மிகவும் சோர்ந்து போயிருந்தார். "என்னப்பா? என்னவாச்சு உனக்கு? இந்த வயதிலேயே கவலைப்பட ஆரம்பித்து விட்டாய்" என விசாரித்தார் அந்தப் பெரியவர். இவர் மெதுவாகப் பேச ஆரம்பித்தார். "அது வந்து வேறு ஒன்றுமில்லை, 45 வயதைத் தாண்டும் போது சிலருக்கு மாரடைப்புவலி (Mild Heart attack) வரலாமென ஒரு புத்தகத்திலே போட்டிருக்கு. அதைப் படித்ததிலிருந்து எனக்கு மனது சரியில்லை. ஏனென்றால் எனக்கு அந்த வயதுதான் ஆகிறது" என்றார். இதைக் கேட்டவுடனே அந்தப் பெரியவர் வாய்விட்டுச் சிரிக்க ஆரம்பித்து விட்டார். "ஏனப்பா வராத ஒரு வியாதிக்காக நீ வருத்தப்படுகிறாய். ஆனால் நான் வந்த ஒரு வியாதிக்கே வருத்தப்படவில்லை" என்றார்.

"என்ன சொல்லுகின்றீர்கள்" என்றார் இவர் ஆச்சரியமாக! பெரியவர் சொல்ல ஆரம்பித்தார்... "தம்பி! எனக்கு இப்ப 70 வயது ஆகிறது. பத்து வருடத்திற்கு முன்னால் அதாவது என்னுடைய 60 வயதில் எனக்கு மாரடைப்பு வந்தது! வந்திட்டுப் போய்விட்டது! இப்ப நான் நல்லாத்தான் இருக்கிறேன்! ஒரு குறையும் இல்லை" என்றார். "அது எப்படி முடியும் உங்களாலே?" என்றார் இவர். "எல்லாம் நம் கையிலே தான் இருக்கு"... அப்படி நம்பிக்கையாகச் சொன்னார் பெரியவர். உடனே நம்ம 45 வயது ஆசாமி அந்தப் பெரியவருக்கு முன்னால் போய் கையைக் கட்டிக்கொண்டு மிகவும் அடக்கமாக இருந்தார். அந்தப் பெரியவரும் உபதேசம் செய்ய ஆரம்பித்துவிட்டார்.

எல்லோரும் மாரடைப்பு வந்தவுடன் வாழ்க்கையே அவ்வளவுதான் என்று நினைத்து முடிவுகட்ட ஆரம்பித்து விட்டீர்களா? அது மிகவும் தவறு. அது ஆளைக் கொல்லும் வியாதியென நினைக்க வேண்டிய தேவையில்லை! அது நமக்கு எச்சரிக்கை கொடுக்கின்ற ஒரு நோய். உங்கள் பழக்க வழக்கத்தை கொஞ்சம் சரி செய்துகொள்ள வேண்டிய நேரம் இது அப்படியென்று அவர் சொல்கின்றார் அவ்வளவுதான். அதைப் புரிந்து கொண்டு அதற்கு தகுந்த மாதிரி நடக்க ஆரம்பித்து விட்டால் அதற்குப்பிறகு அதைப்பற்றி கவலைப்பட வேண்டிய அவசியமில்லை! சரி! எப்படி நடக்க வேண்டும்? முதலில் மனதையும் மூளையையும் உற்சாகமாக வைத்திருக்கப் பழக வேண்டும். யாராவது நகைச்சுவை பண்ணும்போது தாராளமாகச் சிரிக்க வேண்டும். அதிர்ச்சி, வேதனை, கவலை, கோபம், துக்கம் இவை இல்லாத அளவிற்கு சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

அவ்வாறான நிலைமைகளைத் தவிர்க்க வேண்டும். தினமும் காலை–மாலை–இரவு மூன்று வேளையும் பிரார்த்தனை செய்யலாம். தியானம் செய்யலாம். சாப்பாடு எப்படி இருக்க வேண்டும்? எண்ணெய், மசாலா, உப்பு இவை அதிகமாக வேண்டாம். கீரை, காய்கறி, பழம் மிகவும் நல்லது. அசைவ உணவைக் குறைக்கலாம். முட்டை, ஆடு இவை இரண்டும் வேண்டாம். கொலஸ்ரோல் அளவு 200 இற்கு மேல் போகாது பார்க்க வேண்டும்.

இரவு 7 மணிக்கு மேல் திட உணவை நிறுத்தி திரவ உணவை உண்ண லாம். பகல் உணவில் வெங்காயம், கரட், பூண்டு, கறிவேப்பிலை, புதினா, கொத்துமல்லி இவற்றை கட்டாயம் சேர்க்கலாம். புகை, மது போன்ற பழக்கம் இருந்தால் அவற்றைக்கட்டுப்படுத்த வேண்டும். மாலையிலே பொட்டுக் கடலையுடன் கொஞ்சம் சீனியையும் சேர்த்து சாப்பிடால் இதயத்திற்கு நல்லது. முற்பகல் 10 மணி முதல் மாலை 5 மணிவரை உடம்புக்கும் மூளைக்கும் களைப்பை ஏற்படுத்தும் வகையில் கடுமையான வேலை எதையும் செய்ய வேண்டாம். மற்றவர்கள் செய்யும் வேலையை மேற்பார்வையிட்டால் போதும். அதிக இரைச்சல், தொடர்ச்சியான படபடப்பை ஏற்படுத்தும் வேலை இவற்றிலிருந்து விலகியிருப்பது நல்லது. கோயில் அருகில் இருந்தால் கொடிநடையாக அங்கே போயிற்று வாருங்கள். மாலை வேளையில் இசையில் உங்களுக்கு ஈடுபாடு உண்டா? இல்லையென்றால் உண்டாக்கிக் கொள்ளுங்கள்! நித்திரைக்கு முன்னர் மென்மையான இசையில் மனதை ஈடுபடுத்துங்கள்! தலைக்கு திடீரென தண்ணீரூற்றி குளிப்பது, நீச்சலடிப்பது, மூட்டை தூக்குவது என்பவை வேண்டாம். பலாப்பழம், சீதாப்பழம், முலாம்பழம் இவை ருசியாயிருப்பதற்காக அளவுக்கு மீறி சாப்பிடக்கூடாது. எமது இஷ்டத்துக்கு மருந்து சாப்பிடுவது தவறு. அடிக்கடி வைத்தியரைப்பார்த்து கேட்டு மருந்தின் அளவை கூடுமானவரைக் குறைத்து சாப்பிடுவதுதான் நல்லது.

இது மருத்துவர்கள் சொல்லியுள்ள குறிப்புக்கள். இவற்றை மனதில் வைத்து நான் நடந்து கொள்கின்றேன். அதுதான் 70 வயதிலேயும் உற்சாகமாக இருக்கிறேன் என சொல்லி முடித்தார் அந்தப் பெரியவர். இந்தச்ந சமயத்திலே பாட்டி உள்ளேயிருந்து வந்தார். அதுதான் அவர் மனைவி. "இதோ பாருங்க இன்றைக்கு மாலை உங்க பெட்டியிலிருந்து ஆயிரம் ரூபா எடுக்கப்போறேன். புடவை வாங்க வேண்டும்!" எனச் சொல்லிவிட்டு உள்ளே போய்விட்டார்கள்.


"ஏன் இப்படி சொல்லிவிட்டு போகிறார்கள்?" என்று கேட்டார் 45 வய துக்காரர். அதற்கு அந்தப்பெரியவர் விளக்கம் கொடுத்தார். 60 வயதிலே எனக்கு (Heart attack) வந்தது என்று சொன்னேன். அப்ப வைத்தியர் இனி இவருக்கு அதிர்ச்சியூட்டக்கூடிய வகையில் நடக்கக்கூடாதென என் மனைவியிடம் கண்டிப்பாகச் சொல்லியிருக்கிறார். அதற்கு முன்பெல்லாம் சொல்லாமலே எடுத்துக் கொண்டிருந்தார். அதிர்ச்சியூட்டக்கூடாது என்பதால் இப்போதெல்லாம் சொல்லிற்று எடுக்க ஆரம்பித்து விட்டாள்! என்றார் மிகவும் சாவகாசமாக!

# தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரும் ஒற்றுமையுடன் வாழ வேண்டும்

## அதுவே கூட்டமைப்பின் விருப்பம் - மாவை

(கொழும்பு)

**தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரும் ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்பதையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரும்புவதாக கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.**



வரவு-செலவுத்திட்டம் மீதான விவாதத்தில் நேற்றுப் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"கல்முனை பிரதேச சபை தொடர்பாக கடந்த நாடாளுமன்ற அமர்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்ஒருவர் கருத்து வெளியிட்டார். இதற்குப் பதிலளிக்காமல் எம்மால் இருக்க முடியாது.

இதன்காரணமாகவே அவருக்கு நாம் பதில் வழங்கினோம். இதன்போது அதற்குப் பதில் வழங்கிய குறித்த உறுப்பினர் இதுகுறித்து எம்முடன் பேச வேண்டும் எனத் தெரிவித்தார்.

அவ்வாறு பேசவேண்டுமாக இருந்தால், நாடாளுமன்றத்தில் அதுகுறித்து பேசாமல்இருந்திருக்க வேண்டும். நாம் தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரும் ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்பதையே விரும்புகின்றோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


# கொலையுடன் தொடர்புடையவர் நேற்று சடலமாக கண்டெடுப்பு

(கடுவலை)

கடுவலை - கொடலவத்தையில் நேற்றுக் காலை சடலமாக கண்டெடுக்கப்பட்டவர், சபுகஸ்கந்தவில் இடம்பெற்ற கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபரென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக பொலிஸாரால் தேடப்பட்டுவந்த சமீல பிரசாத் கருணாரட்ன (வயது-37) எனும் சந்தேக நபரே இவ்வாறு சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார். (இ-7)

# ஐம்பது அடி பள்ளத்தில் கார் கவிழ்ந்து விபத்து



(ஹற்றன்)

நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பீட்று தோட்டத்திற்கருகில் உடப்புஸ்ஸலாவ பிரதான வீதியை விட்டு விலகி சுமார் ஐம்பது அடி பள்ளத்தில் கவிழ்ந்து கார் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று முன்தினம் அதிகாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் காரில் பயணித்த மூவர் காயங்களுடன் மீட்கப்பட்டு நுவரெலியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கந்தப்பளை பகுதியிலிருந்து நுவரெலியாவை நோக்கிச் கார் கட்டுப்பாட்டையிழந்து விபத்துக்கு உள்ளாகியதாக, விசாரணைகளை மேற்கொண்டுவரும் நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# இலங்.போர்க்குற்ற விசாரணைக்கு இந்தியா ஆதரவளிக்க வேண்டும்

## ராமதாஸ் வலியுறுத்து



(சென்னை)

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் குறித்து நீதிமன்ற விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டுமென்ற இங்கிலாந்து, கனடா, ஜேர்மனி, ஆகிய நாடுகளின் வலியுறுத்தலை இந்தியாவும் ஆதரிக்க வேண்டும் என பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுநர் எஸ்.ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"இலங்கை குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் உயர்ஸ்தானிகரால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், போர்க்குற்றங்களை நிகழ்த்தியவர்களைத் தண்டிக்க இலங்கை அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்காத நிலையில், அது குறித்து சர்வதேச விசாரணைக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளது.

இது ஈழத்தமிழர்களுக்கு ஒரு சாதகமான திருப்பமாகும். அத்துடன், போர்க்குற்றங்கள் குறித்த நீதிமன்ற விசாரணையை, குறிப்பிட்ட காலவரையறைக்குள் நிறைவு செய்ய வேண்டும் என்ற இங்கிலாந்து, கனடா, ஜேர்மனி, ஆகிய நாடுகளின் வலியுறுத்தலை இந்தியாவும்ஆதரிக்க வேண்டும்" என ராமதாஸ் கோரியுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவை உயர்ஸ்தானிகரின் இலங்கை தொடர்பான அறிக்கை மீது, இந்த மாதம் 20 ஆம் திகதி விவாதம் நடத்தப்பட்டு 21 ஆம் திகதி தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

### உபத்திரவத்துக்குரிய

# ஐ.தே.கவின் ஜனாதிபதியே மைத்திரிக்கு சரியான பதிலடி

## மரிக்கார் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செய்துள்ள உபத்திரவத்துக்கு அவருக்கான வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டைத் தோற்கடிப்பது பிரதியீடாக அமையாது என கொழும்பு மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மரிக்கார் தெரிவித்தார்.




ஜனாதிபதி, ஐக்கிய தேசியக் கட்சிக்கு செய்துள்ள உபத்திரவத்துக்குரிய சரியான பதிலடி, ஐக்கிய தேசியக் கட்சியின் ஒருவரை ஜனாதிபதியாக கொண்டு வருவதேயாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 90 | 90 | 70 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 90 | 80 | 100 |
| பச்சைமிளகாய் | 140 | 200 | 200 | 180 | 200 |
| தக்காளி | 50 | 60 | 50 | 40 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 80 | 100 | 80 | 60 |
| கோவா | 30 | 30 | 50 | 60 | 60 |
| கரட் | 80 | 80 | 100 | 80 | 120 |
| பூசணி | 40 | 30 | 20 | 35 | 40 |
| புடோல் | 60 | 60 | 40 | 60 | 80 |
| வாழைக்காய் | 80 | 70 | 50 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 100 | 60 | 80 | 80 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 70 | 60 | 80 |
| பாகற்காய் | 140 | 140 | 120 | 110 | 160 |
| வெண்டிக்காய் | 60 | 110 | 60 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 50 | 50 | — | 100 |
| பயற்றங்காய் | 140 | 140 | 80 | 70 | 80 |
| லீக்ஸ் | 100 | 100 | 100 | 70 | 120 |
| பீற்றூட் | 80 | 40 | 50 | 30 | 80 |
| கறிமிளகாய் | 100 | 80 | 120 | 80 | 120 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 350 | 290 | 400 |
| போஞ்சி | 100 | 120 | 100 | 70 | 80 |
| கத்தரிதம்புள்ள | 70 | 70 | — | 50 | 100 |
| கீரை - 1பிடி | 30 | 40 | 30 | 20 | 30 |
| தேசிக்காய் | 80 | 100 | 80 | 55 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40 | 40 | 35 | 30-50 |
| இராசவள்ளி | 120 | 140 | 120 | 100 | 120 |
| வெங்காயப்பூ | 100 | 70 | 80 | 80 | 120 |
| முள்ளங்கி | 60 | 50 | 50 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 20 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 10 | 30 |
| ஈரப்பலா | — | — | 50 | 110 | 80 |

# இந்திய எல்லை அருகே பாக்கு நீரிணையில் படம் பிடித்த சீன அதிகாரிகள் குழு





(கொழும்பு)

இலங்கைக்கான சீனத் தூதுவர் செங் ஷியுவான் தலைமையிலான சீன அதிகாரிகள் குழு, தலைமன்னார் இறங்குதுறைப் பகுதி மற்றும் இந்திய எல்லைப் பகுதியிலுள்ள மணல் திட்டுகளைச் சென்று பார்வையிட்டுள்ளனர்.

சீனத் தூதுவர் செங் ஷியுவான் மற்றும் ஆறு சீனத் தூதரக அதிகாரிகள் கடந்த 5, 6 ஆம் திகதிகளில் வடக்கில் பயணம் மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது, கடந்த 6 ஆம் திகதி தலைமன்னாரிலுள்ள வடமேற்குப் பிராந்திய கடற்படைத் தலைமையகத்துக்குச் சென்றிருந்த சீன அதிகாரிகள் குழு, அங்கு இலங்கை கடற்படையினருடன் பேச்சுக்களை நடத்தியிருந்தனர்.

இதன்போது, இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலுள்ள பாக்கு நீரிணையில் இலங்கைக் கடற்படையின் பாதுகாப்பு முன்னேற்பாடுகள் குறித்து சீன அதிகாரிகள் கேட்டறிந்து கொண்டனர்.

அதையடுத்து, தலைமன்னார் இறங்குதுறைப் பகுதியைச் சென்று பார்வையிட்ட சீனத் தூதுவர் உள்ளிட்ட அதிகாரிகள், இலங்கைக் கடற்படையின் ரோந்துப் படகு மூலம், இந்திய கடல் எல்லைப் பகுதிக்கும் சென்றனர்.


இரண்டு நாடுகளுக்கும் இடையிலுள்ள எல்லையில் அமைந்துள்ள மணல் திட்டுகளையும் பார்வையிட்ட சீன அதிகாரிகள் அவற்றைப் படம்பிடித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# செக்கிளயார் வனப்பகுதியில் ஏற்பட்ட தீப்பரவலால் 100 ஏக்கர் நிலப்பரப்பு சேதம்

(தலவாக்கலை)

தலவாக்கலை - சென்கிளயார் நீர்வீழ்ச்சிக்கு அருகிலுள்ள வனப்பகுதியில் ஏற்பட்ட தீப்பரவல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் ஏற்பட்ட இந்தத் தீப்பரவலால் சுமார் 100 ஏக்கர் நிலப்பரப்பு சேதமடைந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



பிரதேசவாசிகள் மற்றும் தலவாக்கலை - லிந்துலை நகர சபையின் பணியாளர்கள் மற்றும் பொலிஸார் இணைந்து தீப்பரவலைக் கட்டுப்படுத்தியுள்ளனர்.

மத்திய மலைநாட்டில் தற்போது கடும் வரட்சியுடனான காலநிலை நிலவுகிறது. இந்நிலையில் இனந்தெரியாதவர்கள் வனப்பகுதிக்குத் தீ வைத்திருக்கலாம் எனச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. (இ-7)

# கடும் குளிரால் சிவனொளிபாத மலைக்கு யாத்திரை சென்றவர் மரணம்

(ஹற்றன்)

கடும் குளிர் காரணமாக சிவனொளிபாத மலைக்கு யாத்திரை செய்த யாத்திரிகர் ஒருவர் சிவப்பு அம்பளம் பகுதியில் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் மரணமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு மரணமடைந்தவர் பதுளை. கெந்தகொல்ல பகுதியைச் சேர்ந்த (வயது 53) ஜே.எம். தர்மகீர்த்தி என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் சிவனொளிபாத மலையைத் தரிசிப்பதற்காகச் சென்றபோது கடும் குளிர் காரணமாக நெஞ்சு வலியால் அவதியுற்று வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்கு முயற்சிகள் மேற்கொண்ட நிலையில் இறந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவரது சடலம் வைத்திய பரிசோதனைக்காக மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களாக மலையகத்தில் சில பகுதிகளில் பல்வேறு இடங்களில் கடும் வரட்சியுடன் கடும் குளிர் நிலவி வருவது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# துப்பாக்கிச்சூட்டு காயங்களுடன் சடலம் மீட்பு!

(நவகமுவ)

நவகமுவ. கொடெல்லவத்த பகுதியில் துப்பாக்கிச் சூட்டு காயங்களுடன் சடலம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

குறித்த பிரதேசத்திலுள்ள இறப்பர் தோட்டத்திலிருந்தே இந்தச்சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சடலம் இதுவரை அடையாளம் காணப்படாத நிலையில், நவகமுவ பொலிஸார் மரணம் தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

குறித்த சடலத்திற்கு அருகில் இருந்து ரி-56 துப்பாக்கிகளுக்குப் பயன்படுத்தப்படும் தோட்டாக்களும் ரவைகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. (இ-7)

# குற்றப்புலனாய்வு உயர் அதிகாரிக்கு ஐ.நா.ஆணையர் பசலெட் பாராட்டு

(ஜெனிவா)

இலங்கை குற்றப் புலனாய்வுப் பிரிவின் உயர்நிலை அதிகாரியை, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் பாராட்டியுள்ளார்.

அவரின் தைரியமான செயற்பாடுகளையே ஐ.நா. மனித உரிமைகள் பேரவை பாராட்டியுள்ளது.

இலங்கை தொடர்பில் எழுத்துமூல அறிக்கையொன்றை சமர்ப்பித்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நாயகம் மிஷேல் பசலெட், தனது அறிக்கையில் குற்றப் புலனாய்வுப் பிரிவின் குழு மோசடிகள் பிரிவின் பொறுப்பதிகாரி நிஷாந்த சில்வாவை வெகுவாகப் பாராட்டியுள்ளார்.

இடைவிடாத முயற்சி, அர்ப்பணிப்பான செயற்பாடு



மற்றும் அரசியல் குறுக்கீடுகள் இருந்தாலும் குற்றவியல் வலையமைப்புக்களை செயலிழக்கச் செய்வது போன்ற விடயங்களில் அவர் சிறப்பாக செயற்பட்டிருப்பதாக பசலெட் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவருடைய அறிக்கையின் 47 மற்றும் 49 ஆவது சரத்துக்களில் பொலிஸ் அதிகாரி சில்வாவின் பெயர் சுட்டிக்காட்டப்பட்டிருப்பதுடன், அரசியல் குழப்பத்தின் போது அவரை இடம்மாற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

"ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை, பிரகீத் எக்னெலிகொட காணாமல் போனமை, ஊடகவியலாளர் கீத் நொயர் மீதான தாக்குதல் சம்பவம், ரக்பி விளையாட்டு வீரர் தாஜுடீனின் படுகொலை உள்ளிட்ட பல்வேறு முக்கியமான வழக்குகளை சில்வா சிறப்பான முறையில் விசாரித்துள்ளார். வித்தியா படுகொலை வழக்கில் ட்ரயல் அட்பார் வழக்கு விசாரணையின் ஊடாக குற்றவாளிகளுக்கு அவர், தண்டனை பெற்றுக் கொடுத்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# யானை தாக்கி ஒருவர் பலி மேலும் ஒருவர் படுகாயம்

(புத்தளம்)

புத்தளம் - அநுராதபுரம் பிரதான வீதியின் 17 ஆம் கட்டை புத்தி தசுன்கம பகுதியில் நேற்று அதிகாலை யானை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

புத்தளம் மணல்குன்று பகுதியைச் சேர்ந்த அப்துல் ஹமீட் பௌசுல் ஹக் (வயது 39) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

புத்தளத்தில் இருந்து தம்புள்ள பகுதியை நோக்கி நேற்று அதிகாலை 3 மணியளவில் சென்றுகொண்டிருந்த கப் வாகனம் ஒன்றின் மீது, காட்டு யானை தாக்குதல் நடத்தியுள்ளது.

இதன்போது கப் வாகனத்தில் பயணித்த ஒருவர் உயிரிழந்ததுடன் சாரதி பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகிறார்.


மேலும் தாக்குதல் நடத்திய காட்டு யானை, பலத்த காயங்களுக்கு உள்ளாகி சம்பவம் நடந்த இடத்திலேயே வீழ்ந்து கிடந்துள்ளதுடன், அதற்கு சிகிச்சை அளிப்பதற்காக வடமேல் மாகாண வனவிலங்கு திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1668

### மிதுசாயினி




### தேவிகா





### மிதுனன்





### தாட்சாயினி




### கிருபா




### லிங்கநாதன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300– கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

192

## தமிழரின் விழிப்புணர்வும் எழுச்சியும் சமயம், பண்பாடு, மொழி சமூகம், பொருளாதாரம் (கி.பி. 1850-கி.பி. 1900)



> “மக்கள் யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் பிரதானமாக மாட்டு வண்டியில் மாத்திரமன்றி தபால் வண்டியிலும் அல்லது குதிரை வண்டியிலும் பயணம் செய்தனர் என்பது தெரிகின்றது. பின்வரும் காரணங்களுக்காக மக்கள் ஞாயிற்றுக் கிழமைகளில் பயணம் செய்திருக்கலாம்.தமது உற்பத்திப் பொருட்களைச் சந்தைகளில் விற்பதற்கும் பொழுது போக்குகள், கோவில் தரிசனம் போன்ற மதச் செயற்பாடுகள், விழாக்கள் என்பவற்றில் கலந்து கொள்வதற்காகவும் உறவினர்களைச் சென்று காண்பதற்கும் மக்கள் பயணம் மேற்கொண்டிருக்கலாம்”

ஞாயிறு தபால் சேவை தபால் அதிபரினால் நிறுத்தப்பட்டு பொதுமக்கள் ஞாயிறுகளில் கோப்பாய், புத்தூர், உடுப்பிட்டி, பருத்தித்துறை ஆகிய இடங்களுக்கு குதிரை வண்டிகளில் செல்லும் வகையில் ஒரு போக்குவரத்து வசதி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இதற்காகிய கட்டணம் சாதாரண கட்டணத்தின் 40 சதவீதமாகும்.

மக்கள் யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் பிரதானமாக மாட்டு வண்டியில் மாத்திரமன்றி தபால் வண்டியிலும் அல்லது குதிரை வண்டியிலும் பயணம் செய்தனர் என்பது இவ் அறிக்கை மூலம் தெரிகின்றது. பின்வரும் காரணங்களுக்காக மக்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் பயணம் செய்திருக்கலாம்.

தமது உற்பத்திப் பொருட்களைச் சந்தைகளில் விற்பதற்கும் பொழுதுபோக்குகள், கோவில் தரிசனம் போன்ற மதச் செயற்பாடுகள், விழாக்கள் என்பவற்றில் கலந்து கொள்வதற்காகவும் உறவினர்களைச் சென்று காண்பதற்கும் மக்கள் பயணம் மேற்கொண்டிருக்கலாம்.

எனவே பாலங்கள், வீதிகள், நெடுஞ்சாலைகள் என்பனவற்றுடன் ஏற்பட்ட போக்குவரத்து வசதி, தீபகற்பத்து மக்களை ஒன்றிணைப்பதற்கும் அவர்களிடையே ஒரு உறவுப் பிணைப்பு அபிவிருத்தி அடையவும் ஓரளவு காரணமாவது இருந்தது.

யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் தபால்சேவை மிகச் சிறப்பாக இருந்ததையும் ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் தபால் சேவைகள் இயங்கின என்பதையும் மேற்சொன்ன செய்திக் குறிப்பு தெரிவிக்கின்றது.

1869 மோணிங்ஸ்ராரில் வெளியான இன்னுமொரு செய்திக்குறிப்பு இவ்வாறு தெரிவிக்கின்றது.

கொழும்பிலிருந்து கண்டியூடாக யாழ்ப்பாணத்துக்கு வரும் தபால்கள், கொழும்பிலிருந்து மன்னாரூடாக யாழ்ப்பாணத்திற்கு வருமாறு மாற்றப்படும். கண்டியிலிருந்து யாழ்ப்பாணம் வரும் தபால்களும் கொழும்பினூடாக அனுப்பப்படும்.

தீபகற்பத்தினுள்ளும் இலங்கையின் ஏனைய இடங்களிலும் தந்திக் கம்பித் தொடர்புகள் அமைக்கப்பட்டன. ஆயினும் இவ்வேலை பத்தொன்பதாவது நூற்றாண்டின் பிற்பகுதி வரை பூரணமாகவில்லை. சிறந்த தபால் தந்திச் சேவைகள் யாழ்ப்பாணத் தீபகற்பத்துத் தமிழரை மட்டுமல்லாது இலங்கை முழுவதும் உள்ள தமிழரை ஒன்றிணைத்து அவர்கள் மத்தியிலான தொடர்புகளைப் பலப்படுத்தின.

மேலும் யாழ்ப்பாணத்திலிருந்த கிழக்கு மாகாணத்திற்குச் செல்லும் வீதிகள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டன. 1876 வெஸ்லியன் மிஷன் அறிக்கையின்படி யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலைக்குப் பயணம் செய்யும் கிறிஸ்தவப் பாதிரி ஒருவர் பின்வருமாறு அறிவிக்கின்றார்.

1876 பெப்ரவரி 19 ஆம் திகதி எனது மனைவியும் நானும் யாழ்ப்பாணத்திலிருந்து மாட்டு வண்டியில் புறப்பட்டு எட்டு நாள் பயணத்தின் பின்னர் திருகோணமலையை அடைந்தோம். 100 மைல்களுக்கும் அதிகமான தூரம் வீதி ஓரளவு நன்றாக இருந்தபோதும் இறுதி 50 மைல் மிகவும் கரடுமுரடாக இருந்தது.

இக்காலத்தில் கடற்பயணமும் வழக்கில் இருந்தது. தீபகற்பத்திலிருந்து பொருட்கள் படகுகள் மூலம் ஏற்றுமதி செய்யப்பட்டன. வியாபாரிகளும் அரசாங்க அதிகாரிகளும் அநேகமாக கப்பல்களில் பயணம் செய்தனர்.

உதாரணமாக புகையிரதப் பாதை ஆணையாளர்கள் லேடி கோடன் என்ற கப்பலில் வந்து காங்கேசன்துறைத் துறைமுகத்தில் இறங்கினர். இக்கப்பல் கொழும்புத் துறைமுகத்திலிருந்து 1890 ஜூலை 22 ஆம் திகதி புறப்பட்டுத் திருகோணமலை ஊடாக காங்கேசன்துறைக்கு ஜூலை 25 ஆம் திகதி வந்தது. பின்னர் தீபகற்பத்தில் உற்பத்தியான பருத்தியை ஏற்றிக் கொண்டு கொழும்பை ஜூலை 27 ஆம் திகதி சென்றடைந்தது.

தென்னிந்திய செட்டி வியாபாரிகள்தான் பிரதானமான கடலோடிகளாக இருந்தனர் போல் தோன்றுகின்றது. தமது வியாபாரத் தேவைகளுக்காக இவர்கள் மும்பையிலிருந்து ஒரு கப்பலைக் கொண்டுவந்து அதை யாழ்ப்பாணத்திற்கும் கொழும்புக்கும் இடையே பயன்படுத்தினர்.

மேற்சொன்ன போக்குவரத்து வசதிகள் அனைத்தும் யாழ்ப்பாணத் தீபகற்பத்திலும் ஏனைய தமிழ்ப் பிரதேசங்களிலும் 1990களின் ஆரம்பம் வரை வெகுவாகப் பயன்படுத்தப்பட்டன.

1900களின் ஆரம்பத்தில் புகையிரதப் பாதைகள் அமைக்கப்பட்டு வெற்றிகரமாக அறிமுகப்படுத்தப்பட்ட புகையிரத சேவை, முன்பிருந்த போக்குவரத்து வசதிகளை விட முன்னிடத்தைப் பெற்றுக் கொண்டன.

புகையிரதசேவை இயங்கத் தொடங்கியதைத் தொடர்ந்து விரைவில் லொறிகள், ஒம்னி பஸ்க் போன்ற மோட்டார் வாகனங்கள் 1920களில் அறிமுகப்படுத்தப்பட்டன.

புகையிரத சேவையே போக்குவரத்தில் ஒரு பெரும் முன்னேற்றத்தை ஏற்படுத்தியது. இச் சேவையை அறிமுகப்படுத்துவதற்குச் சனப்பெருக்கம் உட்பட்ப் பல காரணங்கள் இருந்த போதிலும் பிரதான உந்துசக்தி பொருளாதாரமாகவே இருந்தது.

(தொடரும்)

# வரவு-செலவுத்திட்டம் - 2019

## “என்டர்பிறைஸ் ஸ்ரீலங்கா – மக்களை வலுவூட்டலும் வறியோரைப் பராமரித்தலும்” 05

# தேசிய ஓய்வூதியத் திட்டம் அறிமுகப்படுத்தப்படும்

இதன் மூலம் பாதிக்கப்பட்ட ஏறக்குறைய 585,000 ஓய்வூதியம் பெறுநர்கள் நன்மையடைவர்.

உதாரணமாக கீழ்படித் தரத்தையுடைய அரசாங்க ஊழியரின் ஓய்வூதியம் மாதமொன்றுக்கு ஆகக் குறைந்தது 1,600 ரூபாவினால் அதிகரிக்கும். தரம் I ஐச் சேர்ந்த ஆசிரியர் ஒருவரின் மாதாந்த ஓய்வூதியம் 4,600 ரூபாவினாலும்அமைச்சின் செயலாளர் ஒருவரின் ஓய்வூதியம் மாதாந்தம் 12,000 ரூபாவினாலும் அதிகரிக்கும்.

இத்திருத்தமானது 25 வருட சேவை மற்றும் 2015 டிசெம்பர் 31 இற்கு முன்னரான இளைப்பாறுதலினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும்.

பொலிஸ் திணைக்களத்திற்கான கொடுப்பனவுகள் அனைத்தும் 2017 மற்றும் 2018 இல் அதிகரிக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், 20 வருடங்களுக்கு மேலாக சிறுதளவாவது அதிகரிக்கப்படாதுள்ள இராணுவத்தினரின் கொமாண்டோ கொடுப்பனவு, சீருடைக் கொடுப்பனவு, வாடகைக் கொடுப்பனவு மற்றும் நன்னடத்தைக் கொடுப்பனவு என்பன 2019 ஜூலை முதலாம் திகதியிலிருந்து அதிகரிக்கப்படும்.

i. நன்னடத்தைக் கொடுப்பனவு கீழ்வருமாறு வழங்கப்படும்

| பதக்கம் | ரூபா/நாளொன்றுக்கு |
|---|---|
| 1 ம் பதக்கம் | 3.00 |
| 2 ம் பதக்கம் | 6.00 |
| 3 ம் பதக்கம் | 9.00 |
| 4 ம் பதக்கம் | 15.00 |
| 5 ம் பதக்கம் | 20.00 |

ii. 2019 ஜனவரி மாதத்தில் வழங்கப்பட்ட வாடகை கொடுப்பனவானது 100 வீதத்தினால் அதிகரிக்கப்படும்.

iii. சீருடைப் பேணுகை கொடுப்பனவானது கீழ் வருமாறு அதிகரிக்கப்படும்

| விபரம் | ரூபா/மாதமொன்றுக்கு | |
|---|---|---|
| | தற்போதைய வீதம் | புதிய வீதம் |
| பிரிகேடியர் அல்லது சம படிநிலை மற்றும் அதற்கு மேல் | 255.00 | 600.00 |
| கர்ணல் அல்லது சம படிநிலை மற்றும் அதற்கு கீழ் | 255.00 | 525.00 |
| ஏனைய படிநிலைகள் | 170.00 | 350.00 |

iv.கொமாண்டோகொடுப்பனவு மாதாந்தம் ரூபா 1,000 இலிருந்து ரூபா 5,000 ஆக அதிகரிக்கப்படும்.

(இது இலங்கை விமானப்படை மற்றும் கடற்படையினதும் சமாந்தர படி நிலைகளுக்கும் ஏற்புடையதாகும்)

❖கௌரவ சபாநாயகர் அவர்களே, தொழில் நுட்பம் மற்றும் நவீன மயப்படுத்தலின் ஊடாக எமது அரச துறையின் தரம் மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது. இச்செயன்முறைக்கு தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

❖இலஞ்சம் அல்லது

திட்டத்தின் மூலம் மேலும் ஒத்துழைப்பு வழங்கப்படும்.

❖இலக்குகள் மீறப்படுகின்ற சந்தர்ப்பங்களை ஏற்படுத்துகின்ற திருத்தல் முறைமை மற்றும் தெளிவாக வரையறுக்கப்பட்ட நழுவல் வாசகங்களுடன் சட்ட ரீதியான அரசிறை இலக்குகளை பினிக்கும் அரசிறை விதிமுறைகளை வலுப்படுத்தும் வகையில் 2003 ஆம் ஆண்டின் 3 ஆம்இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச் சட்டம்) திருத்தப்படும்.

வேண்டும் என முன்மொழிகின்றேன்.

### சமூகப் பாதுகாப்பு வலயமைப்பு

❖துரதிர்ஷ்டவசமாக இலங்கையின் உயர் நலனோம்பல் திட்டமான "சமுர்த்தி" 1994 ஆம் ஆண்டு வறியவர்களை படிப்படியாக உயர் வருமானம் பெறும் நிலைக்கு உயர்த்தும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டாலும், அவர்களை அப்பாதிப்புகளிலிருந்து விடுபடச் செய்யவோ, அவர்களை வலுப்படுத்தவோ தவறி விட்டது. அது தற்

க்கீடு செய்யப்பட்டுள்ளது. தகுதியுள்ள அநேக குடும்பங்கள் வேறொரு அரசியல் கட்சிக்கு விசுவாசமாக உள்ளதன் காரணமாக இத்திட்டத்திலிருந்து தவிர்க்கப்பட்டுள்ளார்கள்.

❖கௌரவ சபாநாயகர் அவர்களே, "சமுர்த்தி" உதவி பெறுநர்கள் கணிசமான நிதித் திரட்டினை "சமுர்த்தி" வங்கிகள் மற்றும் ஏனைய வங்கிகளில் வைப்பிட்டுள்ளார்கள். இது அவர்களுடைய பணம், ஆகவே வங்கிகளிலுள்ள அவர்களின் சமுர்த்தி கட்டாய சேமிப்பிலிருந்து ஒருவர் ரூபா 30,000 வரை இரு தவணைகளில் ஏப்ரல் மற்றும் நவம்பர் மாதங்களில் சிங்கள / தமிழ் வருடப் பிறப்பு மற்றும் கிறிஸ்மஸ் பண்டிகைகளுக்கான அவர்களது

சுத்தப்படுத் தல், கழிவுகளை வேறுபடுத்தல் போன்றவற்றிற்காகவும் ஈடுபடுத்தப்படவுள் ளன.

❖"ஹரித்த உத்யான" (சூழல் நட்புப் பூங்காக்கள்) எனும் பசுமையானதும் தூய்மையானதுமான பொது இடங்களை உருவாக்குவதற்கு முதலீடுகளை மேற்கொள்ளவுள்ளோம். இது எமது கிராமங்களையும், நகரங்களையும் பசுமைப்படுத்துவதற்கும் சமூகங்களிடையே வலிமையான பிணைப்புக்களை உருவாக்குவதற்கும் வசதி ஏற்படுத்திக் கொடுக்கும்.

நாம் கொழும்பு மாநகர சபையுடன் இணைந்து அதன் "நகர அழகுபடுத்தல்" முயற்சியில் பங்கெடுப்போம். இதற்காக ஏற்கனவே, 1000 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

ஊழல் பற்றிய சாத்துதல்களை புலன்விசாரணை செய்வதற்கான ஆணைக்குழு பொது மக்களுக்கிடையிலான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தினை நடத்துவதன் மூலம் மேலும் வலுவூட்டப்படும்.

❖கௌரவ சபாநாயகர் அவர்களே, அரசாங்க நடபடிமுறைகளை டிஜிற்றல் மயப்படுத்தல் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டதுடன், சிறந்த ஆளுகை மற்றும் பொறுப்புக்கூறும் சமூகமொன்றினை நோக்கி இலத்திரனியல் அரச டிஜிற்றல் ஆவன முகாமைத்துவத்திற்கு முக்கியத்துவம் வழங்கும் வகையில் 2019 இல் தொடர்ந்து முன்னெடுக்கப்படும்.

இத்திட்டத்தினை செயற்படுத்துவதற்கு ரூபா 800 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.


❖ "கிராம சக்தி" உற்பத்தி கிராமங்களில் தொழில்முயற்சியாளர்கள் தொழில் நுட்ப வசதி மூலம் மேலும் ஒத்துழைப்பு வழங்கப்படுவர்.

❖ திறன் அபிவிருத்தியினூடாக இளைஞர் வலுவூட்டுகையானது "ஸ்மார்ட் ஸ்ரீலங்கா" கருத்

❖கடந்த வரவு- செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்ட புதிய நாணயச் சட்டம் தற்பொழுது வரையப்பட்டுள்ளது. எமதுநாட்டை பல தசாப்தங்களாக பீடித்திருந்த நாணய மற்றும் அரசிறை ஊதாரித்தனத்தினை இல்லாதொழிப்பதற்கு உதவுகின்ற விடயங்களை அறிமுகப்படுத்துகின்ற மிக முக்கிய சட்டவாக்கமாக இது காணப்படும்.

❖பாலின அடிப்படையிலான வரவு-செலவுத் திட்டம் - அரசாங்கத்தின் பாலின அடிப்படையிலான வரவு- செலவுத் திட்டத்தினை உறுதிப்படுத்தும் வகையில் ஆரம்ப செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், தொழிலாளர் படையில் பெண்களின் பங்களிப்பினை மேம்படுத்துவதற்காக 2018 ஆம் ஆண்டிற்குரிய வரவு- செலவுத் திட்ட அழைப்பிற்கு திருத்தமொன்று வெளியிடப்பட்டது. 12 பிரதான செயற்றிறன் குறிகாட்டிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவற்றினை அடைவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

நான்மேலும்இது தொடர்பாக ஒவ்வொரு அமைச்சின் கீழும் பாலினம் தொடர்பான தகவல் திரட்டுக்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் இணைப்பாளர்கள் இணைக்கப்பட



போது அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளதுடன், அநேகமான சமுர்த்தி அலுவலர்கள் மிகவும் வலுவான அரசியல் கட்சிகளில் இணைந்து செயற்படுகின்ற நிலை ஏற்பட்டுள்ளது.

❖ அதன்படி தகுதியுடையவர்கள் இத்திட்டத்தில் பயன்பெற முடியாத வகையிலும், தகுதியற்றவர்கள் குறிப்பிட்ட அரசியல் கட்சியொன்றுக்கு தொண்டு புரியும் உறுப்பினர்களாகவே அதிகம் காணப்படுகின்றமையால் அரசியல் இலாபங்களினூடாக இலவச மானியங்களை தொடர்ச்சியாகப் பெறுபவர்களாகவும் காணப்படுவதனால் "ஏழை தொடர்ந்தும் ஏழையாக" இருக்கும்நிலையே இதன் இறுதி முடிவாகும். இது எமது ஏழை எளியவர்களின் பொருளாதார சுதந்திரத்தினை சமரசம் செய்யும் நிலையில் அமைந்துள்ளது. ஆகவே, "சமுர்த்தி" திட்டத்தினை வெளிப்படையான அளவிடத்தக்க நியமங்களைக் கொண்டு சிறந்த முறையில் நெறிப்படுத்துவதன் மூலம் உண்மையில் சுமார் 600,000 குடும்பங்களில் அபிவிருத்தியினை ஏற்படுத்தலாம். இதற்காக ரூபா. 10,000 மில்லியன் ஒது

இலாபப் பங்காக பெற்றுக் கொள்வதற்கு அனுமதி அளிக்கின்றேன்.

❖ இலங்கை முகங்கொடுக்கும் அதிகரித்து வரும் சவாலாக முதியோர் சனத்தொகை காணப்படுகின்றது. இப்பிரச்சினைக்கு முழுமையான தீர்வினைப் பெற்றுக் கொள்ளும் முகமாக அரசாங்கம் நிலைபேறான நிதிக் கட்டமைப்பினை உள்ளடக்கிய தேசிய ஓய்வூதியத் திட்டமொன்றினை அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது.

### தூய பசுமையான மற்றும் நிலைபேறான சுற்றுச்சூழல்

❖இம்முயற்சியில் சமூகம் காத்திரமான பங்கினை வகித்தால் மட்டுமே சுற்றுச்சூழலை சிறந்த முறையில் பாதுகாக்க முடியும். அதன்படி சமூகத்தினை அடிப்படையாகக் கொண்ட "பசுமைக் கழகங்கள்" ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் மாணவர்களை உள்ளடக்கியதான தன்னார்வலர்களைக் கொண்டு அமைக்கப்படவுள்ளன.

இக்கழகங்க்ள் முக்கியமாக 2.5 மில்லியன் மரங்களை நடும் திட்டத்தினை துரிதப்படுத்துவதற்காகவும், கடற்கரைகளை

செய்யப்பட்டுள் ளது.

❖மேலும், "நில்வள எலிய" மாதிரிப் பூங்கா மற்றும் பெருவலயம் 2019 ஆம் ஆண்டு நிறைவடையவுள்ளது. ரூபா 1,000 மில்லியன் ஏற்கனவே இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

❖சதுப்பு நில கண்டல் தாவரங்கள் சூழல் அமைப்பிலுள்ள கரையோரங்களை வலிமைப்படுத்துவதுடன், பல்வேறு பிராணிகளின் முக்கியமான வாழ்விடமாகவும், காலநிலை மாற்றத்தில் தவிர்க்க முடியாத அவசியத் தேவைகளாகவும் காணப்படுகின்றன. இருந்த போதிலும் எமது கண்டல் தாவரங்கள் தற்போது வேகமாக அருகி வருகின்றன.

அதனால் நாம் கண்டல் தாவர மீள் நடுகையினை மேற்கொள்ளவுள்ளதுடன், அதன் முதற் கட்டமாக நாற்று மேடைகள் உருவாக்கப்படவுள்ளன.


❖ அனர்த்தத்தினால் அதிகம் பாதிப்படையும் என இனங்காணப்பட்ட சில மாவட்டங்களில் அனர்த்தத்திற்கு ஈடுகொடுக்கும் வீடுகள் அறிமுகப்படுத்தப்படும் அதேவேளையில் இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்குரிய வீடுகளை புனரமைத்தல் மற்றும் ஏனைய அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் என்பவற்றிற்காக ரூபா. 2,000 மில்லியன் ஒதுக் கப்படும்.

❖கௌரவ சபாநாயகர் அவர்களே, சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் வரட்சி காரணமாக உயிரிழப்பு வருமான இழப்பு மற்றும் சொத்திழப்புகளுக்கு முகங்கொடுத்துள்ளோம். (தொடரும்)

# அரச காணிகளின் முகாமைத்துவம் சார்பான சட்டங்களும் அவை செயற்படும் நடபடி முறைமைகளும் பகுதி-1

01

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



பழங்காலம் தொட்டே முழு நிலத்தினதும் உரிமை அரசுக்கே இருந்தது. காணிகளை மக்களுக்கு பகிர்ந்தளிக்கும் உரிமையும் அரசனிடத்திலேயே காணப்பட்டது. இங்கு அரசனால் காணிகளை உரித்தாக்கும் விதம் மூன்று முறைகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதலாவதாக அரசனுக்காக அல்லது அரச குடும்பத்திற்காக பல்வேறு நபர்களினாலும் நிறைவேற்றப்படுகின்ற சேவைகள், பணிவிடைகள் சார்பில் நபர்களுக்கு காணிகளைப் பகிர்ந்தளிப்பதாகும். இவை நிந்தகம் என அழைக்கப்பட்டதுடன், அந்தந்தச் சேவையின் அளவிற்கேற்ப காணிகளின் அளவு தீர்மானிக்கப்பட்டது.

பன்சலை போன்ற பௌத்த வழியாட்டுத்தலங்களுக்காக காணிகள் வழங்கப்பட்டமை இரண்டாவது முறையாகுமென்பதுடன் இது விகாரகம் என அழைக்கப்பட்டது. கோவில்களுக்காக காணிகள் வழங்கப்பட்டமை மூன்றாவது முறையாகும். இது தேவாலகம்என அழைக்கப்பட்டது. போர்த்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்திலும் கூட இலங்கையில் காணப்பட்ட சம்பிரதாய காணி முகாமைத்துவ முறையில் மாற்றம் ஏற்படாத போதிலும் பிரித்தானியர்களின் ஆட்சிக்காலத்தில் அதுவரை காணப்பட்டு வந்த காணி முகாமைத்துவ முறை முழுமையான மாற்றத்திற்கு உட்பட்டது.

**1927,1955, 1985 ஆகிய வருடங்களில்காணிஆணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டன. இவ் ஆணைக்குழு அறிக்கைகள் காணி நிர்வாகத்தில் மட்டுமல்லாது காணிப் பயன்பாடு, காணி உரிமை என்பனவற்றில் பல மாற்றங்களை உருவாக்கின.**

1927, 1955, 1985 ஆகிய வருடங்களில் காணி ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டன. இவ் ஆணைக்குழு அறிக்கைகள் இந்நாட்டின் காணி நிர்வாகத்தில் மட்டுமல்லாது காணிப் பயன்பாடு, காணி உரிமை என்பனவற்றில் அக் காலத்தில் காணப்பட்ட பிரச்சினைகளைப் பகுப்பாய்வு செய்து சிபாரிசுகளை முன்வைத்த பெறுமதி மிக்க ஆவணங்களாக கருத முடியும்.

இலங்கையின் ஆட்சியைக் கைப்பற்றிய ஆங்கிலேயர் காணிகளை தமது சொத்துக்களாக்கிக் கொண்டதோடு அக் காணி வளங்களையும் கரையோரவளங்களையும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கும் சொத்தாண்மையை நிலை நிறுத்துவதற்கும் பல அரச காணிச்சட்டங்களை இயற்றினர். இச் சட்டங்கள் காலத்திற்கு காலம் தேவைக்கேற்ப திருத்தப்பட்டுள்ளன.

### ➢அரசகாணிகள் எவை?

"அரசகாணி" எனக்கருதப்படுவது சட்டரீதியாக அரசின் ஆட்சியில் உள்ள சகல காணிகள் மற்றும் அது தொடர்பாக அல்லது அது குறித்த சகல உரிமைகள், தொடர்புகள் மற்றும் சலுகைகள் ஆகியவற்றை அரசு கொண்டிருக்கும் காணிகளாகும். இதன்படி

➢1897 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க தரவைக்காணிகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் அரசிற்கு சொந்தமான காணிகள், அரச காணிகளில் அத்துமீறல் குடியேற்றக் கட்டளைச் சட்டம் - 1840ன் இல.12 கீழ் அரசிற்கு சொந்தமான காணிகள்.

**"அரசகாணி" எனக் கருதப்படுவது சட்டரீதியாக அரசின் ஆட்சியில் உள்ள சகல காணிகள் மற்றும் அது தொடர்பாக அல்லது அது குறித்த சகல உரிமைகள், தொடர்புகள் மற்றும் சலுகைகள் ஆகியவற்றை அரசு கொண்டிருக்கும் காணிகளாகும்**

➢1931 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க காணி நிர்ணய கட்டளைச் சட்டத்தின் கீழ் அரசிற்குரித்தானவை என நிர்ணயிக்கப்பட்ட காணிகள்.

➢ 1950 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க காணி சுவீகரிப்புச் (கையேற்புச்) சட்டத்தின் கீழ் அரசினால்கையேற்கப்பட்ட காணிகள்.

➢1979 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காணி அளிப்புகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கையேற்கப்பட்ட காணிகள்.

➢நீதிமன்ற கட்டளையொன்றின் கீழ் அரசிற்கு உரித்தான காணிகள்.

➢1979 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க அரச காணிகள் (மீளக் கையேற்கும்) சட்டத்தின் படி பெறப்பட்ட காண்ிகள்.

➢காணி சீர்திருத்த (மறுசீரமைப்பு) ஆணைக்குழுவுக்குரிய காணிகள்.

➢அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்துக்கு உரித்தான காணிகள்.

➢மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு உரித்தான காணிகள்.


➢ஏனைய சகல கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள், அதிகார சபைகள் என்பவற்றுக்குரிய காணிகள் என்பன அரச காணிகளாக கருதப்படும்.

### அரச காணிகளின் பகிர்வும் பரம்பலும்

இலங்கையின் மொத்தப்பரப்பில் தனியார் காணிகள் ஏறக்குறைய18% மும்அரசகாணிகள்82% மும் உள்ளன. 82 சதவீதமான அரச காணிகளை இரண்டு வகையாக வகுக்கலாம். அவற்றுள் ஒன்று, குறிப்பிட்ட அளவு தனியார் காணிகள் காணி சீர்திருத்த ஆணைக்குழுவினால் பொறுப்பேற்கப்பட்டு அரச காணிகள் ஆக்கப்பட்டவை மற்றது காணிச் சட்டங்கள்மூலம்அரசகாணியென அடையாளம் காணப்பட்டவை அல்லது சுவீகரிக்கப்பட்டவை.

அரச காணிகள் பல்வேறு தேவைகளுக்கு பயன்படுத்தப்படுகின்றன. அவற்றுள் வனப் பாதுகாப்பு போன்றவற்றுக்கு ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகள் (reservations), துறைமுக அதிகார சபை போன்ற நிறுவனங்களுக்குப் பாரம்கொடுக்கப்பட்டவை. மக்களுக்காக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை போன்ற நிறுவனங்களுக்குப் கொடுக்கப்பட்டவை மற்றும் காணிகள் அபிவிருத்திக் கட்டளைச் சட்டம், அரச காணிகள் சட்டம் போன்ற சட்டங்களின் கீழ் மக்களுக்கு பிரித்துக்கொடுக்கப்படுவை ஆகும். இவற்றின் விபரம் அட்டவணை-1இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை-1. அரச காணிகளின் பகிர்வும் பரம்பலும்**




### அரச காணிகளின் நிர்வாகம்

#### ➢ காணி அமைச்சின் பணிகள்

நாட்டின் சமூக, பொருளாதார அபிவிருத்தியில் காணி அமைச்சு மிக முக்கிய சாதகமான தாக்கத்தைச் செலுத்துகின்றது. 1927இல் அரச பேரவையில் காணி, கமத்தொழில் விடயம் தொடர்பில் நியமிக்கப்பட்ட குழுவின் சிபாரிசுகளின் படி 1932இல் கமத்தொழில் காணி அமைச்சும் 1935இல் காணி ஆணையாளர் திணைக்களமும் நிறுவப்பட்டன.


நாட்டின் நிலைபேறான அபிவிருத்தியை நோக்காகக்கொண்டு மட்டுப்படுத்தப்பட்ட நில வளத்தை பயன்படுத்துவதற்கான திறன்முறைகளை வகுக்கும் பணிகள் காணி அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றது.

இதில் பிரதானமாக அரச காணிகளையும்தனியார் காணிகளையும் இனங்காணும் பணிகளும் காணிகளின் உரித்தை நிர்ணயம் செய்யும் பணிகளும் காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுவதுடன் அரசகாணிகளை நிர்வகிக்கும் பணிகள் காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.

(தொடரும்...)




# செலவும் சிக்கனமும்



ஒரு ஊரில் மருதலிங்கம் என்ற வியாபாரி ஒருவர் இருந்தார். மாதம் ஒரு முறை அயல்நாட்டிற்குச் சென்று பொருட்களை வாங்கி வந்து விற்பனை செய்து வந்தார்.

வியாபாரம் நன்றாக நடந்தாலும் அவருக்கு ஒரு பிரச்சினை இருந்து வந்தது.

பல மாதங்களுக்கு முன்பு அயல்நாட்டுக்குச் சென்றபோது நிறையப் பொருட்கள் வாங்கினார். கடைசியில் முக்கியமான ஒரு பொருளை வாங்குவதற்கு அவரிடம் போதுமான பணம் இல்லாமல் போய்விட்டது. அடுத்த மாதமும் அப்படியே நடந்தது. இதைச் சமாளிப்பதற்காக ஒவ்வொரு முறை பயணம் செல்லும்போதும் முன்பு கொண்டு சென்றதைவிட அதிகப் பணம் கொண்டு செல்வார். ஆனாலும் கடைசியில் பணம் போதாத நிலை ஏற்பட்டு விடும்.

பலரிடமும் தனது பிரச்சினையைக் கூறி விளக்கம் கேட்டுப் பார்த்தார். எதுவும் சரிப்படவில்லை. அந்தப் பிரச்சினையும் தீரவில்லை, சரியான விளக்கமும் கிடைக்கவில்லை!

இந்நிலையில் அந்த ஊருக்கு ஒரு ஞானி வந்தார். ஊர் மக்கள் அனைவரும் அவரிடம் தங்கள் குறைகளைச் சொல்லி ஆசி பெற்று வந்தனர். இந்த விடயம் மருதலிங்கத்தின் காதுகளை எட்டியது. அவரும் ஞானியைச் சந்தித்தார். தனது பிரச்சினையைக் கூறினார்.

அவரை, ஞானி மறுநாள் வரும்படியும் அப்படி வரும்போது ,இரண்டு வளைந்த ஓடுகளைக் கொண்டு வரும்படியும் கூறினார்.

மருதலிங்கத்துக்கு ஒன்றும் புரியவில்லை. இருந்தாலும் ஞானி கூறியபடி இரண்டு ஓடுகளுடன் மறுநாள் ஞானியைச் சந்தித்தார்.

இரண்டு ஓடுகளையும் சுவரில் சாய்வாக நிறுத்திய ஞானி, ஒரு பெரிய வாளியில் தண்ணீர் கொண்டு வரச் செய்தார். பிறகு அந்த வாளியில் இருக்கும் தண்ணீரால் ஒரு ஓடு மேல் ஊற்றி அதை முழுவதுமாக நனைக்கச் சொன்னார்.

மருதலிங்கம், வாளித் தண்ணீர் முழுவதையும் அந்த ஓட்டின் மீது ஊற்றினார். தண்ணீர் ஓட்டின் மீது ஓடி தான் சென்ற பகுதிகளை மட்டுமே நனைத்தது. இதனால் ஓடு முழுவதுமாக நனையவில்லை.

மருதலிங்கத்துக்கு இந்தச் சின்ன விடயத்தைக் கூடத் தன்னால் வெற்றிகரமாகச் செய்யமுடியவில்லையே என்ற ஆதங்கம் ஏற்பட்டது.

ஞானி மீண்டும் தண்ணீர் கொண்டு வரச் செய்தார். ஆனால் இப்போது வாளியில் இல்லாமல் ஒரு கோப்பையில் தண்ணீர் கொடுத்தார்.

மீதமிருந்த ஓட்டைக் காண்பித்து, 'இக் கோப்பை நீரால் இந்த ஓட்டை முழுமையாக நனையுங்கள் பார்ப்போம்' என்றார்.

கோப்பையில் நீர் கொஞ்சமாக இருப்பதைக் கவனித்த மருதலிங்கம், முன்பு போல முழுவதுமாக ஊற்றாமல், கைகளால் கொஞ்சம் கொஞ்சமாகத் தெளித்து ஓடு முழுவதும் நனையும்படி செய்தார். இதனால் ஓடும் முழுமையாக நனைந்தது கோப்பையில் நீரும் மிச்சமிருந்தது!

ஞானியின் முகத்தில் புன்னகை படர்ந்தது. அவர், 'இப்போது ஏன் தண்ணீரைக் கைகளால் தெளித்தீர்கள்?' என்று கேட்டார்.

'ஓடு முழுமையாக நனையத்தான்' என்றார் மருதலிங்கம்.

ஞானி, 'இப்போது தெளித்தது போலவே முன்பும் தெளித்திருக்கலாமே? ஏன் அப்போது அப்படி ஊற்றினீர்கள்?' என்று கேட்டார்.

அதற்கு மருதலிங்கம், 'அப்போது வாளியில் நிறைய நீர் இருந்தது. ஒரு ஓட்டை நனைக்க அந்த நீர் போதுமானது என்றெண்ணி ஊற்றினேன். ஆனால், இப்போதோ கோப்பையில் கொஞ்ச நீர்தான் இருந்தது. அதனால் கொஞ்சம் கொஞ்சமாகத் தெளித்தால் தானே ஓடு முழுவதுமாக நனையும்? வேறு வழியில்லையே!' என்று பதிலளித்தார்.

மீண்டும் ஞானியின் முகத்தில் புன்னகை தவழ்ந்தது...

'உங்கள் பதிலிலேயே உங்களுடைய பிரச்சினைக்கான விடையும் அடங்கியிருக்கிறது. நீங்கள் வாளி நீரைப் போல பணத்தைக் கொண்டு சென்றீர்கள். நிறையப் பணம் கைவசம் இருக்கிறது என்ற நினைப்பில் கூடுதலான பொருள்களை வாங்கினீர்கள். அதனால்முக்கியமான பொருளை வாங்குவதற்குள் பணம் தீர்ந்து போனது. அதையே நீங்கள், கோப்பையில் இருந்த நீரைப் போல தேவைக்கு அளவான பணத்தை மட்டும் கொண்டு சென்று, ஒவ்வொரு பொருள் வாங்கிய பிறகும் வைத்திருக்கும் பணம் எவ்வளவு, இன்னும் என்ன பொருள் வாங்கவேண்டும், அதற்கு மீதமிருக்கும் பணம் போதுமா? என்றெல்லாம் கணக்கிட்டுப் பொருட்களை வாங்கினால் உங்களால் முக்கியமான பொருட்களையும் வாங்கி வரமுடிந்திருக்கும்!' என்றார்.

மருதலிங்கத்தின் மனதில் தெளிவு ஏற்பட்டது. மகிழ்ச்சியுடன் ஞானிக்கு நன்றி சொல்லிவிட்டுப் புறப்பட்டார்.

## பொது அறிவு

- முருகப்பெருமானின் சமஸ்கிருத பெயர் என்ன?

**ஸ்கந்தா**

- எந்த நகரத்தில் முதல் உலகத்தமிழ் மாநாடு நடத்தப்பட்டது?

**கோலாலம்பூர் (மலேசியா)**

- தமிழ் மொழி எந்த வெட்டெழுத்துகளை அடிப்படையாக கொண்டது?

**பிராமி வெட்டெழுத்துகள்**

- எந்த நபரின் பெரும் முயற்சியில் உலக தமிழ் ஆராய்ச்சி மையம் அமைக்கப்பட்டது?

**தனிநாயகம் அடிகள் என்கிற சேவியர் தனிநாயகம் அடிகளார்**

- முதன் முதலாக எந்த மொழியில் யாரால் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டது?

**வீரமாமுனிவர் மூலம் லத்தீன்**

- ஜெலோடோலாஜி (Gelotology) என்றால் என்ன?

**சிரிப்பை பற்றிய படிப்பாகும்**

- யாரால் பல் தூரிகை கண்டுபிடிக்கப்பட்டது?

**1780 ஆம் ஆண்டில் வில்லியம் அடிஸ் அவர்களால்**

## உங்கள் குழந்தைகளுக்கு உயிர் ஆபத்தை ஏற்படுத்தும் உணவுகள்

பெற்றோர்களே எச்சரிக்கையுடன் இருங்கள்.!!!

குழந்தைப் பருவத்தில் நொறுக்குத் தீனிப் பொருட்கள் அதிகமாக சாப்பிடுபவர்களுக்கு புற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் என புற்றுநோய் சிகிச்சை நிபுணர்கள் எச்சரிக்கின்றனர் மருத்துவர்கள்.

குழந்தைகளுக்கு ஏற்படும் புற்றுநோய் குறித்து பேசும் போது நொறுக்குத் தீனி சாப்பிடும் பழக்கத்திற்கும், புற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப்பிற்கும் தொடர்பு இருப்பதாக கூறுகின்றனர்.

**நொறுக்குத்தீனி**

நொறுக்குத்தீனி சாப்பிடுவது மட்டுமே புற்றுநோய் ஏற்படுத்தும் என்று சொல்ல முடியாது, ஆனால் அதற்கான பல முக்கிய காரணங்களில் ஒன்று நொறுக்குத் தீனி என அவர்கள் கூறுகின்றனர்.



அதிக அளவில் இரசாயனம் கலக்கப்பட்டுள்ள பிஸ்கட், சிப்ஸ், பொரிக்கப்பட்ட கோழி உள்ளிட்ட இறைச்சி வகைகள் மற்றும் செயற்கை வண்ணாங்களை கொண்ட இரசாயன பழச் சாறுகள் போன்றவற்றை தொடர்ச்சியாக சாப்பிடும் குழந்தைகள், ஆரோக்கியம் இல்லாமல், இளவயதில் புற்றுநோய் நோயாளியாக மாறுவதற்கு அதிக வாய்ப்பு உள்ளது.

புற்றுநோய் வைத்திய சாலைக்கு வரும் நோயாளிகளில் சுமார் இருபது சதவீத நோயாளிகளுக்கு புற்றுநோய் வருவதற்கான முதன்மையான காரணமாக இருப்பது முறையற்ற உணவுப்பழக்கம் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்.

முயற்சியும் வாய்ப்பும் சந்திக்கும்போது அந்த இரண்டையும் அதிர்ஷ்டம் இணைத்து வைக்கிறது.
~ யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சாதகமான சூழ்நிலைகளை குழப்பி விடாதீர்கள்

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் இலங்கை அரசுக்குக் கால அவகாசம் வழுங்கக்கூடாது என்ற கோரிக்கை தமிழ்த் தரப்பிடமிருந்து வலுவடைந்து வருகிறது.

இந்த விடயத்தில் கூட்டமைப்பை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றாக நின்று காலஅவகாசம் வழுங்கக்கூடாது என்பதை வலியுறுத்துகின்றன.

இதில் கூட்டமைப்புக்குள் இடம்பெற்றிருக்கக்கூடிய புளொட், ரெலோ ஆகிய கட்சிகளும் காலஅவகாசம் வழுங்கக்கூடாது என்பதை வலியுறுத்தியுள்ளன.

நிலைமை இதுவாக இருக்கையில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் போக்கு இலங்கை அரசுக்குச் சார்பாக இருப்பதை உணர முடிகிறது.

காலஅவகாசம் என்ற விடயத்தில் மட்டுமன்றி வேறு பல சந்தர்ப்பங்களிலும் இலங்கை அரசுக்கு ஆதரவாக இருப்பதை தனது இலக்காகக் கொண்டு தமிழரசுக் கட்சி செயற்படுகின்றதேயன்றி, தமிழ் மக்களின் நலன் பற்றி அந்தக் கட்சி கவனம் எடுப்பதாகத் தெரியவில்லை.

இனப்பிரச்சினைக்கான தீர்வு அரசியலமைப்புச் சீர்திருத்தத்தினூடாக அடையப்படும் என்ற நம்பிக்கையைத் தமிழ் மக்களிடம் ஏற்படுத்தியிருந்த தமிழரசுக் கட்சி; அந்த நம்பிக்கையினூடாக தனது அரச ஆதரவை நியாயப்படுத்தியிருந்தது.

கடும் போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் துன்பத்தின் எல்லைக்குச் சென்றுள்ளனர். தம் வாழ்வை வெறுத்திருக்கக்கூடிய அவர்களின் நினைப்பு ஏதோ அரசுடன் இணைந்து கொண்டேனும் எங்களுக்கான தீர்வைப் பெற்றுக் கொண்டால் பரவாயில்லை என்பதுதான்.

ஆனால் அரசுக்கு ஆதரவு வழங்குவது தமிழரசுக் கட்சியின் நோக்கமேயன்றி தீர்வு அல்ல என்பதையும் இல்ங்கை அரசு நம்ப வைத்து ஏமாற்றுகிறது என்பதையும் நம் மக்கள் உணரத் தவறினர்.

இந்த நிலையில்தான் இலங்கை அரசுக்கான தனது ஆதரவை தமிழரசுக் கட்சி வழங்குவதற்காக ஏதோ காரணங்களை முன்வைக்கின்றது.

எனினும் இந்தக் காரணங்கள் இனியும் ஏற்புடையவை அல்ல என்பதும் தமிழரசுக் கட்சி முன்வைக்கின்ற காரணத்தை அந்தக் கட்சியுடன் சேர்ந்து கூட்டமைப்பாக இயங்குகின்ற கட்சிகளும் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதும் இப்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆக, தமிழரசுக் கட்சி நியாயமற்ற பாதையில் பயணிக்கிறதா? என்ற கோணத்தில் பார்க்க வேண்டிய தேவை இப்போது ஏற்பட்டுள்ளது.

எதுஎவ்வாறாயினும் தமிழ் மக்களுக்குச் சாதகமாக இருக்கின்ற சர்வதேச சூழலைக் கெடுத்துவிடாதீர்கள் என்பதுதான் நாம் தமிழரசுக் கட்சியிடம் விடுக்கின்ற மன்றாட்டமான கோரிக்கை.

## கல்வி மேம்பாட்டு ஆய்வு மாநாடு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணக் கல்வி மேம்பாட்டிற்கான ஆய்வு மாநாடு ஒன்றை சிவன் அறக்கட்டளை நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது.

நோக்கம் :- வட மாகாண கல்வித்துறை எதிர் நோக்கும் பிரச்சினைகளை ஆய்வுக்கு உட்படுத்தி முன்னேற்றத்திற்கான வழிமுறைகளைக் கண்டறிதல்.

சமகாலத்தில் கல்வித் துறையில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள், சவால்கள் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள், கல்வித் துறைசார் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், வைத்திய நிபுணர்கள், பொறியியல் வல்லுநர்கள், நீதித்துறை சார்ந்தோர், உள்நாடு, வெளிநாடுகளில்வாழும் புத்திஜீவிகள் போன்றோரிடமிருந்து ஆய்வுக் கட்டுரைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இறுதித் திகதி 15.03.2019.

அனுப்ப வேண்டிய முகவரி: சிவன் பவுண்டேசன், இல.52, ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம்.மின்னஞ்சல் முகவரி: sivanfound@gmail.com மேலதிக விபரங்களுக்கு பின்வரும் கைத்தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

077 511 0039, 077 041 1742 என ஏற்பாட்டுக் குழு அறிவித்துள்ளது.(இ-5)

## விமானத்தை செலுத்த சிரமமாக உள்ளது

### விபத்திற்கு முன் விமானியின் கருத்து

(அடிஸ்அபாபா)

இந்தியர்கள் உட்பட 157 பேர் பலியான எதியோப்பியா எயார்லைன்ஸின் விமானி தான் விமானத்தை செலுத்த சிரமமாக உள்ளது என்று குறிப்பிட்டு இருந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதியோப்பியாவில் அடிஸ் அபாபா நகரில் இருந்து எதியோப்பியா எயார்லைன்ஸ் விமானம் புறப்பட்டது. நகரில் இருந்து 50 கி.மீ.தொலைவில் உள்ள பிஷோப்ட் பகுதியில் விமானம் விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் விமானத்தில் பயணித்த 157 பேரும் பலியானார்கள்.

விபத்துக்கான காரணம் குறித்து உறுதியான விபரம் இதுவரை தெரிவிக்கப்படவில்லை. இந்த நிலையில் இதுகுறித்து அந்த விமானத்தை செலுத்திய விமானி சில பிரச்சினைகளை எதிர்கொண்டதாக தெரிவித்திருக்கிறார்.

இதுகுறித்து எதியோப்பியா விமான நிறுவனத்தின் CEO அதிகாரி டிவோல்ட் கூறும்போது, "விபத்துக்குள்ளான விமானத்தில் எந்த தொழில்நுட்ப குறைபாடும் ஏற்படவில்லை. விமானியின் தரவுகளும் நல்ல நிலையிலேயே உள்ளன.

விமானி விபத்துக்குள்ளாவதற்கு முன்னர், அந்த விமானத்தின் விமானி தான் விமானத்தை செலுத்துவதறகு சில பிரச்சினைகளை எதிர்கொள்கிறார் என்றும், திரும்பி வர இருப்பதாக அந்த விமானி குறிப்பிட்டு இருக்கிறார் என்று தெரிவித்துள்ளார்.(7)

## கூட்டுறவாளர் சங்கமம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபையின் கூட்டுறவாளர் சங்கமம் நிகழ்வு இன்று 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் தி.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும். (5)

## பயிற்சிநெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

வலிகாமம் கல்வி வலயத்தின் முறைசாராக் கல்வி அலகினால் நடத்தப்படும் பின்வரும் பயிற்சிநெறிகள் இம்மாதம் நடுப்பகுதியில் ஆரம்பமாகவுள்ளதால் இப்பயிற்சிநெறிகளில் கற்பதற்கு ஆர்வமுள்ள பாடசாலையை விட்டு விலகியவர்கள் விண்ணப்பப்படிவங்களை அந்தந்த நிலையங்களில் பெற்று விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

1.தொழிற்பயிற்சி நிலையம்- யா/வலி/தெல்லிப்பழை சைவப்பிரகாசவித்தியாசாலை- ஆடை வடிவமைப்பும் தயாரிப்பும் (தையல் பயிற்சி)

2.யா/வலி/இராமநாதன் கல்லூரி- அழகுக்கலை

3.யா/வலி/தாவடி இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலை- சிங்கள மொழிப் பயிற்சி

4.யா/வலி/ஆனைக் கோட்டை றோ.க.த.க. பாடசாலை- அழகுக்கலை

பயிற்சி நெறிகள் யாவும் பகுதி நேரமாக 6 மாதங்கள் நடைபெறவுள்ளன என வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா அறிவித்துள்ளார். (இ

## மருதங்கேணி வைத்தியசாலை முன் மேற்கொள்ளப்பட்ட உண்ணாவிரதம்

### தற்காலிகமாக நிறுத்தப்பட்டது

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச வைத்தியசாலையில் நியமிக்கப்பட்ட வைத்தியர்கள் சேவையில் இல்லாமையைக் கண்டித்து, நான்கு அம்சக்கோரிக்கையை முன்வைத்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வைத்தியசாலை முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட உண்ணாவிரதப் போராட்டம் நேற்று திங்கட்கிழமை நண்பகல் தற்காலிகமாக நிறைவுக்கு வந்துள்ளது.

நான்கு அம்சக் கோரிக்கையை முன்வைத்து மருதங்கேணி பிரதேச வைத்தியசாலை முன் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை பருத்தித்துறை பிரதேசசபை உறுப்பினர் வே.பிரசாந்தன் ஆரம்பித்தார். ஊர் மக்கள் பலரும் கைகோரத்து உண்ணாவிரதப் போராட்டத்தை வலுப்படுத்தினர்.

தமது கோரிக்கைகள் நிறைவேறும் வரை போராட்டம் தொடரும் என அறிவித்த நிலையில்,

நேற்று திங்கட்கிழமை மருதங்கேணி பிரதேச செயலாளர் க.கனகேஸ்வரன் போராட்டம் நடத்திவருபவர்களை நேரில் சென்று கலந்துரையாடியதைத் தொடர்ந்து உண்ணாவிரதப் போராட்டம தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தியோர் பிரதேச செயலாளரிடம் மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

இப் பிரச்சினைக்கு முப்பது நாட்களுக்குள் தீர்வு கிடைக்காதவிடத்து இப் போராட்டம் தொடரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-60)

## சட்டங்களை மீறிய வர்த்தகர்களுக்கு எதிராக 18ஆயிரம் ரூபாய் அபராதம்

(யாழ்ப்பாணம்)

பாவனையாளர் சட்டங்களை மீறிய ஊர்காவற்றுறை வர்த்தகர்களுக்கு எதிராக நேற்றைய தினம் ஊர்காவற்றுறை நீதிமன்றில் 03 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு 18 ஆயிரம் ரூபாய் தண்டப் பணம் அறிவிடப்பட்டதாக வடக்கு மாகாணப் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் பணிப்பாளர் முகமட் சாவிக் தெரிவித்தார். (5-10)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை வவுனியா பிரதேசத்தில லக்ஸபானா வீதி, தோணிக்கல் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில நானாட்டான், பெரியகரைசல் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## விவசாயிகள் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

"கமநலத்தின் பெருமை" விவசாயிகளைக் கௌரவிக்கும் வைபவம் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணியளவில் யாழ்.கே.கே.எஸ். வீதியில் உள்ள செல்வமஹால் மண்டபத்தில் கமநல அபிவிருத்தி ஆணையாளர் வீரசேகர தலைமையில் இடம்பெறும்.

வடமாகாணத்திலுள்ள 5 மாவட்டங்களையும் உள்ளடக்கியதான கமநலத்தின் பெருமை தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட சிறந்த கமக்கார அமைப்பு, சிறந்த வீட்டுத்தோட்டம், சிறந்த உழவன்/உழத்தி, சிறந்த விதை நெற் பண்ணையாளர், சிறந்த கமநல சேவை நிலையம்,சிறந்த கமநலவங்கி, சிறந்த மகளிர் நுண் நிதி ஆகிய பிரிவுகளில் நடத் தப்பட்ட போட்டிகளுக்கான பரிசில்கள் வழங்கப்படும். (5-10)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- இரக்கம் உள்ள இதயம், சிந்தனை ஆற்றல் படைத்த மூளை, வேலை செய்யக் கூடிய கைகள் ஆகிய இந்த மூன்றும் நமக்குத் தேவை.
- எழுந்திருங்கள். உழையுங்கள். இவ்வுலகில் நம் வாழ்வு எத்தனை நாள்? இந்த உலகில் தோன்றியதன் அறிகுறியாக வாழ்நாளில் ஏதேனும் சாதித்துவிட்டுச் செல்லுங்கள். அவ்வாறு செய்யாவிடில் மரங்களுக்கும், மனிதர்களுக்கும் என்ன வேறுபாடு?
- வாழ்வில் நன்மை பெற வேண்டுமானால் முதலில் வாழும் தெய்வமாகிய மனித வடிவம் கொண்ட ஒவ்வொருவருக்கும் சேவை செய்து வழிபடுங்கள்.
- தொண்டு செய்ய விரும்பினால், சுயநலம், புகழ், பெருமை, ஆசை இவற்றை மூட்டை கட்டி கடலில் எறிந்து விட்டு வாருங்கள்.
- ஏழைகள், பலமற்றவர்கள், நோயாளிகள் இவர்களிடம் சிவனைக் காண்பவனே, சிவனை உண்மையில் வணங்குபவன் ஆவான்.

# மாமனிதர் சிவநேசன் வெற்றிக்கிண்ணம் மாலைசந்தை மைக்கல் சம்பியன்


மாலைசந்தை மைக்கல்

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், தமிழ்த்தேசிய மக்கள்முன்னணியின்ஏற்பாட்டில் பாராளுமன்ற உறுப்பினர் மாமனிதர் கி.சிவநேசன் ஞாபகார்த்த கிரிக்கெட் போட்டியில் மாலை சந்தைமைக்கல் அணி கிண்ணத்தைப்பெற்றுக்கொண்டது.

5 பந்துப் பரிமாற்றங்கள் ஏழு பேரைக் கொண்ட சுற்றுப் போட்டியில் சுமார் 38 விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றின.

இறுதிப் போட்டி கடந்த 10 ஆம் திகதி மாலை சந்தை மைக் கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் மாலை சந்தை மைக்கல் அணியும் வதிரி ஸ்ரீமுருகன் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மாலை சந்தை மைக்கல் அணி 5 ஓவர்கள் நிறைவில் 49 ஓட்டங்கள் பெற்றுக் கொண்டது. 50 ஓட்டங்கள் வெற்றி இலக் காகக் கொண்டு துடுப்பெடு த்தாடிய வதிரி ஸ்ரீமுருகன் அணியில் 5 ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுகள் இழந்து 45 ஓட்டங்கள் மாத் திரம் பெற்றுக் கொண்டது.

இதன் அடிப்படையில் 5 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மாலை சந்தைமைக்கல் அணி சம்பியன் பட்டத்தை வென்றது. (சு-60)


வதிரி ஸ்ரீமுருகன்

# நல்லூர் தெற்கு ச.ச. நிலையத்தின் துடுப்பாட்ட போட்டி முடிவுகள்

நல்லூர் தெற்கு சன சமூக நிலையத்தின் 70 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு நடத்தும் வட மாகாண ரீதியான மாபெரும் மென்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் குழு C இற்கான போட்டியில் கார்மேல் போய்ஸ் அணி வெற்றி பெற்று மூன்றாவது அணியாக அரை இறுதிக்குள் நுழைந்தது.

காலிறுதிப் போட்டியில் கார்மேல் போய்ஸ் அணியை எதிர்த்து விளையாடிய அரியாலை திருமகள் அணி பத்மமுரளியின் 18 ஓட்டங்களின் உதவியுடன் ஐந்து ஓவர் நிறைவில் ஐந்து இலக்குகளை இழந்து 38 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கார்மேல் போய்ஸ் அணி றகீமின் 20 ஓட்டங்களின் உதவியுடன் 4.3 ஓவர்களில் 4 இலக்கை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கினை அடைந்தது.

குழு D இற்கான போட்டியில் மானிப்பாய் ப்றைட் அணி வெற்றி பெற்று நான்காவது அணியாக அரை இறுதிக்குள் நுழைந்தது.

காலிறுதிப்போட்டியில் மானிப்பாய் ப்றைட் அணியை எதிர்த்து விளையாடிய அளவெட்டி ப்ளூ வோரியர்ஸ் அணி கிரிசாந்தின் 26 ஓட்டங்களின் உதவியுடன் ஐந்து ஓவர் நிறைவில் ஐந்து இலக்குகளை இழந்து 41 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. செல்வன் 2 இலக்குகளை கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் ப்றைட் அணி செல்வனின் 22 ஓட்டங்களின் உதவியுடன் 4.5 ஓவர்களில் 5 இலக்கை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

முதலாவது அரையிறுதி போட்டியில் இணுவில் கலையொளி அணியினை எதிர்த்து யாழ். கார்மேல் போய்ஸ் அணியும் இரண்டாம் அரையிறுதி போட்டியில் நெல்லியடி வீனஸ் அணியினை எதிர்த்து மானிப்பாய் பிறைற் அணியும் எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மோதவுள்ளது. (ம-க)



கண்டி போகம்பறை மைதானத்தில் நடைபெற்ற தேசிய மட்ட செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வில் சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை அணியினர் வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டனர். இதே மாணவர்கள் கடந்த வருடமும் தேசிய மட்டத்தில் வெண்கலப் பதக்கத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (சு-29)















மடு வலய மட்ட பாடசாலைகளுக்கிடையிலான தடகளப்போட்டியின் இறுதி நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அடம்பன் மத்திய மகா வித்தியாலய பாடசாலை மைதானத்தில் மடு வலயக்கல்விப் பணிப்பாளர் கே.சத்தியபாலன் தலைமையில் இடம்பெற்றது. கடந்த 7 ஆம் திகதி ஆரம்பமான குறித்த போட்டியின் இறுதி நிகழ்வில் விருந்தினர்களாக வவுனியா கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதி கே.சுவர்ணராஜா, வடமாகாண உதவி கல்விப்பணிப்பாளர் ஆர்.ராஜசீலன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

மடு வலயக்கல்விப் பணிமனைக்குட்பட்ட 51 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் குறித்த போட்டியில் கலந்துகொண்டிருந்தனர்.

வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதல் மற்றும் வெற்றிக் கேடயங்கள் விருந்தினர்களால் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (சு-285)

# யாழில் எதிர்வரும் சனியன்று இடம்பெறும் மக்கள் எழுச்சிப் பேரணி முக்கியத்துவமானது

## யாழ்.பல்கலைக்கழக ஆசிரிய சங்கத்தலைவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபையின் 40ஆவது அமர்வு நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்தக் காலப்பகுதியில் தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் நிரந்தர மற்றும் பயனுறுதி வாய்ந்த தீர்வை நோக்கி நகர்த்தும் வகையில் யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் சனிக்கிழமை முன்னெடுக்கப்படும் மக்கள் எழுச்சிப் பேரணி முக்கியத்துவம் வாய்ந்தது என யாழ்ப்பாண பல்கலைக்கழக சமூகம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கத் தலைவர் திருமதி கோசலை மதன் மேலும் தெரிவித்ததாவது,

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையானது மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பேசக்கூடிய களமாகவும், தீர்வை நோக்கிச் சம்பந்தப்பட்டவர்களைத் தள்ளுகின்ற விசையாகவும் காணப்படுகிறது.

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் கவனத்திற்குப்பல்வேறு தடவைகள் கொண்டுவரப்பட்டுள்ளதோடு பல்வேறு தீர்வு யோசனைகள் முன்வைக்கப்பட்டு பரிந்துரைக்கப்பட்டும் உள்ளன.

ஆனாலும் இலங்கை மனித உரிமைகள் விவகாரங்கள் தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் சபையினால் பரிந்துரைக்கப்படும் ஆலோசனைகள் இலங்கை அரசினால் கருத்திற்கொள்ளப்பட்டு உரிய முறையில்செயற்படுத்தப்படாமையை நாங்கள் அவதானிக்கின்றோம்.

இலங்கை அரசின் இணை அனுசரணையுடன் முன்வைக்கப்பட்ட வெளிநாட்டு நிபுணர்களின் பங்களிப்புடன் கூடிய குற்ற விசாரணைகளை ஆரம்பிக்க வல்லதான நீதிமன்றப் பொறிமுறையொன்று இன்னமும் அமைக்கப்படவில்லை. மாறாக போர்க்குற்ற விசாரணை தொடர்பான செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு இலங்கை அரசு கால அவகாசம் கேட்கின்ற நிலையும், மனித உரிமைகள்சபையானது அதற்கான அவகாசத்தை வழங்குகின்ற நிலைமையுமே காணப்படுகிறது.

இந்த நிலையில்தான் பாதிக்கப்பட்ட மக்களின் குரல்களை வலுப்படுத்தி உடனடித் தீர்வையும் நீதியையும் நோக்கி அவர்களை நெறிப்படுத்தும் வகையிலே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சமூகம் மாபெரும் எழுச்சிப் பேரணி ஒன்றை வரும் 16ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடத்தத் திட்டமிட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கோரி பல்வேறு போராட்டங்கள் நாடு முழுவதும் நடத்தப்பட்டு உள்ளன. நடத்தப்பட்டும் வருகின்றன. ஆனாலும் பாதிக்கப்பட்டவர்கள் நீதியைப் பெற்றுக் கொள்வதாய் இல்லை.

எனவே பொது மக்கள், மாணவர்கள், பல்கலைக்கழக ஆசிரியர்கள், ஊழியர்கள் முதலான அனைத்து வலுமிக்க சக்திகளையும் ஒன்று திரட்டி உள்ளூரிலும், சர்வதேச தளத்திலும் நீதிக்கான செயற்பாடுகளைத் துரிதப்படுத்துவதே இந்தப் பேரணியின் நோக்கம் ஆகும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபையின் 40ஆவது அமர்வு நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்தக் காலப்படுதியில் தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் நிரந்தர மற்றும் பயனுறுதி வாய்ந்த தீர்வை நோக்கி நகர்த்த முனையும் எமது இந்த செயற்பாடு மாற்றத்தை ஏற்படுத்த வழிவகுக்கும் என யாழ் பல்கலைக்கழக சமூகம் நம்பிக்கை கொண்டுள்ளது என்றார். (ம-3)

## ஒழுக்கமான...

முறையினை கட்டியெழுப்புதல் தற்போது சவால்மிக்கதாக காணப்படுவதாக ஜனாதிபதிதெரிவித்தார்.

தற்செயலாக இடம்பெறும் சில தவறுகளுக்கு ஆசிரியர்கள் மாணவர்களுக்கு தண்டனை வழங்குவது தொடர்பில் சமூகத்தினுள் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டாலும் சிறந்ததோர் ஒழுக்கமிக்க சமூகத்தை உருவாக்குவதற்கு ஆசிரியர்களால் ஆற்றப்படும் பணிகள் அளப்பரியனவாகும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

மாத்தறை, கொகாவல மத்திய மகா வித்தியாலத்தின் நூற்றாண்டு விழாவில் நேற்று முற்பகல் கலந்து கொண்டு உரையாற்றியபோதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதனைத் தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி மாணவர்களுக்கு வீடுகளைப் போன்றே பாடசாலைகளிலும் சிறந்த வழிகாட்டலும் பாசமும் பாதுகாப்பும் கிடைக்க வேண்டியதுடன், அவ்வாறு இல்லாத சந்தர்ப்பங்களில் மாணவர்கள் போதைப்பொருள் பாவனை மற்றும் குற்றச்செயல்களில் ஈடுபடும் வாய்ப்பு அதிகரிக்கின்றது என்றும் தெரிவித்தார். (ம-3)

## ஜெனிவாவில்..

கலாநிதி ஜெஹான் பெரேரா தெரிவித்துள்ளார். இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

ஜெனிவாவில் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 40 ஆவது கூட்டத்தொடரில் அடுத்தவாரம் இலங்கை விவகாரம் ஆராய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும் போது, இலங்கை சார்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பிரதிநிதிகளாக அனுப்பப்படுகின்ற மூவர் குழுவும், வெளியுறவு அமைச்சின் சார்பில் கலந்துகொள்பவர்களும் கடந்த 2015 ஒக்டோபர் தீர்மானம் தொடர்பில் இருவேறு நிலைப்பாடுகளை முன்வைக்கவுள்ளனர்.

அதனால் இலங்கை மீதான சர்வதேச நெருக்குதல்கள் குறைவதற்கு வாய்ப்பிருப்பதாக தேசிய சமாதானப்பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஜெஹான் பெரேரா தெரிவித்திருக்கின்றார்.

இலங்கையிடமிருந்து இரு வேறுபட்ட நிலைப்பாடுகள் வெளிப்படுத்தப்படும் சூழ்நிலை ஏற்பட்டிருப்பதால் இலங்கை அரசாங்கம் ஒரு முற்றுகைக்கு உள்ளாகிய நிலையில் இருக்கின்றது என்ற எண்ணம் சர்வதேச சமூகத்திற்கு ஏற்படும்.

அத்தகைய முற்றுகை நிலையிலிருக்கும் அரசாங்கமொன்றை முன்னைய ஜெனிவா தீர்மானத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப் படுத்துமாறு அதீதமாக நெருக்குதலுக்கு உள்ளாக்க முடியாது என்றே சர்வதேசசமூகம்முடிவிற்கவருமென நம்பலாம் என்றும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார். (ம-3)

## இனப்பிரச்சினைக்கான...

என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற வரவு செலவுத்திட்ட விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய மாவை இவ்வாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில்,

ஜனாதிபதி அளித்த வாக்குறுதிக்கு அமைய புதிய அரசியல் யாப்பின் ஊடாக இனப்பிரச்சினைக்கான தீர்வு கிடைக்குமென நம்பினோம். பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் மீளக் கட்டியெழுப்பப்படும் என நம்பினோம். அதனால் வரவு-செலவுத் திட்டம் உள்ளிட்ட அரசாங்கத்தின் பல திட்டங்களுக்கு அமைச்சுப் பதவிகளை பெற்றுக் கொள்ளாமலேயே ஆதரவு வழங்கினோம். ஆனால், ஆட்சியை கலைக்க. ஜனாதிபதி எடுத்த நடவடிக்கைகள் காரணமாக பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாமல் செய்யப்பட்டது.

தேர்தல் வாக்குறுதியில் மட்டுமன்றி, ஜனாதிபதி வடக்கிற்கு விஜயம் செய்தபோது மற்றும் அவரது பல உரைகளில் புதிய அரசியலமைப்பு மற்றும் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக வாக்குறுதி வழங்கினார். ஆனால் வாக்குறுதிகளை மீறி செயற்பட்டதால், நாடு குறிப்பாக தமிழ் பேசும் மக்களே அதிகமாக பாதிக்கப்பட்டனர்.

எனினும் நாம் நம்பிக்கை இழக்கவில்லை. இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து இறுதிவரை முயற்சிப்போம். அதற்காக ஜனாதிபதி மற்றும் பிரதமரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றோம் என்றார். (ம-3)

## நுண்கடன்களை பெற்ற...

பதாக நிதி இராஜாங்க அமைச்சர் இரான் விக்ரமரட்ண பாராளு மன்றத்தில் தெரிவித்தார்.

நுண்நிதி கடனை தள்ளுபடி செய்ய தீர்மானத்தை மேற்கொண்டோம். வறட்சி நிலவிய மாவட்டங்களில் இந்த கடனைப் பெற்ற 45, 139 பேர் விடிவிக்கப்பட்டுள்ளனர். அரசாங்கம் இந்த நிதியை செலுத்தும் என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

வரவு-செலவுத்திட்டம் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் பாராளுமன்றத்தில் நேற்றுக் காலை ஆரம்பமானது. இராஜாங்க அமைச்சர் உரையாற்றுகையில் அரசியல் சதியின் காரணமாவே வரவு-செலவுத்திட்டத்தை மார்ச் மாதம் 5ஆம் திகதி சமர்ப்பிக்கவேண்டி ஏற்பட்டது. நாட்டின் நுண்நிதி பொருளாதாரத்துக்கு ஏற்படும் பாதிப்பு குறித்து நாம் கவனம் செலுத்த வேண்டும். முடிஸ் நிறுவனம் எம்மை குறைவாக தரப்படுத்தியுள்ளது. சதி இடம்பெற்ற காலப்பகுதியில் வட்டி வீதம் அதிகரித்தது. நாட்டுக்கு வந்த முதலீட்டாளர்கள் வெளியேறினர்.

சதியின் காரணமாக நாட்டுக்கு ஏற்பட்ட பாதிப்பை மதிப்பிட முடியாது. பொருளாதாரத்து ஏற்பட்ட பாதிப்பையும் மதிப்பிடமுடியாது. இலங்கைக்கு சர்வதேச ரீதியில் சுற்றுலாத்துறையில் முதலாவது இடம் கிடைத்திருந்தது என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். தொழிற்துறைக்கு வரவு - செலவுத்திட்டத்தில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

என்டபிரைஸ் ஸ்ரீலங்கா, கம்பெரலிய ஆகிய அபிவிருத்தி திட்டங்கள் ஊடாக கிராம பொருளாதாரத்தை வலுவூட்டப்படுகிறது. இதன் ஊடாக கிராமத்திலுள்ள குளங்கள், வீதிகள் அபிவிருத்தி செய்யப்படுகின்றன. சிறியளவிலான மீள்திட்ட முறைகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

வாராந்த சந்தைகள் அமைக்கப்படுகின்றன. சிறுவர் பூங்கா அனைத்து வீடுகளுக்கும் மின்சாரம் முதலியனவற்றுக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன. கம்பெரலிய திட்டத்தின் ஊடாக பாரிய வேலைதிட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. எமக்கு திட்டமிட்ட வேலைத்திட்டம் உண்டு. சிலர் இவை கனவென கூறுகின்றனர் என்றும் அவர் சுட்டிகாட்டினார். நாட்டில் பெறுமதிமிக்க கலைஞர்களுக்கு மதிப்பளித்துள்ளோம். ஜோன் டி.சில்வா கலையரங்கத்தை புனரமைப்பதற்காக 800 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளோம் என்றார். (ம-3)

## அரசியல் தீர்...

நாட்டின் எதிர்காலத்தையும் மக்களின் நலனை கருத்திற்கொண்டு மக்கள் விடுதலை முன்னணி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒன்றாக செயற்பட முடிவு செய்துள்ளதாகவும் கூறினார்.

பத்தரமுல்லயில் உள்ள மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில் கலந்துரையாடல் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது.

இதன் போதே இரு கட்சிகளும் குறித்த நிலைப்பாட்டிற்கு வந்ததாக கலந்துரையாடலை அடுத்து இடம்பெற்ற ஊடக சந்திப்பில் சம்பந்தன் கூறினார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர், சமீபத்தில் பிரதமர் மற்றும் ஜனாதிபதி ஆகியோருக்கு இடையில் நிறைவேற்று அதிகார முறை கொண்ட ஜனாதிபதி முறையை ஒழித்தல், அதிகார பகிர்வு, தேர்தல் முறையில் மாற்றம் என்பன தொடர்பாக பேச்சுக்களை நடத்தினோம்.

அதிலும் அவற்றில் இரண்டில் கால தாமதம் ஏற்பட்டாலும் அதிகார பரவலாக்கத்தை உடனடியாக முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தோம்.

அதன் பிரகாரம் குறித்த விடயத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் ஆதரவை பெற்றுக்கொள்ளும் முகமாக இந்த சந்திப்பை நடத்தியிருந்தோம். அதற்கு அவர்கள் முழு சம்மதம் தெரிவித்தார்கள் என கூறினார். (ம-3)

## ஐ.நா எச்சரித்தும் இலங்கையின்...

இந்நிலையில், இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஜெனிவா நோக்கி சென்றுள்ள குழு தமது இந்த உறுதியான நிலைப்பாட்டை வலியுறுத்தவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து ஜெனிவா சென்றுள்ள முன்னாள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் மனித உரிமைகள் நிலவரம், நல்லிணக்கம், பொறுப்புக் கூறல் விவகாரமாக ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ள கருத்துக்கள் வழமையானவை என்றும் அதுபற்றித் தமது நிலைப்பாட்டை எதிர்வரும் 22ஆம் 23ஆம் திகதிகளில் நடைபெறும் அமர்வுகளில் விளக்கவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

தாம் ஜனாதிபதியின் பிரதிநிதிகளாகச் சென்றாலும், உண்மையில் இலங்கை அரசின் பிரதிநிதிகளாகவே அங்கு விடயங்களை எடுத்துரைக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதில், எந்தவிதமான அழுத்தங்களையும் பிரயோகிக்க வேண்டாம் என்று கோரவுள்ளது. இலங்கையின் உள் விவகாரத்தை சுயமாகவே தீர்த்துக்கொள் வதற்கு வாய்ப்பளிக்க வேண்டும் எனவும் கோரவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறாயினும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்திற்கு இணை அனுசரணை வழங்கி பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ளும் நிலைப்பாட்டில் இருப்பதாக ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)


### சுபிரி வாசனா

திகதி 2019/03/11
சீட்டிழுப்பு இலக்கம் 1411
எழுத்து / வெற்றி இலக்கம்
21 10 44 51 64 55 03
தேசிய லொத்தர் சபை

### கொவிசெத

திகதி 2019.03.11
சீட்டிழுப்பு இலக்கம் 2060
ஆங்கில எழுத்து / வெல்லப்பட்ட இலக்கங்கள்
F 13 14 47 62
தேசிய லொத்தர் சபை

### மஹஜன சம்பத

திகதி 2019/03/11
சீட்டிழுப்பு இலக்கம் 3873
ஆங்கில எழுத்து / வெல்லப்பட்ட இலக்கங்கள்
C 0 9 7 2 6 0
தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்

திகதி 2019/03/11
சீட்டிழுப்பு இலக்கம் 0355
வெற்றி எழுத்து / சுப்பர் இலக்க / வெற்றி இலக்கங்கள்
H 26 02 14 19 54

## முன்னாள் கடற்...

வாக்குமூலத்தையும் பெற்றுக்கொண்டனர்.

கரன்னகொடவை கைது செய்வதற்கு இடைக்காலத் தடை உத்தரவு வழங்கிய உயர் நீதிமன்று, அவரை நேற்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகி வாக்குமூலம் கொடுக்குமாறு கட்டளையிட்டது.

உயர் நீதிமன்றக் கட்டளைக்கு அமைய நேற்றுக் காலை 9 மணிக்கு முன்னிலையான வசந்த கரன்னகொடவிடம் மாலை 5 மணிவரை குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் வாக்குமூலம் பெறப்பட்டது.

2008-2009ஆம் ஆண்டுகளில் கொழும்பின் தெஹிவளை, கொட்டாஞ்சேனை ஆகிய பிரதேசங்களில் 5 தமிழ் மாணவர்கள் உட்பட 11 பேர் வெள்ளை வானில் கடத்திச் சென்று காணாமல் ஆக்கப்பட்டனர்.

இது தொடர்பிலான வழக்கு விசாரணை கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றது. இதுவரையில் கடற்படை அதிகாரிகள் உட்பட 13 கடற்படையினர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் பலர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். சிலர் விளக்கமறியலில் உள்ளனர்.

இந்த நிலையில் சம்பவம் நடைபெற்ற காலப்பகுதியான 2008 - 2009ஆம் ஆண்டு காலப்பகுதியில் கடற்படைத் தளபதியாக விருந்த வசந்த கரன்னகொடவும் வழக்கில் 14ஆவது சந்தேகநபராகச் சேர்க்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## ரூபாய் 180....

னரால் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்தார்.

நேற்று மேற்கொள்ளப்பட்ட இந்த சுற்றிவளைப்பில், ரீ 56 ரகத்தைச் சார்ந்த சுமார் மூவாயிரம் ரவைகள், தொலைபேசி உட்பட பெருந்தொகையான பொருள்களும் கைப்பற்றப்பட்டன என அவர் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறித்த வீடு, மகந்துரே மதூஷ் என்ற பாதாள உலகக்குழு உறுப்பினரின் சகாவான கெலுமா என்ற பாதாள உலகக்குழு உறுப்பினருக்கு சொந்தமானது.

500 கோடி ரூபாய் பெறுமதியான வைரத்தைத் திருடியதாகக் கூறப்படும் கெலும் இந்திக்க என்ற சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்து, இந்த ஹெரோயின் தொடர்பில் தெரியவந்தது. இந்த சந்தேகநபர் நேற்று ஹெரோயின் கைப்பற்றப்பட்ட வீட்டில் நீண்ட காலம் வசித்து வந்துள்ளார்.

இந்த வீடானது, பாதாள உலகக் குழுவின் தலைவர்களில் ஒருவரான மகந்துரே மதூஷ் தமது பாதுகாப்பிற்காக பயன்படுத்திய வீடு என்பது விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார். (ம-3)

## தேர்தல் ஆணை...

தெரிவித்துள்ளது. இவர் இதற்கு முன்னர் மேலதிக தேர்தல் ஆணையாளராக பணியாற்றியிருந்தார்.

இதேவேளை, சமன் ஸ்ரீரத்நாயக்க, தேர்தல் ஆணைக்குழுவின் 4 ஆவது பணிப்பாளர் நாயகமாக விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## தேசிய உற்பத்தி...

யிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

கடன் சுமை, பொருளாதார நெருக்கடியின் பிடிக்குள் சிக்குப்பட்டுள்ள நடுத்தர மக்களை மேலும் நெருக்கடிகளுக்குள்ளாக்கும் வரவு - செலவு திட்டத்தை அரசாங்கம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது.

2019 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டம் தற்போது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. கவர்ச்சியான சொற்பிரயோகங்கள் மாத்திரமே அதில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

நடைமுறைக்கு பொருத்தமற்ற விடயங்கள் பல வரவு -செலவு திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. நாட்டு மக்கள் கடன் சுமைக்குள் இன்று தள்ளப்பட்டுள்ளார்கள், மறுபுறம் தேசிய உற்பத்திகளும் வீழ்ச்சியடைந்து வருகின்றது.

தற்போதைய வரவு-செலவு திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால். மக்கள் மேலும் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்படுவார்கள். ஆகவே மக்களுக்காக இந்த வரவு-செலவுத்திட்டம் தோற்கடிக்கப்படும் என அவர் மேலும் குறிப்பிட்டார். (ம-3)

## தனிநபர் மீதான...

மக்கள்மீது மேலும் வரிச்சுமையை அதிகரித்துள்ளது என மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர் விஜித்த ஹேரத் தெரிவித்தார்.

அத்துடன் கடந்த ராஜபக்ஷ அரசாங்கம் கடனிலேயே பொருளாதாரத்தை கொண்டு சென்றதாகவும் அதனை மாற்றியமைப்பதாக தெரிவித்தே இந்த அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்தது. ஆனால் அரசாங்கத்தின் வரவு-செலவு திட்டத்தை பார்க்கும் போது இந்த அரசாங்கமும் அவ்வாறே கடனில் செல்கின்றது என்பது தெளிவாகின்றது.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (ம-3)


### விரைவு பொதிகள் சேவை
### விசேட விலை குறைப்பு



(C-5632)

DELIVERY IN 3-5 DAYS

UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg

(நிபந்தனைகளுக்குட்பட்டது)

0768226240

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

V2 TRAVELS

### இருக்கும் இடத்தில் இருந்து மாதாந்தம் 50,000/= வருமானம் பெற்றுக் கொள்ளலாம்

EPL நிறுவனத்தால் உங்களுக்கு அரியதொரு வாய்ப்பு. நீங்கள் தரம் 10, O/L, A/L படித்தவராயின் இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளலாம்.

தகுதிகாண் காலத்தின் போது முதலாம் மாதம் 15,000/=, இரண்டாம் மாதம் 25,000/=, மூன்றாம் மாதம் 30,000/= பெற்றுக் கொள்ளலாம்.

தகுதிகாண் காலத்தின் பின்னர் உங்கள் வசிப்பிடத்திற்கு அருகாமையில் நிரந்தர வேலைவாய்ப்பினையும் 50,000/= மாத வருமானத்தையும் பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்பிக்க ஆர்வமுள்ளவர்கள் உங்களுடைய முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கத்தினை இவ் எண்ணிற்கு SMS செய்யவும். - 077 517 9034

மேலதிக விபரத்திற்கு

077 985 8580

(7946)

### வேலை வாய்ப்பு

1. Room Boy/Waiters

N.B இத்துறையில் முன்னனுபவம் அல்லது அடிப்படைப் படிப்பு அவசியம்.

SUBHAS HOTEL
49,VICTORIA ROAD, JAFFNA
T.P: 077 727 8630, 021 222 4923

(7908)



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா?
நாம் மீட்டுத் தருகின்றோம்



### றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623

(7945)

### சுங்கத் திணைக்கள இந்து ஊழியர் சங்கம்
### பொன்விழாக் கட்டுரைப் போட்டி

இலங்கைச் சுங்கத் திணைக்கள இந்து ஊழியர் சங்கத்தின் 50 ஆண்டு நிறைவைக் கொண்டாடும் முகமாக அகில இலங்கை ரீதியில் இக்கட்டுரைப் போட்டி நடத்தப்படுகிறது.

**போட்டி தொடர்பான விபரங்கள்**

01. இக்கட்டுரைப் போட்டியில் பாடசாலை மாணவர்கள் மாத்திரமே பங்கு பற்றலாம்.
02. போட்டிப் பிரிவுகள்:
    மேற்பிரிவு - ஆண்டு 12, 13 (க.பொ.த. உயர்தர) மாணவர்கள்
    மத்தியபிரிவு - ஆண்டு 9, 10, 11 மாணவர்கள்
    ஆரம்பப் பிரிவு - ஆண்டு 6, 7, 8 மாணவர்கள்
03. கட்டுரைத் தலைப்புக்கள்:
    மேற்பிரிவு - எனது ஆளுமை விருத்தியில் சைவத்தின் பங்களிப்பு. (750 சொற்களுக்கு மேற்படாமல்.)
    மத்தியபிரிவு - எனது சமூக வாழ்வில் சைவத்தின் பங்களிப்பு. (600 சொற்களுக்கு மேற்படாமல்.)
    ஆரம்பப் பிரிவு - சைவ வாழ்வில் நான் பெறும் மனமகிழ்ச்சி. (150 சொற்களுக்கு மேற்படாமல்.)
04. கட்டுரைகள் சொந்தக் கையெழுத்தில் எழுதப்பட்டு, பாடசாலை அதிபர் அல்லது ஆசிரியரால் கையொப்பம் இடப்பட்டு, பாடசாலை முத்திரை இடப்பட்டு உறுதி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
05. போட்டியாளரது பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பன தெளிவாகத் தனியொருதாளில் எழுதப்பட்டு கட்டுரையுடன் இணைக்கப்படல் வேண்டும். கட்டுரைத் தாள்களில் போட்டியாளர் விபரம் காணப்படலாகாது.
06. கட்டுரை சொந்த ஆக்கமாக இருத்தல் வேண்டும்.
07. போட்டியில் நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானதும் முடிவானதுமாகும்.
08. கட்டுரைகள் 15.04.2019 இற்குமுன்னர் கிடைக்கக் கூடியதாக S.Sakthitharan, Superintendent of Customs (Secretary, Customs Hindu Officers' Union) Customs Headquarters, No.40 Main Street, Colombo 11 என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.
09. போட்டி நிபந்தனைகளுக்கு உட்படாத கட்டுரைகள் நிராகரிக்கப்படும்.
10. பரிசில்கள் பொன்விழா அன்று வழங்கப்படும்.

செ.சக்திதரன்,
செயலாளர்
சுங்கத் திணைக்கள இந்து ஊழியர் சங்கம்

(7334)

### பதவி வெற்றிடம்

நீங்கள் O/L, A/L படித்துவிட்டு வேலையின்றி இருக்கிறீர்களா? கவலையை விடுங்கள். இன்றே! எம்முடன் இணையுங்கள். கைநிறைய உழைப்பதற்கு நாம் உங்களுக்கு உதவுகின்றோம்.

✦ சர்வதேச தரத்திலான கம்பனியில் பணிபுரியலாம். ✦ பலதரப்பட்ட வேலைவாய்ப்பு. ✦ வெளிநாடு செல்லும் வாய்ப்பு. ✦ தங்குமிட, உணவு வசதி உண்டு. ✦ வடமாகாணத்தினருக்கு முன்னுரிமை.

தொடர்புகளுக்கு: 077 123 7692

(7735)

### Vacancies

Job! Job! Job!... 076 770 7759, 077 999 4807

நீங்கள் O/L பயின்றவரா? இவ்விலக்கங்களுக்கு பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கத்தினை SMS செய்து உங்கள் பதிவுகளை உடன் பதிவு செய்க. நாடு முழுவதும் 40 பேருக்கு முன்னுரிமை.



● நிர்வாக அதிகாரி
● செயல்திட்ட அதிகாரி
● மேற்பார்வையாளர்
● அலுவலக உதவியாளர்

■ தங்குமிட வசதியுடன் பயிற்சி வழங்கப்படும்.
■ பயிற்சிக் காலம் 15,000/= - 20,000/=
■ பின்னர் குறைந்தது 45,000/=

(7940)

### ஸ்ரீ கொல்லிமலை மாந்திரீக ஜோதிடர்
### மாந்திரீக சித்தர் யாழ்ப்பாணம் வருகை



ஜாதகம், குறிப்பு, கைரேகை ஆண்,பெண் வசியம். தொழில் கணவன் மனைவி பிரபலம் மற்றும் குழந்தை பாக்கியம், வெளிநாட்டுயோகம் ஆகிய அனைத்தும் சிறந்த முறையில் சொல்லப்படும்.



நேரம் காலை 8.00 மணிமுதல் மாலை 8.00 மணி வரை
076 495 1787, 077 897 1672
யாழ்ப்பாணம் ஓட்டுமடம் வீதி (கொழும்பு வேர்க் ஷாப் எதிரில்)

(7815)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.03.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.